கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
IMPORT & EXPORT
290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4276 Fax: 0181-903 0827
Mobile: 0958 246580

France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு
பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 3 01 - 07 ஜனவரி 1998 முழக்கம்: 155

புதிய நிர்வாகத்தில்
மளிகைப் பொருட்கள் யாவும் மலிவு விலையில்
NEW (SRI) KANNAN STORES
249, Fore street, Edmonton, LONDON, N18 2TY
Tel: 081- 884 4979

# ஜெயந்தியாய இராணுவமுகாம் அழிப்பு

## ★ உயிர்தப்ப இராணுவம் சிதறி ஓடியது
## ★ ஆயுதங்களுடன் புலிகள் தளம் திரும்பினர்

(27.12.97)

மட்டக்களப்பிற்கு மேற்கே அம்பாறைக்கு அருகே அமர்ந்திருந்த 'ஜெயந்தியாய' இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் சிறப்பு படையணிகளால் தாக்கி கைப்பற்றப்பட்டது. அதிகாலை 6.45 மணியளவில் ஆரம்பமான புலிகளின் அதிரடித் தாக்குதல் 30 நிமிட நேரம்வரை இடம் பெற்றுள்ளது. முகாமை கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அங்கிருந்த ஆயுத தளவாடங்களை அப்புறப்படுத்தியதுடன் அப் பகுதியினைவிட்டு வெளியேறி விட்டனர்.

இத் தாக்குதலிலிருந்து தம் உயிரைப் பாதுகாப்பதற்காக இராணுவத்தினர் அண்மையில் உள்ள காட்டுப் பகுதிக்கு தப்பி ஓடிவிட்டனர். இராணுவத் தரப்பில் மிகக் குறைவான உயிர்ச்சேதம் ஏற்பட்டபோதும், விடுதலைப் புலிகளினால் பல பெறுமதியான ஆயுத தளவாடங்களும் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் 5 பேர் வீரச்சாவை தழு

(☞ 2ம் பக்கம்)

## விடுதலைப் புலிகளை நிராகரிக்க நாங்கள் யார்? அதைத் தீர்மானிப்பவர்கள் தமிழ் மக்களே!

### - பாரதீய ஜனதா கட்சி -

'பாரதீய ஜனதா கட்சி விடுதலைப் புலிகளுக்கு எதிரான அல்லது ஆதரவான கட்சியல்ல. அதன்ன அங்கு வாழும் தமிழ் மக்கள்தான் தீர்மானிப்பார்கள். ஆனால் சிறீலங்காவில் நடப்பவற்றைப் பற்றி இந்தியா அக்கறை கொள்ளும்' என பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

பாரதீய ஜனதா கட்சி தமிழ் மக்கள் துன்புறுத்தப்படாது அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வதை உறுதிப்படுத்தும்

(☞ 2ம் பக்கம்)

## காலி கடற்படைத்தளம் அருகில் பாரிய குண்டு வெடிப்பு

காலியிலுள்ள கடற்படைத் தளத்திற்கு மிகவும் சமீபமாக பாரிய வாகனக் குண்டுவெடிப்புச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது. இதனால் அருகில் இருந்த கட்டடங்களுக்கும் பெருஞ்சேதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 28-ம் திகதி அதிகாலை 2.30 மணியளவில் இக் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்வதற்கு சற்று முன்னர்தான் சிறீ

(☞ 2ம் பக்கம்)

## கிளிநொச்சியில் உயரதிகாரி உட்பட 7 சிப்பாய்கள் பலி

### சிறுத்தைப் படையணியின் 6 மணிநேர சமர்

கிளிநொச்சி மூன்றாம் வாய்க்கால், தென்மராட்சி உசன் ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் சிறப்புப் படையணிகள் கடந்தவாரம் மேற்கொண்ட தாக்குதல்களில் ஒரு இராணுவ மேயர் உட்பட 7 சிப்பாய்கள் பலியாகி மேலும் பல சிப்பாய்கள் படுகாயமடைந்துள்ளனர். கிளிநொச்சித் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் சிறுத்தைப் படைப்பிரிவினர் சுமார் 6 மணி நேரமாக கடும் சமர் புரிந்துள்ளனர்.

(☞ 2ம் பக்கம்)

### ஆனந்தசங்கரியின் ஈழமுரசிற்கான சிறப்புப் பேட்டி

(☞ 4ம் பக்கம்)




அமரர் எம்.ஜி.ஆரின் 10ம் ஆண்டு நினைவை முன்னிட்டு ஜேர்மனியில் எம்.ஜி.ஆர். அரங்கில் நடந்த புனர்வாழ்வுக் கலைத்தென்றலில்...

## கொல்லப்பட்ட ராசீக் குழுவினருக்கு லான்ஸ் கோப்ரல் பதவி!

சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து மட்டக்களப்பில் செயற்படும் ராசீக் கும்பலின் மீது கடந்த வெள்ளியன்று (26-ம் திகதி) விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியபோது அக்கும்பலைச் சேர்ந்த 6 உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஏறாவூர் - புன்னைக்குடாப் பகுதியில் விடுதலைப் புலிகளின் மீது தாக்குதல் நடாத்தவென இக் கும்பல் பதுங்கியிருந்த போதே புலிகள் அவர்கள் மீது அதிரடித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். பலியானவர்கள் போக மேலும் சிலரும் படுகாயப்படுத்தப்பட்டதுடன் ஆயுத

(☞ 2ம் பக்கம்)

### வாசகர்களுக்கு எமது புதுவருட வாழ்த்துக்கள்

## 103 தமிழர்கள் சிறீலங்காவிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்

### லித்துவேனியா விமானநிலையத்தில் சம்பவம்

லித்துவேனிய நாட்டில் தங்கியிருந்த சுமார் 200 இலங்கையர்களில் 103 தமிழர்கள் கிறிஸ்மஸ் தினத்தன்று சிறீலங்காவிற்கு திருப்பியனுப்பப்பட்டதாக தெரியவருகிறது. திருப்பியனுப்பப்பட்டவர்களில் கணிசமான பெண்களும் அடங்கியுள்ளனர்.

ஸ்கண்டிநேவிய நாடுகளில் அகதி அந்தஸ்து கோரும் நோக்கோடு லித்துவேனிய நாட்டினூடாக இவர்கள் பயணித்த போதே லித்துவேனியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு மீளவும் சிறீலங்காவிற்கு அனுப்பப்பட்

(☞ 2ம் பக்கம்)

## குடாநாட்டுத் தேர்தல் சந்திரிகா அரசின் கபட நாடகம்

### - JVP குற்றச்சாட்டு

சந்திரிகா அரசு குடாநாட்டில்தான் மேற்கொள்ளும் தேர்தல் முயற்சிகளை பயன்படுத்தி சிறீலங்கா தழுவிய தேர்தலுக்கான ஆதரவை உருவாக்க முயற்சிக்கின்றார் என ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது.

யாழ். குடாநாட்டில் இத் தேர்தலை நடாத்துவதன் மூலம் தனது போலியான தீர்வுப்பொதிக்கு அங்கீகாரத்தை தேட

(☞ 2ம் பக்கம்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.00 P.M.
Sunday 12.00 Noon - 6.00 P.M.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64
ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83
டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546
சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Hünrich Str-75; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374
லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718
இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527
நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

# இராணுவ அதிகாரி தமிழ்பெண் மீது பாலியல் வல்லுறவு

சிறீலங்கா இராணுவத்தின் புலனாய்வு அதிகாரி ஒருவரால் வவுனியா நகரில் 17 வயது தமிழ் யுவதி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட கொடுமையான சம்பவம் கடந்த வாரம் நிகழ்ந்துள்ளது.

மேற்படி யுவதி தனது சகோதரியுடன் கடந்த 25-ம் திகதி வீதியால் வந்துகொண்டிருந்தபோது அவர்களை இடைமறித்த இராணுவப் புலனாய்வு அதிகாரி ஒருவர் அவர்கள் மீது விசாரணை நடாத்தவேண்டும் எனக் கூறி அவர்களை ஒரு விடுதிக்கு அழைத்துச்சென்றுள்ளார். இந்த வேளையில் இவரது சகோதரி ஒருவாறு தப்பிச் சென்று விடயத்தை மற்றவர்களுக்குச் சொல்லியதுடன், மேற்படி விடுதிக்குச் சென்று பாலியல் வல்லுறவுக்குள்ளான தனது சகோதரியை மீட்டுள்ளார்.

சிறீலங்கா அரசு இந்தச் சம்பவம் பற்றி வெளியிட்ட செய்தியொன்றில், பாலியல் வல்லுறவு குற்றம் புரிந்த மேற்படி இராணுவ அதிகாரி கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

இச். சம்பவத்தினையடுத்து வவுனியா நகரில் வசிக்கும் தமிழ்ப் பெண்களிடையே பெரும் பீதி நிலவி வருவதாக வன்னி செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கு முன்னரும் பல தடவைகள் வவுனியாவில் பல தமிழ்ப் பெண்கள் சிறீலங்காப் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## 103 தமிழர்கள்...

டுள்ளனர். எஞ்சிய 97 பேரும் விரைவில் அனுப்பப்படுவார்கள் எனவும் லித்துவேனியா தெரிவித்துள்ளது. இந்த நாடு கடத்தல் நடவடிக்கைக்கு சுவீடன் நாட்டிலுள்ள சிறீலங்கா தூதரகமும், சிறீலங்கா வெளிவிவகார அமைச்சும் பெரும் ஒத்துழைப்பினை வழங்கியுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## காலி கடற்படைத்...

லங்கா கடற்படைத்தளபதி கடற்படைத் தளத்தில் நடைபெற்ற விழாவொன்றிற்கு வருகை தந்துவிட்டு திரும்பியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை 2.30 மணியளவில் கடற்படைத் தளத்திற்கு அருகாமையில் உள்ள மாகல்ல பாலத்திற்கு 'கன்டர்' வாகனம் ஒன்று தரித்து நின்றதாகவும், வாகனத்திலிருந்து இறங்கிய ஒருவர் வாகனத்திற்கு கீழே புகுந்த ஒருசில வினாடிகளில் பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்ததாகவும் கடற்படைக் காவலரணில் கடமையாற்றிய படையினர் தெரிவித்துள்ளனர்.

இக் குண்டுவெடிப்பைப் பற்றி செய்தி வெளியிட்ட அரசதரப்பு கடற்படைதளபதியை கொல்வதற்காகவே இக் குண்டு பொருத்தப்பட்ட வாகனம் மொனராகலைப் பகுதியில் இருந்து வந்ததாகவும் ஆனாலும் உரிய வேளைக்கு முதலே அது வெடித்ததன் காரணமாக வாகனத்திலிருந்த மூவர் பலியானதாகவும் தெரிவித்துள்ளதுடன், இக் குண்டுத்தாக்குதல் புலிகள் வேலைதான் எனவும் குறிப்பிட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## குடாநாட்டுத்...

முனைகிறது அரசு என குறிப்பிட்டுள்ள JVP, யாழ்குடா மக்கள் துப்பாக்கி முனையில் தாக்கப்பட்டாலும் அதற்காக அரசு கவலைப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது.

# சிறீலங்காவின் மனித உரிமைகளை கண்டித்து புலம் பெயர்ந்த மக்களும் போராடவேண்டும்

## தமிழர் மனித உரிமை அமைப்பு

சிறீலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் பாரிய மனித உரிமை மீறல்கள் பற்றி புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தயக்கமேதுமின்றி இங்குள்ள அரசுகளிடம் தொடர்ந்து எடுத்துரைக்க வேண்டுமென தமிழர் மனித உரிமை அமைப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 24-ம் திகதி இவ் அமைப்பினரால் சிறீலங்காவின் களுத்துறை சிறைச்சாலையில் தமிழ் அரசியற் கைதிகள் படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரிஸ் ஈபில் கோபுர முன்றலில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை விழிப்புப் போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## கிளிநொச்சியில்...

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து 1 1/2 கிலோமீற்றர் தூரம் வெளியே வந்து பதுங்கியிருந்த சிறீலங்காப் படையணி மீதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. அதிகாலை 4.30 மணிக்கு ஆரம்பித்த தாக்குதல் முற்பகல் 10.30 மணிவரை நீடித்தது. தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவப் படையினர் தமது ஆயுதத் தளவாடங்களையும் விட்டுவிட்டு மீண்டும் தமது பிரதான முகாமிற்கு ஓடித் தப்பித்துவிட்டனர்.

இது ஒருபுறமிருக்க, தென்மராட்சி உசன் பகுதியில் இராணுவத் தொடர் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியபோது மேஜர் தர அதிகாரி ஒருவர் உட்பட 4 சிப்பாய்கள் பலியாகி உள்ளனர். மேலும் மூவர் படுகாயமடைந்தனர். பலியான மேஜர், 14-வது இராணுவப் படைப்பிரிவின் இரண்டாவது கட்டளை அதிகாரியான சத்தானந்தஜெயதிலக ஆவார். இத்தாக்குதலின் போது இராணுவ வாகனமும் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

கிளிநொச்சித் தாக்குதலில் 4 போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## கொல்லப்பட்ட...

தளவாடங்களும் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பலியான ராசீக் குண்டர்கள், சிறீலங்காவின் தேசியத் துணைப் படையில் பணிபுரிவதால் இவர்களது சடலங்களை பொறுப்பேற்ற இராணுவம் அவர்களுக்கு இராணுவ மரியாதை செலுத்தியதுடன் லான்ஸ்-கோப்ரல் பதவிகளையும் வழங்கியுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## ஜெயந்தியாய...

விக்கொண்டனர். கப்டன் பாலுசந்தர், கப்டன் திவ்யபாலன், 2-வது லெப்.வித்தியன், 2-வது லெப். மணி, வீரவேங்கை ரூபகாந்தன் ஆகியோரே வீரச்சாவை தழுவியவர்களாவர். தமிழீழ விடுதலைப் புலிகள் இவ் வேங்கைகளுக்கு தமது வீர வணக்கத்தைச் செலுத்தியுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## விடுதலைப்...

என தெரிவித்துள்ள பொதுச் செயலாளர், பலர் நினைப்பது போல் எமது கட்சி தமிழரின் விடயம் தொடர்பாக கண்ணை மூடிக்கொண்டிருக்காது எனவும் குறிப்பிட்டார்.

'தமிழர்களின் பிரச்சினை இந்தியாவினதும் பிரச்சினைகூட. பல்லாயிரம் தமிழ் அகதிகள் எம்மோடு வாழ்கிறார்கள். நாங்கள் பொதுக் கலாச்சாரத்தைப் பேணுகின்றோம்' என்று சுட்டிக் காட்டிய எம். கணேசன், பாரதீய ஜனதாவின் பிரதமமந்திரி வேட்பாளர் திரு.வாஜ்பாய் தமிழீழ ஆதரவாளர் மாநாட்டில் 80 களில் கலந்துகொண்டதையும் ஞாபகப்படுத்தினார்.

# கணிப்பீடு

## இனவாதத்தினுள் ஐரோப்பிய சமூகம்? ஐரோப்பிய சமூக ஆணையாளர் அதிருப்தி

ஐரோப்பியர்கள் மத்தியில் இனவாதமும், வெறுப்புணர்வும் அதிகரித்து வருவதாக ஐரோப்பிய சமூக கணக்கெடுப்பு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

1/3 விகிதமான ஐரோப்பியர் தம்மை இனவாதிகள் அல்லது இனவெறியர்கள் என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். பிறிதொரு 1/3 விகிதமானோர் சில அளவுகோல்களில் தாம் இனவெறியர்கள் என் ஒப்புக் கொண்டனர். பிறர் தம்மை இனவெறியர்கள் அல்ல என தெளிவுபடுத்தினர். ஐரோப்பியா தழுவியதாக சுமார் 16,000 மக்கள் மத்தியில் இனவெறி தொடர்பாக நடாத்தப்பட்ட ஐரோப்பிய சமூக ஆய்வே இவ் விபரங்களை வெளியிட்டுள்ளது. இவ் ஆய்வின் பிரகாரம் பெல்ஜியம் இனவெறியர்கள் கூடிய நாடாக கணிக்கப்படுகிறது. இங்கு 22% தம்மை கடும் இனவெறியர்கள் என்பதை பகிரங்கமாக ஒப்புக் கொள்கின்றனர். இதேவேளை பிரான்சில் 16% தம்மை கடும் இனவெறியர்கள் என கூறுகின்றனர். இவ் இனவெறி உணர்வு இந்நாடுகளில் குடியேறியுள்ள அன்னியநாட்டவர் மீதான வெறுப்பினால் விளைந்தது என விபரிக்கப்படுகின்றது.

சுவீடன், போர்த்துக்கல், ஸ்பெயின், லக்சம்பேர்க் என்பன இனவாதம் குறைந்த நாடுகளாக கருதப்படுகின்றன.

தம்மை இனவெறியர்கள் இல்லை என கருதும் 1/3 விகிதத்தினர் கூட வெளிநாட்டவர்களால் தமது நாட்டிற்கு பாதிப்பு ஏற்டுகின்றதாகக் கூறுகின்றனர்.

2/3 விகிதமான ஐரோப்பியர் அனைத்து சட்டவிரோத வெளிநாட்டவர்களையும் திருப்பி அனுப்பவேண்டும் என விரும்புகின்றனர். 80% அனைத்து குற்றவாளி வெளிநாட்டவர்களையும் திருப்பி அனுப்பவேண்டும் எனக் கூறுகின்றனர்.

இக் கணக்கெடுப்பு அதிருப்தியும் தருவ்தாக ஐரோப்பிய சமூக ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இனவாதம் என்பது வளர்ந்து வரும் பொருளாதார சமத்துவமின்மையின் வெளிப்பாடு என வல்லுனர்கள் கருதுகின்றனர்.

புதிய வரவு
உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,600 Frs. |
| Singapour | - | 3,900 Frs. |
| Madras | - | 3,450 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 1,990 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணச் செய்திகள்

# யாழ். தேர்தலுக்காக பாதுகாப்பு அதிகரிப்பு பாடசாலை மாணவன் சுட்டுக்கொலை

யாழ். மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வீடுவீடாக சிறீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் சோதனைகளை நடாத்தி வருகின்றனர். யாழ். குடாநாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும், நடமாட்டங்களும் அதிகரித்துக் காணப்படுவதும், நடைபெற இருக்கும் உள்ளூராட்சி தேர்தல் நடவடிக்கைகளின் போது தாக்குதல்கள் மேலும் அதிகரிக்கலாம் என்பதனாலுமே இந் நடவடிக்கை என இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் யாழ். பேரூந்து நிலையத்தினைச் சுற்றியும் முட்கம்பி வேலிகளை அமைத்து வருகின்றனர். இதனால் பேரூந்து நிலையத்தில் கடைகள் அமைத்திருக்கும் வர்த்தகர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

இதேவேளை இத் தேடுதல் நடவடிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவித்த ஒரு இராணுவ சிரேஷ்ட அதிகாரி 'குடாநாட்டுப் படையினர் எவ்வளவுதான் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தாலும் விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தடுப்பது கடினம்' எனக் கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் ஒட்டப்பட்டிருந்த தேர்தல் சுவரொட்டியை வாசித்துக்கொண்டிருந்த பாடசாலை மாணவர் ஒருவரை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றுள்ளனர். மட்டுவிலைச் சேர்ந்த யோகராஜா ரமேஸ் (18) என்பவரே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். பின்னர் இவரது சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்த படையினர் இவர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் எனவும் தெரிவித்துள்ளனர். இவர் நுணாவில் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயில்பவராவார்.

## மிதிவெடியினால் இளைஞன் காலையிழந்தான்

வீட்டு வளவில் இருந்த கறிவேப்பிலை மரத்தில் இலை ஒடிக்கச் சென்றவர் மரத்தின் அடியில் இராணுவத்தினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியினால் தனது கால் ஒன்றை இழந்துள்ளார்.

இச் சம்பவம் கடந்தவாரம் வல்வெட்டித்துறைப் பகுதியில் நடைபெற்றது. அம்புலிங்கம் சந்திரமோகன் (21) என்ற இளைஞனே தனது காலை இழந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மல்லாகத்திலும் வீதியால் நடந்துகொண்டிருந்தபோது மிதிவெடி வெடித்ததில் இராசையா செல்வராஜா (45) என்பவரும் தனது வலதுகாலை இழந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## யாழ். தேர்தலில் போட்டியிடும் குழுக்களுக்கு ஆயர் கண்டனம்

யாழ்ப்பாணத்தில் இன்று உள்ள துயரமான சூழ்நிலையில் சிறீலங்காவினால் அறிவிக்கப்பட்டுள்ள தேர்தலில் பங்குபற்றும் குழுக்களுக்கு யாழ். ஆயர் வணபிதா தோமஸ் சவுந்தரநாயகம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமது ஆயர் அலுவலகத்தில் இதனைத் தெரிவித்த அவர், யாழ் மக்களுக்கு இன்றுள்ள இக்கட்டான நிலையில் இத் தேர்தல் மேலும் இக்கட்டைத் தரப்போகிறதென எச்சரித்துள்ளதுடன், யாழ். தேர்தலை தமிழ்க் குழுக்கள் பகிஸ்காரம் செய்வதுதான் சரியானது எனவும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ்க் குழுக்கள் யாழ்ப்பாணத்தில் சில கூட்டங்களை நடாத்தியபோதும் மக்கள் அக்கூட்டங்களைப் புறக்கணித்துள்ளனர். பலாத்காரமாக வரவழைக்கப்பபட்ட ஒருசிலர் மீதும் கடுமையான பாதுகாப்பு கெடுபிடிகள் நடாத்தப்பட்டுள்ளன. புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய குழுக்கள் யாழ். நகரில் வெளியாகும் ஒரேயொரு பத்திரிகையான 'உதயன்' நாளிதழில் தேர்தல் விளம்பரங்களை வெளியிட்டுள்ளன.

## மாவிட்டபுரம் கந்தன் கோவில் இடிந்து விழும் அபாயம்

சரித்திரப் புகழ்பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் இராணுவத்தினரின் தாக்குதல்கள் காரணமாக பலத்த சேதமடைந்த நிலையில் தொடர்ந்தும் காணப்படுவதால் எந்நேரமும் அது இடிந்துவிழும் அபாயம் காணப்படுவதாக புக்தர்கள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

சிறீலங்காப் படையினரால் முன்னர் எடுக்கப்பட்ட பல இராணுவ நடவடிக்கைகளின்போது ஆலயத்தின் கோபுரம், மூல மண்டபம் ஆகியன பலத்த சேதமடைந்திருந்ததுடன். கூரையை தாங்கும் பிரதான தூண்களும் பலத்த சேதமடைந்திருந்தன. சில வருடங்கள் கோவில் கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்டமையாலும், புனருத்தாரண வேலைகள் நடைபெறாமையினாலும் ஆலயத்தின் தற்போதைய நிலை மிக மோசமாக காணப்படுகின்றது. ஆலய மேற்கூரையில் பல இடங்கள் உடைந்துள்ளதால் மழை நீர் ஆலயத்திற்குள் புகுந்து சேதத்தினை மேலும் மோசமாக்கி வருவதாக தெரிவித்த பக்தர்கள் கோயிலுக்குள் செல்வதற்கு தற்போதைய நிலை அச்சம் தருவதாகவுள்ளதெனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

## யாழ்.தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க ஒருவருமில்லை

சிறீலங்கா அரசினால் நடாத்தப்பட திட்டமிட்டுள்ள யாழ். உள்ளூராட்சி தேர்தலுக்கு தபால் மூலம் வாக்களிக்க கோரி ஒருவர் தன்னும் முன்வரவில்லை என சிறீலங்காவின் தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே ஆணையகத்தினால் தபால் மூலம் வாக்களிக்க வாக்காளர்கள் முன்வருமாறு பல முறை வேண்டுகோள் விடுத்த போதும் அவ்வாறு ஒருவர் தன்னும் செய்ய முன்வரவில்லை.

இதேவேளை சிறீலங்காவின் தேர்தல் ஆணையாளரும், பொலிஸ்மா அதிபரும் எதிர் வரும் 30-ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒரு மாநாட்டினைக் கூட்டவுள்ளனர். இம் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு தேர்தலில் போட்டியிடும் குழுக்களுக்கு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஐந்து உள்ளூராட்சி சபைகளில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். நிராகரிப்பு

யாழ். உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். குழுவின் 5 உள்ளூராட்சிகளுக்கான வேட்புமனுக்கள் தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதனை எதிர்த்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப் போவதாக அதன் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவர்களால் நிராகரிக்கப்பட்ட ஐந்து உள்ளூராட்சி சபைகளான தீவுப் பகுதி, சாவகச்சேரி, பருத்தித்துறை, வடமராட்சி தெற்கு, வலிகாமம் வடக்குப் பகுதிகளில் ஏனைய அனைத்துப் போட்டிக் குழுக்களும் பங்குபற்றுகின்றன.

## அல்வாய் பகுதியில் வீடு தகர்ப்பு சம்பவங்கள்

சிறீலங்கா இராணுவத்தினர், குடிமக்களது வீடுகளை தகர்த்து வருகின்ற சம்பவங்கள் அல்வாய் பகுதியில் தொடர்ந்து நடைபெறுவதாக யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக புலவரோடை பகுதியிலேயே இந்த வீடு தகர்ப்பு சம்பவங்கள் இடம் பெறுகின்றன. தகர்க்கப்பட்ட இவ் வீடுகள் யாவும் விடுதலைப் புலிகளின் முகாம்களும், பதுங்கிடங்களுமாகுமென சிறீலங்கா இராணுவம் தெரிவித்து வருகின்றது. ஆனால் தகர்க்கப்பட்ட இவ் வீடுகளில் புலிகள் தங்கியிருக்கவில்லையென அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். கடந்த வாரமும், அதற்கு முந்தைய வாரமும் இப் பகுதியில் பல வீடுகள் இராணுவத்தினரால் தகர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## சென் ஹென்றிஸ் வெற்றி

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 19 பயதிற்குட்பட்ட மாணவர்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் சென் ஹென்றிஸ் கல்லூரி அணி 1-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

யாழ். கல்வி வலயம் இரண்டின் வலய மட்டத்திலான இப் போட்டி சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முன்னாள் தமிழக முதல்வர் திரு. எம்.ஜி. இராமச்சிந்திரன் அவர்களது 10 ஆண்டு நினைவாக பாரிஸ், அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலில் நடைபெற்ற விசேட பூஜையின் போது.


## வீடுகள் வாடகைக்கு

**பாரிஸ் 8-ல்** M°:Rome அல்லது Europe க்கு மிகவும் அருகாமையில் நல்ல நிலயில் உள்ள (15 $M^2$) இடவசதி கொண்ட Studio வீடு வீட்டுத் தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. வாடகை **$2250^{Frs}$ C.C** மட்டும் அத்துடன் Ascenseurs + Gardien உண்டு.

**பாரிஸ் 18-ல்** M°: Blanche அல்லது Pigalle க்கு மிகவும் அருகாமையில் (50 $M^2$) இடவசதி கொண்ட 2 Pieces வீடு வாடகைக்கு உண்டு வாடகை **$5250^{Frs}$ C.C** மட்டும் அத்துடன் Ascenseurs + Gardien உண்டு.

**Colombes (92)** இல் S.N.C.F. இற்கு மிகவும் அருகாமையில் 2 Pieces வீடு வாடகைக்கு உண்டு.
வாடகை **$3075^{Frs}$**

சகல தொடர்புகளுக்கும்: சிவா
Tel: 01 46 71 66 91 / Mobil: 06 09 91 12 66


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்கள் மீது தாக்குதல்

மட்டக்களப்பு சந்திவெளி பரீட்சை நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சையை எழுதி முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த 6 மாணவர்களை ஒருவர் தாக்கிவிட்டு அவர்களது அடையாள அட்டைகளையும் பறித்துக்கொண்டு தப்பிஓடிவிட்டனர்.

சந்திவெளி சித்திவிநாயகர் வித்தியாலயத்திலிருந்து வீடு திரும்புவதற்காக பேரூந்து நிலையம் ஒன்றில் நின்றுகொண்டிருந்தபோதே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. வான் ஒன்றில் வேறுசிலருடன் வந்த இந்நபர் 6 மாணவர்களையும் வானில் ஏறும்படி வற்புறுத்தியுள்ளார். அவர்கள் மறுக்கவே மாணவர்களை கடுமையாகத் தாக்கி விட்டு, அடையாள அட்டைகளையும் பறித்துச் சென்றுள்ளனர்.

இதுபற்றி அம் மாணவர்களின் பெற்றோர் சந்திவெளி இராணுவ முகாமுடன் தொடர்பு கொண்டபோது அவர்களின் அடையாள அட்டைகள் திருப்பிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அம் முகாம் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## மாவிற்குத் தட்டுப்பாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோதுமை மாவிற்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது. அரிசியின் விலை கிலோ 35 ரூபாவாக உயர்ந்துள்ள நிலையில் மாவிற்கும் தட்டுப்பாடு நிலவுவதால் பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கியவண்ணம் உள்ளனர்.

மழை காரணமாக போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ள இவ்வேளையில், கப்பல் போக்குவரத்துகளும் அதிகரிக்கப்படவில்லை. தொடர்ந்து ஓரிரு தினங்களுக்குள் மாவிற்கான தட்டுப்பாடு நீங்காவிடில் வெதும்பியின் உற்பத்தி பாதிக்கப்படலாம் என வெதுப்பாக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மலையகப் பகுதிகளில் தாக்குதல் நடாத்துவது புதிய போராட்ட இயக்கம்?

மலையகப் பகுதிகளில் அண்மைக்காலமாக நடாத்தப்படும் பல குண்டுத் தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்கள் விடுதலைப் புலிகளா? அல்லது புதிதாக அப்பகுதியில் தோன்றிய போராட்ட இயக்கமா என்பதுபற்றி சிறீலங்கா புலனாய்வுத் துறையினர் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மலையகப் பகுதியில் குறிப்பாக தேயிலை தோட்ட பிரதேசங்களில் நடாத்தப்படும் இத் தாக்குதல்களின் விளைவாக தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டு பொருளாதார நெருக்கடியை தோற்றுவிக்கும் முகமாக இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இங்கு நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களின் சிதைவுகளை ஆராய்ந்து வரும் பொலிசார் இவை விடுதலைப் புலிகளினால் வழமையாக பயன்படுத்தப்படும் வெடி பொருட்களினால் ஏற்படுத்தப்பட்டவையா என்பது பற்றியும் சோதனைகளை செய்து வருகின்றது.

இதேவேளை தேயிலைத் தோட்டங்களில் வசிக்கும் தமிழ் இளைஞர்கள் மீது பலத்த கண்காணிப்பினை மேற்கொள்ளும்படி சிறீலங்கா பொலிஸ் தலைமைப்பீடம் மலையக பொலிஸ் பிரிவுகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

## 1998 பெப்ரவரி 4 – தமிழரின் துக்கதினம் பாரிசில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் 30 தமிழர் அமைப்புக்கள் ஏற்பாடு

1998 பெப்ரவரி 4-ம் திகதி தனது 50-வது சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு சிறீலங்கா அரசு பிரமாண்டமான முயற்சிகளை முன்னெடுத்துவரும் இவ்வேளையில் அன்றைய தினத்தை தமிழர் துக்கதினமாகவும் இனப்படுகொலையில் 50 ஆண்டு தினமாகவும் கடைப்பிடிப்பதற்கு பிரான்சிலுள்ள 30 தமிழ் அமைப்புகள் ஒன்று சேர்ந்து தீர்மானித்துள்ளன.

கடந்தவாரம் பாரிசில் நடைபெற்ற மேற்படி தமிழ் அமைப்புகளின் ஒன்றியக் கூட்டத்தில் எதிர்வரும் பெப்ரவரி 4-ம் திகதி பாரிசில் மாபெரும ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்துவதென்றும், பிரான்ஸ் அதிபர் திரு. ஜக் சிராக்கிடம் தொடர்ச்சியாக இனப் படுகொலை புரிந்துவரும் ஜனநாயக விரோத சிறீலங்கா அரசுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பவேண்டாம் என்று கோருவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

## சிறீலங்காவின் வங்கித்துறை சரிகிறது

சர்வதேச நாணய நிதியம்

சிறீலங்காவின் வங்கித்துறை வீழ்ச்சியடைந்து சரிந்து வருவதாக சர்வதேச நாணய நிதிய தரவுகள் தெரிவிக்கின்றன. கடந்த ஒக்டோபர் மாதத்தில் வெளியிடப்பட்ட நிதியத்தின் அறிக்கை ஒன்றிலே சிறீலங்காவின் அரச வங்கிகள் இரண்டு வரம்பு முறையற்ற கடன்களை வழங்கி வருவது வங்கித்துறையின் சரிவின் பிரதான காரணமெனவும் எச்சரித்துள்ளது.

அரச வங்கிகள் மட்டுமல்ல சிறீலங்காவில் இயங்கும் தனியார் வங்கிகளும் இச் சரிவிற்கு உட்பட்டு வருகின்றன என அவ்வறிக்கை சுட்டிக்கா[illegible]

# எங்கள் ஆதரவாளர்கள் எந்த இயக்கத்திற்கும் வாக்களிக்கமாட்டார்கள்

### - ஆனந்தசங்கரி

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் திரு. ஆனந்தசங்கரி அவர்கள் இன்று (29.12.97) 'ஈழமுரசு'க்கு வழங்கிய பிரத்தியேக பேட்டி**

**கேள்வி:** தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேர்தல் நியமனங்கள் யாவும் நிராகரிக்கப் பட்டதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** எங்கள் நியமனங்கள் நிராகரிக்கப்பட்டது உண்மையில் எங்களுக்கு கவலைதான். இருந்தாலும் நிராகரிக்கப்பட்டது கடவுளால் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதம் எனத்தான் கணிக்கின்றோம். காரணம் என்னவெனில் நியமனப் பத்திரங்களை நாங்கள் தயார்செய்தபோது யாழ் ப்பாண மாவட்டத்திற்குள் வாழுகின்ற எவரும் துணிந்து வேட்பாளராக நிற்க முன்வரவில்லை. ஆனால் கடந்த காலங்களில் போட்டி போட்டு வேட்பாளராக வருவதற்கு மக்கள் வந்தனர். தற்போது இத் தேர்தலில் கூட்டணியை ஆதரிக்க தயார் என்றும் ஆனால் நியமனப்பத்திரத்தில் கையொப்பம் இட மாட்டோம் எனவும், அதற்கு காரணம் மிரட்டல் இருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். இதனால் வேட்பாளர்களைத் தேடி அலைய வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் இளைஞர் பட்டியலில் தான் நிராகரிப்பு ஏற்பட்டது. இளைஞர்பட்டியலில் நாங்கள் வருடத்தை மாற்றிப் போட்டிருக்கலாம். ஆனால் நாங்கள் உண்மைப்படி போட்டோம். அதனாலேயே இந்நிலை.

**கேள்வி:** இத் தேர்தல் தொடர்பாக சிறிலங்கா அரசிற்கு ஒரு ஆத்ம பலத்தை உங்களது கட்சி ஆரம்பத்தில் வழங்கியதா?

**பதில்:** நாங்கள் அரசாங்கத்தை ஆரம்பத்தில் இருந்து வன்மையாக கண்டித்து வருகின்றோம். இது வெறும் 'செப்படிவித்தை' என்று கூறியிருந்தோம். ஆரம்பத்தில் இருந்தே.. ஏன் இரண்டு நாட்களுக்கு முன்பு கூட செயலாளர்நாயகம் உட்பட நானும் வேறு சிலரும் போய் தேர்தல் ஆணையாளருக்கு அங்குள்ள நிலைமையை விளக்கியுள்ளோம். இதை அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்கின்ற செயலாக கணிக்க முடியாது.

**கேள்வி:** நியமனப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டது பற்றி நீங்கள் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் என்ற ரீதியிலே நாங்கள் முன் எதிர்ப்பைக் காட்டமாட்டோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் உங்கள் கட்சியில் உள்ள கலாநிதி திருச்செல்வம் அவர்கள் இதை சவாலாக எடுக்கப் போவதாக பத்திரிகையில் செய்திகள் வந்துள்ளன. இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் கிடையாது. ஆனால் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் மிகவும் ஆத்திரப்பட்டு நாங்கள் வழக்கு வைத்து தேர்தலில் போட்டி போடுவோம் என்று கருதுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் இது தேவையற்றது.

அங்குள்ள நிலைமையில் எங்களுடைய மக்களிடம் சுதந்திரமாக தேர்தலில் பிரச்சாரம் செய்ய முடியாது. ஆகையால் இதை பெரிது படுத்தாமல் அப்படியே விட்டுவிடுவோம் என்று எமது உறுப்பினர்கள் கருதுகிறார்கள்.

**கேள்வி:** தமிழர் விடுதலைக் கூட்டணியில் நீலன் திருச்செல்வம் அவர்களை நீங்கள் கீழ் மட்ட உறுப்பினர்களாக கருதுகிறீர்களா?

**பதில்:** அவர் கீழ் மட்ட உறுப்பினர் என்று இல்லை. அவரும் சட்ட வல்லுநர் என்ற காரணத்தினால் நாங்கள் எங்கள் நிலைமையை அரசாங்கத்திற்கு மட்டும் அல்ல, உலகத்திற்கும் வெளிப்படுத்தலாம். நான் நினைக்கின்றேன், வழக்கிற்கு போய் எங்கள் நிலைமையை வாதாடி சரி என்பதை உலகிற்கு காட்டினால் தப்பு இல்லை என்று. நீதித்துறையில் கூடுதலாக சம்பந்தப்பட்டுள்ளதால் அவர் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறாரே தவிர அவர் கீழ்மட்டம், மேல்மட்டம் என்று இல்லை. எங்கள் இரண்டு பேருக்குள் எந்தவிதமான கருத்து வேறுபாடுகளும் இல்லை. அவரே வழக்கு வைத்ததைப்பற்றி என்னிடம் விரிவாக கூறியிருக்கின்றார்.

**கேள்வி:** நீங்கள் அவருடைய கருத்துக்கு சம்மதித்து விட்டீர்களா?

**பதில்:** தற்போது அதைப்பற்றி ஆராய்ந்து வருகின்றோம்.

**கேள்வி:** ஆயுதம் தாங்கிய குழுக்களால் விடுதலைக் கூட்டணி முடக்கப்பட்ட நிலையில் உள்ளதாக முன்னர் தெரிவித்திருந்தீர்கள்; அதற்கு உண்மையான விளக்கம் என்ன?

**பதில்:** ஆயுதம் தாங்கிய குழுக்கள் மத்தியிலே எங்கள் வேட்பாளர்களுக்கு நிச்சயமாக இடைஞ்சல்கள் உண்டு. இடைஞ்சல்கள் இருந்து வந்திருக்கின்றது. தொடர்ந்தும் இருக்கும் என்று நம்புகின்றோம்.

**கேள்வி** இது கூட்டணியின் எதிர்கால அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என் நினைக்கிறீர்களா?

**பதில்:** எங்களுக்கு அரசியல் தாக்கம் ஏற்படும் என்று இல்லை. அரசாங்கம் எல்லாக் குழுக்களும் ஜனநாயக வழிக்கு திரும்பி விட்டன. அங்கெல்லாம் நிலைமை சீராகவுள்ளது. நீங்கள் வந்து போட்டியிடலாம் என்று மக்களுக்கு சொல்லும்போது, உலக நாடுகள் மிகவும் அவதானமாக கவனிக்கின்றன. ஆனால் உண்மையான நிலைமை அப்படியல்ல. அங்கு நீதி விசாரணை செய்வதற்கு குறிப்பிட்ட அமைப்பு என்று இல்லை. இயக்கங்களோ, அல்லது அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற இயக்கமோ அல்லது பொலிஸ் அதிகாரிகளோ, இராணுவமோ என்று ஒரு முடிவு இல்லை. இதற்கு ஒரு முடிவு வேண்டுமே. இது நாளைக்கு எங்களுக்கும் நடக்கலாம்தானே.

**கேள்வி:** நியமனப்பத்திரங்கள் ஏற்காத நிலையில் உங்கள் விடுதலைக்கூட்டணியின் ஆதரவாளர்கள் புளொட் இயக்கத்திற்கு ஆதரவு தருவதாக ஒரு கருத்து நிலவுகின்றது உண்மையா?

**பதில்:** அது வெறும் பகல்கனவு மட்டுமல்ல, ஒரு பொய்ப்பிரச்சாரமும் கூட.

**கேள்வி:** அப்படியானால் திருமதி சரோஜினி யோகேஸ்வரன், புளொட் இயக்கத்தின் மாணிக்கதாசன் அவர்களைச் சந்தித்தது?

**பதில்:** தேர்தல் விடயங்களில் விழுந்ததை, அகப்பட்டதை சுற்றுவது தானே சிலருடைய வழக்கம். அது போல இருக்கலாம். ஆனால் நிச்சயமாக நாங்கள் ஒரு அறிக்கையொன்று விடுவோம், எங்கள் ஆதரவாளர்கள் எந்தக் கார்ரணம் கொண்டும் எந்த இயக்கங்களுக்கும் வாக்களிக்க மாட்டார்கள் என்று.

**கேள்வி:** தேர்தல் உண்மையிலே தமிழ் மக்களுக்கு என்ன தரப்போகின்றது என்று உங்கள் சொந்த அல்லது உப தலைவர் என்ற ரீதியிலே என்ன கருத்தை சொல்கிறீர்கள்?

**பதில்:** இத்தேர்தல் எவ்வகையிலும் ஒன்றும் செய்யப்போவது இல்லை. வெறும் கண்துடைப்பு, வெறும் போலிக்கூத்து, அரசாங்கத்தினுடைய திட்டமிட்ட சதி.

**கேள்வி:** நீங்கள் ஏன் இதுபற்றி ஆரம்பத்தில், சொல்லியிருக்கக் கூடாது?

**பதில்:** ஆரம்பத்தில் இருந்தே சொல்லிக் கொண்டு தானே இருக்கின்றேன்.நியமனத்துக்கு திகதி குறித்த நாளில் இருந்து ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறி மனு அனுப்பி இருக்கின்றேன். வேண்டும் என்றால் உங்களுக்கும் பிரதி அனுப்பி வைக்கின்றோம்.

**கேள்வி:** உங்களுடைய நியமனப்பத்திரங்கள் ஏற்கப்படாததால் கூட்டணி 'எட்டாப்பழம் புளிக்கும்' என்ற ரீதியில் இந்தக் கருத்தை தெரிவிப்பதாக அபிப்பிராயம் நிலவுகிறது.இதற்கு உங்கள் கருத்து?

**பதில்:** எதையும் யாரும் சொல்லலாம். நாம் 16 சபைகளுக்கும் போட்டி போட வெளிக்கிடவில்லையே? நாங்கள் வெளிக்கிட்டது யாழ்ப்பாண நகரசபைக்கு. இது ஒரு அடையாள போட்டியிடல்தான் என்று அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டுவது. இதுதான் நாங்கள் விட்டு விட்டு ஓடிவிட்டோம் என்று சொல்பவர்களுக்கு ஒரு பாடம்.

**கேள்வி:** நீங்கள் திட்டவட்டமாக சொல்லுகிறீர்கள் அரசாங்கத்தின் இது ஒரு போலிக்கூத்து என்று?

**பதில்:** ஆமாம்... இது தேர்தல் என்ற ரீதியில் அரசாங்கத்தின் ஒரு கேலிக்கூத்து.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழீழச் செய்திகள்

# வன்னியில் தொடரும் சிசு மரணங்கள்

அன்னையினது மந்தபோசனை குறைபாட்டினாலும், சிறீலங்கா அரசின் மருத்துவத் தடையினாலும் வன்னியில் சிசு மரணங்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன. கடந்த வாரமும் ஜெயபுரம் கோபி குடியேற்றத் திட்டத்தில் இரண்டு பச்சிளம் குழந்தைகள் (10 மாதம்) மரணமடைந்துள்ளன. இவர்களது மரணத்திற்கு அன்னையரது மந்தபோசனை குறைபாடுதான் காரணமென இப் பகுதியில் இயங்கிவரும் சுகாதார தொண்டர் சேவை நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இக் குடியேற்றத் திட்டத்தில் வசித்துவரும் 264 குடும்பங்களும் வருவாய் எதுவுமற்ற நிலையில் உணவு நிவாரணங்களை நம்பியே வாழ்க்கையைக் கழித்து வருகின்றனர். தற்போது இவர்களுக்குரிய உணவு நிவாரணங்கள் யாவும் சீர் குலைந்துள்ளமையால் இவர்கள் ஒரு நேர உணவுக்குத் தன்னும் வழியில்லாது இன்னலடைகின்றனர். குறிப்பாக கர்ப்பிணித் தாய்மாரும், சிறுவர்களும் மிகவும் பரிதாபமான நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

இதேபோன்ற அவல நிலை மன்னார் மூன்றாம்பிட்டி மீனவ கிராமத்திலும் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

## இடம் பெயர்ந்த ஆயிரம் பேர் வவுனியாவில் அவல நிலையில்

1996-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் 97 ஒக்டோபர் மாதம் வரையிலான காலப் பகுதியில் வன்னிப் பகுதிகளிலிருந்து வவுனியாவிற்கு வருகை தந்த 77,496 பேரில் இன்னமும் 10,372 பேர் வவுனியாவில் தங்கியிருப்பதாக வவுனியா பிரதேச செயலக தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

தாண்டிக் குளத்தினூடாக வவுனியாவிற்கு வந்த இம் மக்கள் தற்போது இங்குள்ள 11 தடுப்பு முகாம்களில் பல இன்னல்களுடன் தமது நாட்களைக் கழித்து வருகின்றனர். கொழும்பிற்குச் செல்வதற்காக இவர்கள் சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சிடம் பல முறை அனுமதி கோரிய போதும் அக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாத நிலையிலும் காணப்படுகின்றனர்.

முன்னதாக, இப் பகுதிக்கு வந்த பெரும் தொகையான மக்களில் சுமார் 60,740 பேர் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும், 6184 பேர் வன்னிப் பகுதிகளுக்கும் மீளத் திரும்பியுள்ளனரெனவும் அத்தரவுகள் கூறுகின்றன.

## நெடுங்கேணியில் சிங்கள காடையர்கள் கொள்ளை

ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் போது நெடுங்கேணிப்பகுதியில் வசித்துவந்த தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்ட பின்னர், தமிழ் மக்களின் வீடுகளில் பெறுமதியான சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டு வருகின்றன. மணலாற்றுப் பகுதியில் ஆக்கிரமிப்பின்போது குடியேற்றப்பட்ட சிங்களக் காடையர்கள் நாளாந்தம் நெடுங்கேணிப்பகுதிக்கு வந்து இராணுவ துணையுடன் இவ்வாறு பொருட்களை கொள்ளையிட்டு வருகின்றனர்.

வீடுகளின் கதவுகள், ஜன்னல்கள், ஓடுகள் உட்பட பெறுமதியான பொருட்கள் இக் காடையர்களால் கொள்ளையிட்டு செல்லப் பட்டுள்ளன. வீடுகள் சிங்களக் காடையர்களால் கொள்ளையிடப்பட்ட பின்னர் பல வீடுகள் ஆக்கிரமிப்புப் படையினரால் புல்டோசர் கொண்டு அழிக்கப்பட்டு வருவதாகவும் வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெற்கு நெடுங்கேணிப் பகுதியான குமுழமுனை, தென்னமரவாடி ஆகிய இடங்களில் 80-ம் ஆண்டின் நடுப்பகுதியில் அங்கிருந்த மக்கள் துரத்தியடிக்கப்பட்ட பின் இடம்பெற்ற சூறையாடல் சம்பவங்களை ஒத்தவையாகவே தற்போதைய சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

## கஞவாஞ்சிக்குடியில் அதிரடித் தாக்குதல்

கடந்த 23-ம் திகதி மட்டு. களுவாஞ்சிக்குடி பகுதியில் நடாத்தப்பட்ட தாக்குதலொன்றில் மூன்று சிறீலங்காப் பொலிசார் படுகாயமடைந்துள்ளனர்.

காலை 5.30 மணியளவில் பொலிசாரின் சீருடை அணிந்து வாகனமொன்றில் வந்த மூவரே பொலிஸ் காவலரண்கள் மீது இத் தாக்குதலை நடாத்திவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாக பொலிஸ் தரப்புத் தெரிவித்துள்ளது.

காயமடைந்த பொலிசார் ஆபத்தான நிலையில் கண்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். களுவாஞ்சிக்குடி பகுதியில் இதே போன்ற பாணியில் ஏற்கனவே இரு தாக்குதல்கள் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை மட்டு. மாஞ்சோலை பகுதியில் நடாத்தப்பட்ட பிறிதொரு தாக்குதலில் இரு இராணுவ பயிற்சி பெற்ற பொலிசார் காயமடைந்துள்ளனர். பின்னர் அப்பகுதியை சுற்றிவளைத்த பொலிசார் ஏழு குடிமக்களை கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

## இராணுவ உளவாளி சுட்டுக் கொலை

வவுனியா இராணுவத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த உளவாளி ஒருவர் மகிழங்குளப் பகுதியில் கடந்த 23 ஆந் திகதி காலை 7.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வாகனத் திருத்தகம் ஒன்றில் பணி புரிந்து வந்த இந்த உளவாளி, சிறீலங்கா இராணுவத்திற்கு அவ்வப்போது பல தகவல்களை வழங்கி வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பலியானவர் கிருஷ்ணபிள்ளை ஜெகதீஸ்வரன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## மன்னக்குள தாக்குதலில் 9 மில்லியன்கள் பெறுமதியான 30 இராணுவ தொடர்பு கருவிகள் இழப்பு

வன்னி மன்னக்குள பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவ அதிரடிப்படை சிறப்பு படை அணிகள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டபோது 30 அதி நவீன தொடர்பு கருவிகளும் அத்னுடைய தொடர்பாடல் மையமும் இழக்கப்பட்டிருப்பதாக சிறீலங்கா புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட 300 க்கும் அதிகமான படையினருடன், 481 படையினர் காயமடைந்துள்ளதைத் தவிர மேலும் 18 பேரைக் காணவில்லை எனத் தெரிவித்த புலனாய்வுத்துறையினர், இழக்கப்பட்ட தொடர்புக் கருவிகள் ஒவ்வொன்றும் தலா 3 இலட்சம் ரூபாய்கள் பெறுமதியானவை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

## 3 பிள்ளைகளின் அன்னை சிப்பாய்களால் படுகொலை

தென்மராட்சி- வரணி, தரம்பைக்குறிச்சி பகுதியில் சிறீலங்கா படையினர் மூன்று பிள்ளைகளின் அன்னை ஒருவரை சுட்டு படுகொலை புரிந்துள்ளனர். இவரது மகன் இச் சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

படையினர் இப் பகுதியில் தேடுதல் நடாத்திய போதே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. பலியானவர் 43 வயதான நாகன் ஜெயமணி ஆவர். படுகாயமடைந்த இவரது மகனான ஜனார்த்தனன் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 98 மார்ச் வரை வன்னி காலநிலை படையினருக்கு பாதகம்

புதிய வருடம் பிறக்கும் வேளையிலிருந்து எதிர்வரும் இரு மாதங்களும் ஜெயசிக்குறுய் படையினருக்கு பாதகமான நாட்களின் காலம். ஏனெனில் தற்போது வன்னியில் பெய்து வரும் பருவமழை எதிர்வரும் பெப்ரவரி மாதம் கடைசிப் பகுதி வரை தொடரத்தான் போகிறது. காலநிலை அதற்கிடையில் சீராகி வருமென யாராவது எதிர்பார்த்தால் அது தவறாகும்.

இவ்வாறு சிறீலங்கா காலநிலை அவதான நிலையத்தின் பதில் பணியாளர் ஜெயதிலக பண்டா தெரிவித்துள்ளார். இப்போதுள்ள மோசமான காலநிலையே இன்னும் சில வாரங்களுக்கு தொடரும் எனவும் அவர் எதிர்வு கூறியுள்ளார்.

### காலநிலை பணிப்பாளர்

இதேவேளை பெய்து வரும் பெருமழை காரணமாக ஜெயசிக்குறுய் படையினரிடையே நாளுக்குநாள் தொற்றுநோய்கள் பரவி வருகின்றன. இதுவரை 700-க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் ஈரல் அழற்சி காரணமாக வைத்திய சிகிச்சைக்காக வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்நோய் பரவாது தடுப்பதற்கு படையினர் மத்தியிலே சென்று தடுப்பூசிகளை ஏற்றுமாறு இராணுவத் தலைமையகம் குடிசார் வைத்திய நிபுணர்களையும், தாதிமார்களையும் கோரியபோது அவர்கள் தமது பாதுகாப்பினை முன்னிட்டு அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதால், தற்போது இராணுவ வைத்தியர் சேவையினால் மட்டுமே தடுப்பு நடவடிக்கைகள் மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மாங்குளத்தில் கிபீர் குண்டுவீச்சு

மாங்குளத்திலுள்ள குடிமக்களது குடியிருப்புக்களை இலக்காக வைத்து சிறீலங்கா வான்படை கிபீர் யுத்த விமானங்கள் தாக்குதலை நடாத்தியுள்ளன.

கடந்த 23-ம் திகதி காலை நடாத்தப்பட்ட இத் தாக்குதலின் விளைவாக பல வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. விமானங்களது இரைச்சலைக் கேட்டதும் மக்கள் பதுங்கு குழிகளுக்குள் உயிர் காப்பு தேடியதால் உயிரிழப்புகள் ஏற்படவில்லையாயினும் கால்நடைகள் பெருமளவில் கொல்லப்பட்டுள்ளன.

சுவிஸில் கடந்த பல வருடங்களாக தமிழ் மக்களின்
அச்சுத்தேவைகளை நிறைவேற்றி நன்மதிப்பைப்பெற்ற
ஒரே தமிழ் அச்சகம்

சிவா பிறின்ரிங் சர்வீஸ்

திருமண அழைப்பிதழ்கள், பிறந்தநாள் அழைப்பிதழ்கள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள், விளம்பர துண்டுப்பிரசுரங்கள், மற்றும் அனைத்து விதமான கலர் அச்சுத்தேவைகளுக்கும், திருமண அழைப்பிதழ்கள் 75 இற்கு மேற்பட்ட மாதிரிகள்! கோல்ட் கலர்முதல் விரும்பிய கலரில்! தேவைப்படின் ஒரே நாளில்! 50 சதம் முதல்!
திருமண அழைப்பிதழ்களை மீள விற்பனை செய்பவர்களுக்கு விசேட கழிவு விலையில்! அத்துடன் மணமக்களின் பெயருடன், திகதி மற்றும் உங்கள் விளம்பர பெயர் அழைப்பிதழின் பின்பக்கம் அச்சடிப்பதற்கு (அழைப்பிதழுடன்) 50 சதம் மட்டும்! 1000 ஏ4 துண்டுப் பிரசுரம் கலரில் அச்சிடுவதற்கு 75 பிராங்!
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Siva Printing Service
Postfach 56, 3552 Baerau (Langnau.I.E) SWISS.
Tel:: 034. 402 73 40 - Fax: 034. 402 73 44
Tel: 034. 402 38 74 (home)
email: wintamil@bluewin:ch
Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வருசங்களும் என்ன கெதியாப்போகுது பிள்ளையள்! இன்னும் ரெண்டு வருசம் இப்பிடியே போச்சுதெண்டா இருபத்தியொராம் நூற்றாண்டையும் வலு கெதியாப் பாத்துப் போடலாம் போல கிடக்குது. வருசங்கள் கெதியா ஓடினாலும் விஞ்ஞானங்களும் கண்டுபிடிப்புக்களும் அதுக்கேற்ற மாதிரி வளந்துகொண்டுதான் இருக்குது கண்டியளோ. சந்திரனில இருந்து இப்ப செவ்வாய் வரைக்கும் விஞ்ஞானம் போய் இறங்கிவிட்டுது. கையைக் காட்டிக்காட்டி குழந்தையளை ஏமாத்தி சோறூட்டின நிலவுகூட எதோ பக்கத்து நாடுபோல மாறியும்போச்சு. இன்னும் ஐஞ்சு பத்து வருசத்தில விடுமுறையைக் கழிக்க ஆராவது சந்திரனுக்குப் போட்டுவாறம் எண்டு சொன்னாக்கூட ஆச்சரியப்டுறதுக்கில்லை பிள்ளையள்....!!!

அந்த 'பிருதிவிராச' எண்ணம் ஒட்டிக்கொண்டு தானிருக்குது! ஆனால் என்ன அங்கத்தையை மாதிரி இங்கினையும் வண்டில் பூட்டிப்போய் கடத்திக்கொண்டு வரமுடியாமல் இருக்கே எண்டுதான் கனபேருக்கு பெரும் கவலை! சில பேர் வாய்விட்டும் வேதனைப் பட்டிருக்கினம். ஓம் பிள்ளையள் நண்டு கொழுத்தால் வளையில தங்காதுதானே....!!

உப்பிடித்தான் போனமாசம் இஞ்சையொரு இளவட்டத்துக்கு கலியாணம் பேசியிருக்கினம். பிள்ளையளுக்கு முப்பது முப்பத்தைஞ்சு வயசாகியும் செய்து வைக்கிற எண்ணமே இல்லாமல் சில பெத்தவை இருக்கினம்! அவையளுக்கு மத்தியில இவருக்கு இருபத்திரெண்டு வயசிலேயே பேச வெளிக்கிட்டிருக்கினமெண்டா சந்தோஷப்பட வேண்டிய விசயம்தானே பிள்ளையள்.

அங்கின பாத்துக்கீத்து பத்துப் பொருத்தமும் பொருத்திப் போட்டினமாக்கும்...... ஆனா பதினொராவதா ஒண்டு பொருந்தேல்லைக் கண்டியளோ. அதுதான் 'மனசு' பிள்ளையள். இவர் மட்டும் ஓமெண்டாக்காணுமே? கட்டிக்கப்போற அந்தப் பிள்ளை சம்மதிக்க வேண்டாமோ..... இந்த 'மைனர்' (!) மாப்பிளையை அந்தப் பிள்ளைக்கும் ஏனோ பிடிக்கேல்லைப்போல கிடக்குது. இவர் என்னெண்டா கட்டினா அவளைத்தான் கட்டுவன் எண்டு கொக்கு நிண்ட கணக்கா ஒற்றைக் காலில நிண்டிருக்கிறார்.

# அதுதான் 'மனசு' பிள்ளையள்

ம்....... வருசம் எவ்வளத்துக்கு ஓடியென்ன, விஞ்ஞானம் எப்பிடி வளந்தென்ன சில விசயங்களில நாங்கள் இன்னும் எத்தனையாம் நூற்றாண்டில நிக்கிறமெண்டே தெரியேலைப் பாருங்கோ! அந்த நாளையில தங்களுக்கு பிடிச்ச பொம்பிளையை ஆளணியோட போய் குதிரை வண்டிலிலையும், மாட்டு வண்டிலிலையும் கடத்திக்கொண்டு வந்து திருமணம் செய்யிறவை. அப்பிடிச் செய்தாத்தான் தங்களுக்கொரு கௌரவம்(?) இருக்கெண்டு சமுதாயம் நம்புமென நினைப்பு அவையளுக்கு. இவையள் தூக்கிறதுக்கும் காவிறதுக்கும் அந்த பொம்பிளைக்கு சம்மதமோ இல்லையோ எண்டதைப் பற்றி எல்லாம் சிந்திக்கிறேலை. தங்களிட்டை இருக்கிற பணத்தையும், ஆளணியையும் வைச்சு எதையும் சாதிச்சுப் போடலாம் எண்ட துணிவுதான் அதுக்குக் காரணம்.

இவையள் தூக்கிக்கொண்டு போய் அங்கின மறைச்சு வைச்சிருந்திட்டு ரெண்டு மூண்டு நாளைக்குப் பிறகுதான் அதுகளுக்கு வெளியுலகையே காட்டுறது. அதுக்குப்பிறகு தங்களை ஆரும் கட்டமாட்டினமெண்டு பயத்தில அதுகளும் அவையளே கதியெண்டு வாழத்தொடங்கி விடுறதுமுண்டு. இதால தட்டிக்கேக்க ஆளில்லையெண்டா தம்பி சண்டைப்பிரசண்டம் எண்டகணக்கா அந்தநாளில பல பிருதிவிராசன்மார் உருவாகியிருந்தவை. ஆனாலும் சிலவேளையில அதுகளின்ர உறவுகள் ஆரும் சண்டியரா இருந்துவிட்டா, தங்கட வீரத்தைக்காட்டி வேறையாருக்கும் கட்டிக்குடுப்பமெண்டு அவையளிட்ட இருந்து பிடுங்கியந்து எங்கையாவது கண்காணாத தூரத்துக்கு, ஏன் சீமைக்குகூட கொண்டு போனவையும் இருக்கினம்.

பொம்பிளையள் எண்டுறது அப்ப அவையளின்ர கண்ணுக்கு ஒரு விளையாட்டுப் பொம்மை மாதிரித்தான்! அவை தூக்கிக்கொண்டு போறதும் இவை பறிச்சுக் கொண்டுவாறதையும் பாத்தா எதோ ஒளிச்சுப்பிடிச்சு விளையாடுற மாதிரித்தான் இருக்கும். இவையளின்ர இந்த 'சித்து, விளையாட்டுக்களால எத்தனையோ பொம்பிளையள் அந்த நாளையில தங்களுக்கு கல்யாணமே வேண்டாமெண்டு தனியாவே வாழ்ந்திட்டு போயிருக்குதுகள்.

காலப்போக்கிலையும், அறிவு வளர்ச்சியிலயும் எப்பிடியோ உதுகள் மெல்லமெல்ல மறைஞ்சு போனாலும் 'பஞ்சம் தீரும் பஞ்சத்தில பட்ட வடுதீராது' எண்ட கணக்கா இன்னும் கனபேரிட்ட அந்த 'பிருதிவிராச' எண்ணம் ஒட்டிக்கொண்டு தானிருக்குது!

'மரம் சும்மா இருந்தாலும் காத்து விடாது, எண்ட சீனன்ர பழமொழிபோல அந்தப் பிள்ளையை பெத்ததுகளுக்கும் இவர் தினமும் ஆலாபனை வேற...... இவற்ற ஒப்பாரியைக் கேட்டுக்கேட்டு அதுகளுக்கும் பயம் வந்திட்டுது. எங்க விட்டா பிருதிவிராசன் கணக்கா பிள்ளையை தூக்கிக்கொண்டு போனாலும் போயிடுவானோ எண்ட பயத்தில அதுகளும் நாடு மாறுற நிலைக்கே வந்திட்டுதுகளெண்டாப் பாருங்கோவன்.

**மனம் ஒத்துப்போகேல்லையெண்டு பிரிஞ்சுபோறதுதான் நாகரிகமெண்டு அவையே நினைக்கிற உலகில் விருப்பமில்லாத அந்தப்பிள்ளையை கட்டாயப்படுத்திக் கட்டி இவர் என்னதான் சந்தோஷப்படப் போறாரெண்டு எனக்கெண்டா ஒண்டுமா விளங்கேலை...**

காதலிச்சுக் கட்டினதுகளே (ரெண்டு மூண்டு பெத்தாப்பிறகும்!) மனம் ஒத்துப்போகேல்லை எண்டு பிரிஞ்சுபோறதுதான் நாகரிகமெண்டு அவையே நினைக்கிற உலகில, (இஞ்சை வருமானத்துக்கா விவாகரத்து செய்யிறவையை எல்லாம் இதில சேத்துப் போடாதையுங்கோ) விருப்பமில்லாத அந்தப்பிள்ளையை கட்டாயப்படுத்தி கட்டி இவர் என்னதான் சந்தோஷப்படப் போறாரெண்டு எனக்கெண்டா ஒண்டுமா விளங்கேலை.

உவரை நினைக்க தத்துவஞானி ப்ளாட்டோ சொன்ன வரி ஒண்டுதான் ஞாபகத்துக்கு வருகுது பிள்ளையள். 'மனமில்லாத பெண்ணை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து, ஒரு எதிரியை உருவாக்குகிறதைவிட, அமைதியாயிருந்து அவளை உன் நண்பியாக என்றாலும் ஆக்கிக்கொள்' எண்டதுதான்.

**அருமைத்தம்பி**




கருணா - பாசல், சுவிஸ்

- ஈழமுரசு எதிரொலிப் பகுதியில் பிரசுரிக்கப்படும் கருத்துக்கள் வாசகர்களுக்குடையதா ஈழமுரசினுடையதா?
- அவை முழுக்க முழுக்க வாசகர்களுடையதே.

ச.சங்கர், பாரிஸ்-18

- ஒரு உண்மையான செயற்பாட்டாளனை சோர்வடைய வைப்பது எது?
- உண்மையான செயற்பாட்டாளனுக்குச் சோர்வு கிடையாது.

இ.றங்கன் - லியோன், பிரான்ஸ்.

- வட்டிக்குப் பணம் கொடுப்பது இல்லாதவர்களுக்கு உதவும் ஒரு நடவடிக்கைதானே குப்தனாரே?
- அது உதவியில்லை வியாபாரம்!

கஜன்- சூரிச், சுவிஸ்.

- நமது மாவீரர்களின் தியாகத்தை எதற்கு ஒப்பிடலாம்?
- அவை ஒப்பீட்டுக்கு அப்பாற்பட்டவை.

ச.சரஸ்வதி - லண்டன்.

- சோகங்களில் பெரிய சோகம் என்ன குப்தனாரே?
- 4 இலட்சம் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் வசதியாக இருந்தும்- வன்னி மண்ணில் தமிழ் குழந்தைகள் பட்டினியால் செத்துக்கொண்டிருப்பது.

இ.ராதிகா -பேர்லின், ஜேர்மனி.

- இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால் கலைஞர் ஆட்சி கலைக்கப்படுமா?
- கலைஞர் பிழைக்கத் தெரிந்தவர். அதேநேரம் பாரதீய ஜனதா, காங்கிரஸ் பாணியில் நடக்க முன்வராது என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால் கலைஞருக்கு நெருக்கடி இருக்கும் என்பது உண்மை.

தி.ராகவன் - பாரிஸ்-20.

- யாழ்ப்பாணத்தில் இப்போது என்ன நடக்கிறது?
- ஒரு பக்கம் விடுதலைப் புலிகள் - மண்ணை மீட்க தீரத்துடன் போராடுகிறார்கள். மறுபக்கம் துரோகக் குழுக்கள் பதவியைப் பிடிக்க சுவரொட்டிப் போட்டி நடத்திக் கொண்டிருக்கின்றன.

சங்கையூர் – குமார், சுவிஸ்.

- தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களை தனக்குப் பிடித்தமான தலைவராக PLOT சித்தார்த்தன் கூறுகின்றாரே இது பற்றி உங்கள் கருத்தென்ன?
- அப்படிச் சொல்லியாவது யாழ்ப்பாண மக்களிடம் வாக்குப் பெறலாம் என்று நினைக்கிறார் போலும்.

சி.வதனி-லண்டன்.

- இந்திய அரசின் தடையை மீறி புதுடெல்லியில் நடைபெற்ற தமிழீழ ஆதரவு மாநாடு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
- தமிழீழ விடுதலைப் போரையும் விடுதலைப் புலிகளையும் ஆதரிக்கும் இந்திய மக்களின் உணர்வுகளையும் தொடர்ந்து தடை செய்து வைத்திருக்க முடியாது என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.


கிருஷ்ணா அச்சகம்

விலைகள் குறைவு! குறித்த தவணை!! தரமான வேலை!!!

London Models திருமணஅழைப்பிதழ்கள்!

உங்கள் தேர்வுக்காக 200ற்கும் மேற்பட்ட மாதிரிகள்....

சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும், மொழிபெயர்ப்புத் தேவைகளுக்கும்...

Imprimerie KRISHNA

73, Rue Doudeauville, 75018 Paris.

M°: Marcadet Poissonniers / Château Rouge

மொழிபெயர்க்கப்பட்ட உங்கள் ஆவணங்கள் மீளப்பெறும் வகையில், ஐந்து வருடங்கள் வரை எங்கள் கொம்பியூட்டர்களில் பாதுகாத்து வைக்கப்படுகின்றன...

உங்கள் வண்ணக்கலர் வேலைகளுக்காக எங்கள் நவீன அச்சு இயந்திரங்கள்...



வெளிநாடுகளிலிருந்து அச்சுப்பதிப்பு வேலைகளை எம்மிடம் செய்துகொள்ளவிரும்புவர்கள் தபாற்பொதி மூலமும் பெற்றுக்கொள்ளலாம்!

Tél : 01 42 51 29 92

Fax. : 01. 42. 51. 35. 25


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளதைக் கொஞ்சம் ஒழுங்காக் கதைப்பம்

கருணாகரமூர்த்தி என்ற அன்பர் ஜேர்மனியில் இருந்து ஈழமுரசின் முழக்கம் 154 இல், எதிரொலிக்கு அனுப்பி வைத்த கருத்துக்களுக்கு சின்னதாய் எண்டாலும் விளக்கம் சொல்லவேணும் எண்டது சடையரின் கடமை. எழுத்துக்களில் இனவாதப்போக்கு காணப்படுவதாகவும், சின்னத்தனமான எழுத்துக்கள் எமக்கு ஒருபோதும் புகழ்சேர்க்காது எண்டு சின்னதாகச் சாடியிருந்தார். எங்களின் இருத்தலை உறுதிசெய்யப் போராடுகின்ற நாம் இன்னொரு இனத்தின் இருத்தகுது. சிங்களவன் தேர்தலில் வெண்டால் புளுகத்தில அடி.... தோத்தால் ஆத்திரத்தில அடி எண்ட வரலாற்றை மறக்க முடியிறதில்லை.

எங்கட விடுதலைப் போராட்டத்தின்ர மெய்யூற்றே இந்த அவலங்களின் உண்மையில இருந்துதான் ஊற்றெடுத்தது எண்டு எல்லாருக்கும் தெரியும்.

இப்ப..... குண்டடிச்சாலும் பயங்கரவாதிகள். குடல் அறுத்தாலும் பயங்கரவாதியள்.... இதுதான் சிங்களத்தில தமிழருக்கு

தமிழரை பழித்தபோதும் இழித்தபோதும் அவர்கள் மகிழ்ந்தார்கள். தமிழர்கள் தாக்கப்பட்டபோது அவர்கள் பெருமை கொண்டார்கள். தமிழரை அவர்களது தாயகத்தில் இருந்து விரட்டும் கொடுமையான இனவெறி யுத்தத்திற்கு அவர்கள் வேறுபாடுகளை மறந்து இணைந்தார்கள்.

ஆனால் மாறாக.... அழியும் இனத்தில் இருந்து... அழிக்கும் இனத்துக்கு கொடி பிடிக்க எத்தனை தமிழர்கள்? போராட்டத்தையே அழிக்க முன்னின்று உழைக்கும் புல்லுருவிகள் எத்தனைபேர்? சிங்கள இனவாதத்திற்கு கேடயமாய் தம்மை முன்னிலைப்படுத்தி உலகவலம்வரும் உலுத்தர்கள்தான் எத்தனை பேர்?

இது ஒருவகையினர் என்றால்... இன்

கரவாதிகள் எண்டு சிங்களவர் விளிக்காத காலம் வந்த பின்னால்.... ஒருவேளை சாத்தியப்படும். அதுவரை சொல்லிலும் செயலிலும்... எழுதும் போக்கிலும் கடுமை இருப்

### சடையர்

பது தவிர்க்க முடியாதே.

**தேன்தடவி... சொல்லெடுத்து...**
**வாழ்த்துப்பா பாடுவதும்.**
**கைகோர்த்து சிங்களமும் தமிழும்...**
**சேர்ந்து விளையாடுவதும்...**
**சிரிப்பதுவும்... சீண்டுவதும்**
**சடுகுடு ஆடுவதும்...**
**ஒரிலையில் உணவிட்டு... பகிர்ந்து**

# சின்ன விளக்கம்! ஆனால்... நீண்டு போயிட்டுது!

லில் உள்ள நியாயத்தை புரிந்து கொள்ளாதவர்கள் அல்ல.... என லைற்றாக குட்டி.... சிங்களப் பிள்ளையள் எண்டு எழுதுவது இனத்துவேசம் கலந்த தொனியிலானது எண்டும் திட்டியிருக்கிறார்.

பொதுவாக அன்பர் கருணாகரமூர்த்திக்கு எண்டில்லாமல் சில தமிழ் நண்பர்களுக்கு இப்படியான மனிதப்பண்பியலின் உயர்ந்த சிந்தனைகள் கருத்துக்கள் தோன்றுவதால் இதற்கொரு பொதுவான விளக்கம் கொடுப்பது சிறப்பானதே.

உண்மையில எங்கட இனத்திலதான்... மனிதாபிமானமும் மனித உரிமை மீதான பற்றுதலும் உலகம் தழுவிய பரந்த அன்புப் பிணைப்பும் கொண்ட ஜீவாத்மாக்கள் இருக்குதெண்டது உண்மை. சிலபேர் அறிவும் ஆற்றலும் உலகப்பண்பியலும் நாகரிகமும் மனதளவில் வாய்க்கப்பெற்ற நல்ல மனிதர்களாக நடிக்கிறது. அவர்கள், தமிழீழ தேசத்தவன், தமிழன் எண்ட எல்லை கடந்து மனிதன் என்ற பெருங்கடலில் நீச்சலடிக்கிற அதிலும், முழுமனித இனத்தையே நேசிக்கக்கற்றுக்கொண்ட மகாத்மாக்களாக நடிக்கிறது.

சரி... என்னத்துக்கு வீண் கதையள். விசயத்துக்கு வருவம்.

தமிழரைப் பிடிச்சு ஆயிரம் இரண்டாயிரம் எண்டு அள்ளிப்போட்டு... பயங்கரவாதியள் பிடிக்கப்பட்டார்கள்... பயங்கரவாதிகள் சிறையில் கொல்லப்பட்டார்கள் எண்டுதான்.... சிங்களப் பத்திரிகையளும் ஆங்கிலப் பத்திரிகையளும் தலையங்கம் எழுதுது. தமிழனுக்கு அடிச்சால்தான் தேர்தலில் வெற்றியெண்ட ஒரு வகுக்கப்படாத விதியே சிங்களத்தில வழக்கில இருக்

வைக்கப்பட்ட பெயர். உலக அரங்கில மனிதப் படுகொலைகளுக்கும் இனப்படுகொலைகளுக்கும் இந்தப் பதம் நல்ல கவசமாக இருக்கிறபடியால்... சிங்கள அரசாங்கம் இலாவகமாகச் சுழட்டியாடுது.

**தமிழரை பழித்தபோதும் இழித்தபோதும் அவர்கள் மகிழ்ந்தார்கள். தமிழர்கள் தாக்கப்பட்டபோது அவர்கள் பெருமைகொண்டார்கள். தமிழரை அவர்களது தாயகத்தில் இருந்து விரட்டும் கொடுமையான இனவெறி யுத்தத்திற்கு அவர்கள் வேறுபாடுகளை மறந்து இணைந்தார்கள்.**

நாங்கள் ஆண்டாண்டு காலமாய் அடக்கப்பட்டு வந்த இனம்... திட்டமிட்டு அழிக்கப்பட்டு வந்த இனம். ஆனால்.... அடக்கப்படும் சிங்கள இனத்தில் இருந்து ஒரு மனிதாபிமானியும் தமிழரைக் காக்கப் புறப்படேல்ல. எந்தச் சிங்கள அறிவு ஜீவியும் தமிழருக்காக போராட்டம் நடத்தேல்ல. எந்தச் சிங்கள முற்போக்கு வாதியும்... தமிழரைக் காக்க கொடி பிடிச்சுக் களம் இறங்கேல்ல. ஜீவகாருண்யம் நிறைந்த எந்த புத்தமதத் துறவியும் தமிழரின் நிலைகுறித்து கண்ணீர்வடிக்கத் தயாராக இல்லை.

னொரு வகையினர் சற்று வித்தியாசமானவர்கள்.

சிங்களவன் தமிழனைக் கொன்றொழித்தால் நமக்கென்ன என்று முகம் திருப்பி சொந்தவாழ்க்கையின் சுகம் தேடும் நம்மவர் சிலர்... கொழும்பில் குண்டென்றால்.... எல்லைப்புறத்தில்... திட்டமிட்ட குடியிருப்பில் வெடிப்பென்றால் அடித்துப் பதறி.... 'மோட்டு வேலை... அப்பாவிகள் எத்தனைபேர்' என்று கணக்குத் தேடுவினம்.

பக்குவமாய்... சிங்களவரை பாங்குடன் விளிக்க வேண்டும்... என்பது சரிதான்... மெத்தச் சரி. ஆனால் தற்போது ஒத்துவராதாம். ஒருவேளை... தமிழீழம் விடுதலையடைந்த பின்னர்... தமிழர்களை பயங்

**விருந்துண்டு...**

எல்லாம்... இப்ப கனவு.... இப்பிடி பாடுறவன்... நிஜத்தைத் தரிசிக்கும் கவிஞனாய் இருக்கமுடியாது. இப்படிப்பாடினால்.... ஒரு வேளை சமாதானக் கவிஞன் என்ற பதக்கம் கிடைக்கக்கூடும்.

சிங்களத் தேசியத்தை நாங்கள் பழிக்கேல்ல.... சிங்கள தேசத்தின் இருப்பை நாங்கள் கேள்விக்குறியாக்கேல்ல. அவர்களின் இருப்பிற்கு எந்தத் தமிழரும் சவால் விடேல்ல...

இதில... எந்தக் கருணை உள்ளம் கொண்டவர்களுக்கும் சந்தேகம் தேவையற்றது.

இது எங்கட இருப்பிற்கான கூப்பாடு... எல்லாரும் சேர்ந்து கத்தினால்தான்... குரல்நசிஞ்சு சாகாமல் நாங்கள் தப்பிக்கலாம். சிங்களவனின்ர வாழ்க்கை வரம்பிற்குள்ள தப்பித்தவறியும் உள்நுழைய நாங்கள் விரும்பமாட்டம். ஆனால் எங்கட வயற்காட்டுக்க உள்நுழையிற காட்டெருமையை விரட்ட குரல்குடுக்கிறம். அது கொஞ்சம் சுதிதப்பித்தான் இருக்கும். குரல் பிசிறும். இதில இனிமையான சங்கீதம் நிச்சயமாய் இருக்காது.

### ஒரு அலசல்

இந்தக் கூப்பாட்டில் இருந்து... சடையர் தன்னை மெல்லமாக கழட்டிக்கொள்ள விரும்பவில்லை. கர்ணகலீரமாக இருந்தாலும் இதுதான் தேவையாக இருக்குது.

ம்....!! எங்க நீங்களும் சேர்ந்து கத்துக்கோ பாப்பம்.

**பாடசாலை மாணவர்களுக்கான Maths, Physique, Biologie, Chimie, Anglais Français, Informatique வகுப்புக்கள்,**

**6e, 5e, 4e, 3e... Terminal வரை**

Cp இலிருந்து Cm2 வரை வீட்டுப்பாடங்கள் செய்ய, புத்தகங்கள் வாசிக்க நாம் உதவுகிறோம்.

**புதன் பி.ப. 2 மணி, ஞாயிறு காலை 10 மணி முதல் சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறுமிடம்**
**41, Rue Didot, 75014 Paris. M°: Pernety (Dir N°:13)**
**Tel: 01 42 57 23 56**

**திங்கள், செவ்வாய், புதன் வகுப்புகள் நடைபெறும் இடம்:**
**4, Rue Esclagnon, 75018 Paris. Église Sainte Helene**
**M°: Porte De Clignancourt**

**புதிய பிரெஞ்சு வகுப்பு**
04.01.98 ஞாயிறு காலை 10 மணி.
27.12.97 சனி மாலை 4 மணி.
23.12.97 செவ்வாய் பி.ப 3.30 மணி (Paris 18 இல்).

**புதிய ஆங்கில வகுப்பு**
04.01.98 ஞாயிறு காலை 10 மணி -பேச்சுப் பயிற்சி வகுப்பு
03.01.98 சனி பி.ப. 3.30 மணி.


**புதிய கம்பியூட்டர் வகுப்பு**
04.01.98 ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணி.

**கராத்தே வகுப்புகள்**
04.01.97 ஞாயிறு பி.ப 3 மணி.
சிறுவர்களுக்கான தமிழ், ஆங்கிலம், கணித வகுப்புகள் பிரதி சனி தோறும் பி.ப 1.30 மணிக்கு.
நடன, வயலின், சங்கீத, ஓர்கன் வகுப்புகள் சனி பி.ப 1.30 மணிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ஜ.க. நிலையான ஆட்சி அமைக்கும்

**- வாழப்பாடி**



'பாரதீய ஜனதாக் கட்சியால் தான் நிலையான ஆட்சியை அமைக்க முடியும் என்ற நிலை தான் இருக்கிறது' என்று தமிழ் நாடு மக்கள் காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராம மூர்த்தி தெரிவித்தார்.

சென்னை சாஸ்திரி நகரில் கட்சி அலுவலகம் ஒன்றை கடந்த வாரம் திறந்து வைத்து நிருபர்களிடம் கூறுகையில், காங்கிரசில் இருந்து மமதா பானர்ஜி, ரங்கராஜன் குமார மங்கலம், மணி சங்கர் அய்யர் ஆகியோர் விலகியிருப்பது அக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள இமா லய சரிவு என்று தெரிவித்தார்.




# பாரதீய ஜனதா கட்சியில் முன்னாள் மத்திய அமைச்சர்கள்

காங்கிரஸ் கட்சியில் இருந்து கடந்த 23.12.97 விலகிய முன் னாள் மத்திய அமைச்சர் ரங்க ராஜன் குமார மங்கலம், பாரதீய ஜனதா கட்சியில் 24.12.97 அன்று இணைந்து செயல்படுகின்றார்.

பாரதீய ஜனதா கட்சித் தலைவர் அத்வானி, வாஜ்பாய் ஆகியோரை சந்தித்து அக்கட்சி யில் இணைந்த குமாரமங்கலம் 'சேவை மனப்பான்மை கொண்ட இளைஞர்களை வர வேற்கக்கூடிய ஓரே தேசிய கட்சி பாரதீய ஜனதா கட்சிதான் என்று தெரிவித்தார்.' தமிழ் மாநில காங்கிரஸ் அல்லது அ.தி.மு.க.வுடன் காங்கிரஸ் கூட் டணி ஏற்படும் என்று பெரும் பாலான தலைவர்கள் எதிர் பார்த்தனர். அவ்வாறு கூட் டணி ஏற்பட்டால் தங்களுக்கு தேர்தலில் வெற்றி நிச்சயம் என் றும் அவர்கள் கருதினார்கள். ஆனால் அவற்றுக்கு வாய்ப்பு இல்லாத நிலையில், தங்களது அரசியல் எதிர்காலத்தைக் கருதி பெரும்பாலான தலைவர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளி யேறி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, தமிழகத்தில் காங்கி ரஸ் கட்சிக்கு எதிர்காலமே இல்லை என்பதை உணர்ந்து அக் கட்சியில் இருந்து வெளி யேறுவதாக குமாரமங்கலம் அறிவித்துள்ளார்.



வாழப்பாடி ராமமூர்த்தி ஆரம்பித்துள்ள தமிழ்நாடு மக் கள் காங்கிரஸ் கட்சியில் இணை யவும் திட்டம் இட்டுள்ளார். இது தொடர்பாக வாழப்பாடி ராமமூர்த்தியுடன் குமாரமங் கலம் தொடர்புகொண்டு, அவ ரது கட்சியில் இணைய விரும் புவதாகவும், தேர்தலில் போட் டியிட வாய்ப்பு அளிக்கவேண் டும் என்றும் கோரினார். தமிழ் நாடு மக்கள் காங்கிரசுக்கு ஒரு தொகுதியை மட்டும் தர ஜெய லலிதா தயாராக இருப்பதால் அத் தொகுதியில்தான் போட் டியிட விரும்புவதாகவும் ராம மூர்த்தி தெரிவித்தார். சேலம், திருச்செங்கோடு அல்லது பழனி ஆகிய தொகுதிகளில் ஏதாவது ஒன்றில் தமிழ்நாடு மக்கள் காங் கிரஸ் சார்பில் தான் போட்டி யிட ஜெயலலிதாவிடம் கேட்ட தற்கு, தனது கட்சிக்கு ஒரு தொகு திக்கு மேல் வாய்ப்பு இல்லை என்பதை திட்டவட்டமாக ராமமூர்த்திக்கு தெரிவித்தார். ஜெயலலிதா, தேசியக்கட்சி என்ற முறையில் பாரதீய ஜனதாவுக்கு ஜெயலலிதா கணிசமான தொகு திகளை கொடுக்கக்கூடும் ஆகை யால், அதற்கு ஒதுக்கப்படும் தொகுதிகளில் ஒன்றில்தான் போட்டியிடலாம் என்று தெரி வித்தார்.

தேர்தலில் போட்டியிட வாய்ப்புக்கிடைக்கும் என்பதற் காக ரங்கராஜன் குமாரமங் கலம், பாரதீய ஜனதாக் கட்சி யில் சேர்ந்துள்ளது அவரது ஆத ரவாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சேலம் அல் லது திருச்செங்கோடு தொகுதி யில் பாரதீய ஜனதாக்கட்சி மூலம் போட்டியிட விரும்புவ தாக தெரியவருகின்றது.

இதேவேளை நரசிம்ம ராவ் தலைமையிலான காங்கிரசில் அரசியல் அமைச்சராக இருந்த அஸ்லம் ஷேர்கான் கடந்த வாரம் டெல்லியில் அத்வானி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சியில் இணைந்துள்ளார்.

# ஜெயலலிதாவை வீழ்த்தும் கட்சிகளுடன் கூட்டணி

"ஜெயலலிதாவை வீழ்த்தும் கட்சிகளோடு கூட்டணி வைத் துக் கொள்வோம் என்று அ.தி. மு.க.வின் (திருநாவுக்கரசு) அணி யின் பொதுச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசு சென்னையில் கடந்த புதன் கிழமை தெரிவித் துள்ளார்.

தேர்தல் கூட்டணி குறித்து சில கட்சிகளுடன் பேச்சு நடா- த்தி வருகின்றோம். எங்களது சுய மரியாதைக்குப் பாதிப்பு வரா மல் கூட்டணி அமைப்போம். கூட்டணி அமைக்க முடிய வில்லை எனின் தேர்தலில் தனித்து போட்டியிடுவோம். எந்தக் கட்சிக்கும் தார்மீக ஆத ரவுகொடுத்துவிட்டு விலகிநிற்க மாட்டோம்.

அ.தி.மு.க.வில் அமைக்கப் பட்டுள்ள கூட்டணி பலவீனமா னது. அதனால் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறமுடியாது. நீதியானஆட்சியைத் தருவோம் என்று கூறும் பா.ஜ.க. நீதிமன் றத்தால் குற்றம் சுமத்தப்பட் டுள்ள ஜெயலலிதாவுடன் கூட் டணி வைத்துக்கொண்டதால் அகில இந்திய அளவில் அக் கட்சிக்கு பாதிப்பு ஏற்படும். ஜெயலலிதா மீது மக்கள் கொண் டுள்ள அதிருப்தி இன்னும் மாற வில்லை. இந் நிலையில் அவரை எதிர்த்து பிரச்சாரம் செய்த ராமதாஸ், வை.கோபால்சாமியும் ஜெயலலிதாவுடன் இணைந் துள்ளமை மக்களின் அதிருப் தியே மேலும் அதிகமாக்கியுள் ளது மக்களவைத் தேர்தலில் வெளிப்படும். மொழி, இட ஒதுக்கீடு போன்ற திராவிட இயக்கக் கொள்கைகளுக்கு எதி ரான பா.ஜ.கவுடன் ஜெயலலிதா அமைத்துள்ள கூட்டணி, தமிழ் மக்களுக்கு எதிரான கூட்டணி.

டெல்லியில் எந்தக் காங்கி ரஸ் தலைவரையும் சந்திக்க வில்லை. தேர்தலில் 10 தொகுதி கேட்கவும் இல்லை. இரட்டை இலை சின்னம் குறித்து தேர் தல் ஆணைக் குழுவில் வழக்கு தொடரப்பட்டு விசாரணைக் காக வந்தது. அவ்வழக்கை இரு தரப்பிலும் விசாரணை செய்த நீதிபதி மறு திகதி இன்றி வழக் கைத் தள்ளி வைத்துள்ளார். அதனால் தான் நான் டெல்லி சென்றேன் என்று மேலும் தெரி வித்தார் திருநாவுக்கரசு.

# தேர்தலுக்கு பின்பு கூட்டணி தொடரும்

"தேர்தலுக்குப் பின்பு என்ன நடக்கும் என தற்போது திட்ட வட்டமாக கணிக்க முடியாது. எனினும் அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி தேர்தலுக்கு பின்பு நீடிக்கும்" என்று அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெய லலிதா கடந்த புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

'எங்கள் கூட்டணியில் தொகுதி பங்கீட்டில் பிரச்சி னைகள் இல்லை. மாறாக அது குறித்து பேச்சுவார்த்தை நடை பெற்று வருகிறது. அ.தி.மு.க திராவிடக்கட்சியா என்று கரு ணாநிதி கேட்டார். 'பா.ஜ.க. ஆதரவுடன் 1989-ல் அமைத்த மத்திய அரசில் மாறன் இடம் பெற்றாரே தி.மு.க திராவிடக் கட்சியா?' என நான் கருணா நிதியிடம் திருப்பி கேட்கிறேன். கருணாநிதி பதில் சொல்லட் டும். பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்தால், எங்களுக்கு கிடை- க்க வேண்டிய சிறுபான்மையின ரின் வாக்குகள் சிதறாது. பா.ஜ.க. வலுவாகவுள்ள மாநிலங்களி லும், ஆட்சி செய்யும் மாநிலங் களிலும் சிறுபான்மையினர் எவ் வகையிலும் பாதிப்பு அடைய வில்லை. எங்கள் கூட்டணியில் நாங்கள் உறுதியாக இருக்கின் றோம். சில கட்சிகள் எங்களு டன் இணைய ஆதரவு தெரி வித்தன. அக் கட்சிகளை வர வேற்கின்றோம். ஆனால் எங் கள் கூட்டணியில் புதிய கட்சி களை சேர்க்க வாய்ப்பு இல்லை. ஏற்கனவே உள்ள கட்சிகளுக்கு இடையேதான் கூட்டணி. பெரும்பாலான இடங்களில் அ.தி.மு.க போட்டியிடும்.

தேர்தல் திகதி இன்னமும் அறிவிக்கப்படாததால், தொகு திப்பங்கீட்டை பற்றி அறிவிக்க இன்னமும் கால அவகாசம் உள்ளது. எங்கள் கூட்டணி வெளிப்படையான கூட்டணி யாகவுள்ளது. எங்கள் கட்சி வேறு, எக்கட்சியுடனும் இரகசி யமான தொடர்புகள் இல்லை என்றார் ஜெயலலிதா.

# எம்.ஜி.ஆர். சிலை கருணாநிதி திறப்பு

## தலைவர்கள் அஞ்சலி

முன்னாள் முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரனின் 10-ம் ஆண்டு நினைவு நாளையொட்டி சென் னையில் எம்.ஜி.ஆரின் உருவச் சிலையை கருணாநிதி திறந்து வைத்ததை தொடர்ந்து மற்றும் தலைவர்கள் அஞ்சலி செலுத்தி ஊர்வலங்கள், கூட்டங்கள் நடாத்தினார்கள்.

கடந்த வாரம் மெரினா கடற் கரையில் உள்ள எம்.ஜி.ஆரின் நிறைவுத்தூபிக்கு தலைவர்கள் அஞ்சலி செலுத்தியதுடன் வெண்கலத்தால் செய்யப்பட்ட எம்.ஜி.ஆரின் உருவச்சிலையை திறந்து வைத்து, அ.தி.மு.கவின் எம்.ஜி.ஆர். கழகம் உட்பட பல் வேறு கட்சிகளின் ஊர்வலங் கள் நடாத்தப்பட்டு ஏழைக ளுக்கு அன்னதானமும் வழங் கப்பட்டது.

ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.கவினர் அமைதிப் பேரணி நடாத்தினர். ஜெய லலிதா உள்ளிட்ட அ.தி.மு.க முன்னணித் தலைவர்கள் மலர் அஞ்சலி செலுத்திய பின்பு ஜெயலலிதா முன்னிலையில் தொண்டர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்ட னர்.



அ.தி.மு.க. திருநாவுக்கரசு அணி, மதி.மு.க. அணி, அண்ணா தி.மு.க. அணி, மக்கள் நல உரி மைக்கழகம், தமிழ்நாடு காங்கி ரஸ் அணி உள்ளிட்ட பல அணி கள் ஊர்வலங்கள் நாடாத்தி, எம்.ஜி.ஆர் உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்தியமை குறிப் பிடத்தக்கது.


# சிவதயா தமிழ் அச்சகம்

★ உங்கள் சகலவித அழைப்பிதழ்களும் மிக அழகான, நவீன, தரமான அழைப்பிதழ்களிலும் மற்றும் சகல அச்சுப் பதிப்புகளுக்கும் குறித்த நேரத்தில் மிக விரைவாக செய்து தரப்படும்.

★ எம்மிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் நாம் இலவசமாக Model Cards உங்களுக்கு அனுப்பி, Fax or Telephone மூலமாக விபரங்களை பெற்று குறிப்பிட்ட தவணையில் உங்களுக்கு அழைப்பிதழ் களை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைப்போம்.

*Haupt Str - 13,*
*6313 Menzingen*
*(Zug, Switzerland)*
*Tel: & Fax: 41/ 7553192*

தொடர்புகளுக்கு:
Mr. K. Siva

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
தரமான அதிநவீன அழைப்பிதழ்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ஜ.க ஆட்சி அமைத்தால் தி.மு.க. அரசை கலைக்க கோருவோம்

பாரதீய ஜனதாக் கட்சி மத்தியில் ஆட்சிக்குவந்தால் தி.மு.க அரசை கலைக்க கோருவோம். இக் கோரிக்கை நிறைவேற்றும் வரை தொடர்ந்து வற்புறுத்துவோம் என்று அ.திமு.க அவைத் தலைவர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

சென்னையில் தமிழ்த்திரைப்பட வளர்ச்சிக் கழகத்தினால் நடைபெற்ற 'ஜெயின் ஆணையரின் அறிக்கை' ஆய்வுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறியதாவது, 1977-ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் குறைவான வாக்குகள் பெற்ற கட்சிகளில் 8 மாநில அரசுகள் கலைக்கப்பட்டன. இதேபோல் இந்திரா ஆட்சிக்காலத்தில் 9 மாநில அரசுகள் கலைக்கப்பட்டன. 1980-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு பின்பு அ.தி.மு.க. அரசை கலைக்க வேண்டும் என்று தி.மு.க வற்புறுத்தியதற்கு இணங்க அரசு கலைக்கப்பட்டது. இந்த அடிப்படையில் மத்தியில் பா.ஜ.க ஆட்சி அமைத்தால் தி.மு.க அரசை கலைக்க கோருவோம். பாரதீய ஜனதா கட்சி மதவாதக்கட்சி என்று கருணாநிதி கூறுகின்றார். 1977-ல் காங்கிரசுக்கு எதிராக அமைக்கப்பட்ட ஜனதாக்கட்சிக் கூட்டணியில் தி.மு.க ஜனசங்கம் உள்ளிட்ட கட்சிகள் இருந்தன. அ.தி.மு.க ஆட்சிக்காலத்தில் 69 சதவீத இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாக தமிழ்நாடு சட்டப்பேரவை ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தை பா.ஜ.க முழுமையாக ஆதரித்தது. 1967-ல் கூட்டணி வைத்த போது எக்கட்சியின் தனித்தன்மையும் பாதிக்கவில்லை.

பொது எதிரியை வீழ்த்த தொகுதிகளை விட்டுக்கொடுத்துத் தான் கூட்டணியை உருவாக்கியுள்ளோமே தவிர கொள்கைகளை விட்டுக் கொடுத்தல்ல என்றார் நெடுஞ்செழியன்.

# பா.ம.க. விலிருந்து தீரன் இடை நீக்கப்பட்டார்

பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலத் தலைவரும் சட்டப் பேரவை உறுப்பினருமான தீரன் கட்சியில் இருந்து இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இவ் இடைநீக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து பா.ம.க.வின் பொதுச்செயலாளர் தலித்- எழில் மலை கூறுகையில், கட்சியின் மாநிலத் தலைவரான தீரன் தலைமையில் 19.12.97 அன்று நடைபெற்ற அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவுக்கு முரண்பாடாக நடந்துள்ளார். இம்மாதம் 10,11 திகதிகளில் வேலூரில் நடைபெற்ற செயற்குழு, பொதுக்குழு எடுத்த முடிவுக்கு எதிராகவும், கட்சிக் கட்டுப்பாட்டை சீர்குலைக்கும் வகையிலும் பத்திரிகையில் அறிக்கை வெளியிட்டு கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். எனவே அவர் மாநிலத்தலைவர் பதவியில் இரு-ந்தும் அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் தற்காலிகமாக நீக்கப்பட்டார் என்று கூறினார்.

# தி.மு.க. கூட்டணியில் தொகுதி கேட்கிறது

## எம்.ஜி.ஆர் கழகம்

தி.மு.க. கூட்டணியின் தொகுதிகளை எம்.ஜி.ஆர் கழகத்துக்குத் பெற்றுத்தருமாறு அக்கழகத்தின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது.

சென்னை எம்.ஜி.ஆர். கழகத்தின் தலைவர் ஆர்.எம்.வீரப்பன் தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் முதல்வர் கருணாநிதி தலைமையில் எதிர்வரும் 17-ம் திகதி கோபிச்செட்டிப்பாளையத்தில் எம்.ஜி.ஆர் உருவச்சிலையொன்று திறக்கப்படவுள்ளதாகவும், அதை சிறப்பாக நடாத்த வேண்டும் என்றும் முடிவுசெய்தனர். இக்கூட்டத்தில் பல உறுப்பினர்கள் பங்கு பற்றினார்கள்.

# அ.தி.மு.க. கூட்டணியின் தொகுதிப் பங்கீடு

அ.தி.மு.க கட்சிகளுக்கு இடையே ஏறக்குறைய தொகுதிப்பங்கீடு முடிவாகிவிட்டது. புதுவை உட்பட தமிழகத்தில் உள்ள 40 மக்களவை தொகுதிகளில் அ.தி.மு.க 20 அல்லது 21 தொகுதிகளை வைத்துக்கொள்ளும். மீதமுள்ள தொகுதிகளில் ம.தி.மு.க 7, பா.ஜ.க 6, பா.ம.க 4, சுப்பிரமணிய சுவாமி, வாழப்பாடி ராமமூர்த்தி ஆகியோருக்கு தலா 1 தொகுதி என்று ஒதுக்கப்படலாம். கோவை, மதுரை, கடலூர், வந்தவாசி உள்ளிட்ட சில தொகுதிகளைப் பெறுவதில் கூட்டணிக்கட்சிகளுக்கிடையே போட்டி நிலவுகின்றது.

ம.தி.மு.க 13 தொகுதிகளையும். பா.ஜ.க 10 தொகுதிகளையும் கேட்டுள்ளன. ஆனால் தொகுதிகளை ஒதுக்குவதில் அ.தி.மு.க.வின் முடிவே இறுதியாக அமையலாம். ம.தி.மு.கவின் செய்தித் தொடர்பாளர் ராதாகிருஷ்ணன் மத்திய சென்னையிலும், வாலாஜா அசேன் வேலூரிலும், சபாபதி மோகன் கடலூரிலும் போட்டியிடலாம். இதற்கான விருப்பத்தையும் அ.தி.மு.க.விடம் ம.தி.மு.க தெரிவித்து விட்டது. பொன். முத்துராமலிங்கம் ராமநாதபுரம் தொகுதியில் போட்டியிட விரும்பினாலும், அவருக்கு திண்டுக்கல் தான் பாதுகாப்பான தொகுதி என்று மாவட்டக்கழகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஆலோசனை நடைபெற்று வருகின்றது. பா.ம.க சார்பில் கட்சியின் பொதுச்செயலாளர் தலித் எழில் மலை சிதம்பரத்திலும், பூ.தா. இளங்கோ தருமபுரி அல்லது திண்டிவனத்திலும் போட்டியிடலாம். பா.ஜ.க பொதுச்செயலாளர் பொன் ராதா கிருஷ்ணன், ஹெச், ராஜா, துணைத் தலைவர் மைத்ரேயன் ஆகியோரும் போட்டியிடலாம். புதிதாக இணைந்த ரங்கராஜன் குமாரமங்கலத்துக்காக கூடுதல் இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்று பா.ஜ.க கூறியதற்கு அ.தி.மு.க மறுத்து விட்டதாக தெரிய வருகிறது. பா.ம.கவின் வாக்குகள் அதிகமுள்ள இடங்களில் போட்டியிடுவார் வாழப்பாடி ராமமூர்த்தி என தெரிய வருகிறது.


# சென்னையில் தேர்தல் பிரச்சாரம்

## அத்வானி - வாஜ்பாய்

ஜனவரி இறுதியில் சென்னையில் நடைபெற இருக்கும் அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணியின் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பா.ஜ.க. தலைவர்கள் அத்வானி, வாஜ்பாய் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

மெரினா கடற்கரையில் இக்கூட்டம் நடாத்தப்படவுள்ளது. இதற்கான திகதி இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. என்பதால் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அ.தி.மு.க பொதுச்செயலாளர் ஜெயலலிதா கடந்தவாரம் தெரிவித்தார்.

# 90ம் நாள் நினைவஞ்சலி



## லெப்.கேணல் கோபி / இரும்பொறை

## பசுபதிப்பிள்ளை உதயகுமார் (உதயன்)

(அரியாலை - வவுனியா)

*முத்தாய் எங்களுக்குள் மூழ்ந்தவனே*
*சொத்தாகி எங்கள் சுகம் காக்க விழைந்தவனே*
*உதயா!*
*கண்ணாய்.... மண்ணின் கருமணியாய்*
*உடலோடு ஒட்டிப் பிறந்தவனே ஐயா!*
*கண்முன்னால் நின்ற உன் காட்சியினை காணவில்லை*
*மறைந்துவிட்டாய்*
*வீட்டுக்காய் உதயன் என விளைந்த அந்தச் சொத்தை*
*நாட்டுக்காய் இரும்பொறையாய் விதைத்து விட்டோம் வித்தாய்*
*பெருமைதான் எங்களுக்குள்....*
*என்றாலும் கண்ணீர்!!!*

இன்னும் இந்த விடுதலைக் களத்தில் விதையாகிவிட்ட 2ம் லெப். சின்னச்சதா, வீரவேங்கை செந்தூரன், வீரவேங்கை சதீஸ், கடற்புலி சுதாயினி, மேஜர் கரி உட்பட அனைத்து மாவீரர்களுக்கும்....

தாயின் மடியில்: 31.08.1967



தாயக மீட்பில்: 06.10.1997

*– பெற்றோர், சகோதர சகோதரிகள்*

*தொடர்புகட்கு: வனிதா (01 69 44 35 89)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தென்கொரியாவின் தன்மானத்தை விலைபேசும் அவசரத்துக்குதவிய பணக்கார சக்திகள்

தென்கொரிய பணச் சந்தையை சரிய வைத்த சந்தை முதலாளிகளின் செயலால் வங்குரோத்து நிலைக்கு தென்கொரியா தள்ளப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்தவிடயமே.

வெளிநாட்டுக் கடன்களால் கடந்த 50 வருட காலமாக இயங்கிவந்த தென்கொரிய நாணயமான Won-இன் பெறுமதி, அரைப்பங்கிற்குக் கீழ் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து தனது மாதாந்த வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் இரண்டு மடங்காகிய நிலையில் (முன்னைய 100 வொன் தற்பொழுது 200 வொன்னுக்குரியது) தன் வெளிநாட்டுக் கடன்களையும் அதன் வட்டியையும் செலுத்த முடியாத நிலைக்குள்ளாகியுள்ள தென்கொரியாவுக்கு சர்வதேச நாணயநிதியம், உலகவங்கி, வளர்ச்சியடைந்த நாடுகளின் கூட்டு ஆகிய பணக்கார சக்திகள் பலகோடி டொலர் பணத்தை கடனாக வழங்க முன்வந்துள்ளதோடு அதற்கு பிரதியுபகாரமாக நாட்டின் பொருளாதார முடிவுகளை தமது ஆலோசனைப்படி எடுக்குமாறு தென்கொரிய அரசை வலியுறுத்தியும் வருகின்றன. (97312261)

## விளாடிமீர் ஜிரி நொவ்ஸ்கியின் விமானம் ஈராக்கில் தரையிறங்கியது

ரஷ்ய தேசியவாதியான Vladimir Jirinovski வாடகைக்கு அமர்த்திய விமானம் பலத்த இராஜதந்திர சர்ச்சைகளின் பின் ஈராக் சென்றடைந்துள்ளதாக கடந்த 25.12.97 வியாழனன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிற்கு விமானங்கள் செல்ல ஐநா சபை 1991-ம் ஆண்டு தடை விதித்த பின் அங்கு சென்ற முதலாவது விமானம் ஜிரிநொவ்ஸ்கி வாடகைக்கமர்த்திய இவ் விமானமாகும்.

உணவு மற்றும் உதவிப் பொருட்களையும் பல ரஷ்ய பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஏற்றிப் புறப்பட்ட இவ் விமானம், ஈரானில் தடுத்து நிறுத்தப்பட்டு ஐ.நா சபையின் அங்கீகாரத்துடனேயே மீண்டும் பறக்க அனுமதிக்கப்பட்டது.

ஈராக் சென்றடைந்த ரஷ்ய பாராளுமன்ற உறுப்பினர்கள் பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்கையில், ஈராக் மீது அமெரிக்க தாக்குதல் ஒன்று நடைபெற்றால் மனிதக் கேடயங்களாக தாம் செயல்படப் போவதாக அறிவித்துள்ளனர். (97412271)

## பொலிசாரைச் சுட்டுவிட்டு கைதாகாமல் தப்பிய கார்லோசுக்கு ஆயுள்காலச் சிறைத்தண்டனை

ஜோர்ஜ் ஹபாசின் உறுப்பினராக இருந்த காலத்தில் இஸ்ரேலிய விமானக் கம்பனி மீது தாக்குதல் நடாத்தியது தொடர்பாக கார்லோஸ் எனப்படும் இல்யிச் ரமிரேஸ் சஞ்சேசுக்கு கைது செய்ய சென்ற பிரெஞ்சு உளவுப்படை அதிகாரிகள் இருவரையும் தன்னைக் காட்டிக்கொடுத்த சக போராளியையும் 1975-இல் சுட்டுக் கொன்றுவிட்டு தப்பியோடிய குற்றத்திற்காக கார்லோசுக்கு பிரெஞ்சு நீதிமன்றம் ஆயுள் காலச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

நீதிபதி தீர்ப்பை வழங்கு முன் சந்தேக நபரான கார்லோசுக்கு நீதிபதி வழங்கிய அவகாசத்தை திறம்படக் கையாண்ட கார்லோஸ், நான்கு மணிநேரம் உரையாற்றினார்.

தான் ஒரு திருடனோ, வெறும் குற்றவாளியோ அல்ல என உரைத்த கார்லோஸ் தான் ஒரு அரசியல் இயக்கத்தைச் சார்ந்தவன் எனவும் பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காக தான் செயற்பட்டதையும் கருத்தில் கொள்ளுமாறு ஜுரிகளிடம் வேண்டினார்.

எட்டுநாள் விசாரணையின் பின் ஆயுள் காலச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டபோது எழுந்து நின்று 'வாழ்க புரட்சி' எனக் கோசமிட்ட கார்லோஸ், தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார். (97231225)

## வதிவிட அனுமதியற்றவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட மாட்டார்கள் - பிரெஞ்சு பிரதமர்

மொரோக்கோ, செனகல் உட்பட பல ஆபிரிக்க நாடுகளுக்கான ஐந்து நாள் சுற்றுப் பயணம் ஒன்றை பிரெஞ்சுப் பிரதமர் லியனல் ஜொஸ்பன் அண்மையில் மேற்கொண்டிருந்தார்.

கடந்த காலங்களில் பிரான்சில் உள்ள வதிவிட அனுமதியற்ற ஆபிரிக்கர்கள் மனிதாபிமானமற்ற முறையில் பலவந்தமாக விமானங்களில் ஏற்றி அனுப்பப்பட்ட மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் தனது அரசில் இடம்பெறாது எனத் தெரிவித்த பிரதமர் லியனல் ஜொஸ்பன்,



சட்டப்படி பிரான்சில் வாழ அனுமதி மறுக்கப்பட்ட அனைவரும் கௌரவமாக பிரான்சில் இருந்து அனுப்பி வைக்கப்படுவர் எனத் தெரிவித்துள்ளார்.

அவர்கள் கௌரவமாக நாடு திரும்பி புதுவாழ்வு ஆரம்பிக்க புனர் நிர்மாண நிதியும் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (97412231)

## கம்பூச்சியாவில் பிரெஞ்சுப் பிரசை கைது M-16 வகை துப்பாக்கி மீட்பு

கம்பூச்சியாவில் ஹூன் சென்னினால் இளவரசர் ஆட்சி கவிழ்க்கப்பட்டு அங்கு கம்யூனிச சார்பு ஆட்சி உருவான பின் மீண்டும் குழப்ப நிலை தோன்றியுள்ளது.

ஆட்சி கவிழ்க்கப்பட்ட இளவரசர் பிரான்சிற்கு தப்பியோடினார். இச்சம்பவங்களின் பின் பிரெஞ்சுப் பிரசையான Patrik Bernard என்பவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து M16 வகை துப்பாக்கி ஒன்றும், லேசர் வகை இலக்கு நோக்கி ஒன்றும், சத்தமின்றி சுடும் கருவியும் மீட்கப்பட்டன.

தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றில் பணி புரிவதாக தெரிவித்த 'பற்றிக்'கிற்கு அனுமதியின்றி ஆயுதம் வைத்திருந்த குற்றத்திற்காக அவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதிப்பதாக கடந்த 26.12.97 அன்று கம்பூச்சிய நீதிமன்றம் அறிவித்துள்ளது (F 59751227)

## ஆசிய பொருளாதார சரிவு அமெரிக்க பொருளாதாரத்துக்கு அரியவாய்ப்பு

ஆசிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார ஸ்திரமற்ற நிலை அமெரிக்க பொருளாதார வளர்ச்சிக்கு அருமருந்தாக அமைந்துள்ளதாக அமெரிக்க பொருளாதார நிபுணர்கள் கருதுவதாக அமெரிக்க பொருளியல் சஞ்சிகையான Business Week சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது. 50-ற்கும் மேற்பட்ட அமெரிக்க பொருளியல் நிபுணர்கள் இக் கருத்தை வெளியிட்டுள்ளதாக அச் சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கான ஆசிய நாடுகளின் ஏற்றுமதி வீழ்ச்சி அமெரிக்க பொருட்களின் விற்பனையை அதிகரிப்பதோடு, வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்கவும் உதவும் எனத் தெரிவித்துள்ள அவர்கள் அமெரிக்காவில் தற்பொழுது வேலையில்லாத் திண்டாட்டம் 4% மாக உள்ளதையும் அமெரிக்காவில் 25 வருடங்களுக்கு முன் இருந்த நிலை இது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சீன, ஜப்பானிய சந்தைச் சரிவை ஆர்வமுடன் அமெரிக்கா எதிர்பார்ப்பதாக மேலும் அச் செய்திகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. (97312268)

## மொரோக்கோவில் பிரெஞ்சுப் பிரதமர் - பெருமளவு பொருளாதார உதவி

கடந்தமாத நடுப்பகுதியில் ஆபிரிக்க சுற்றுப் பயணத்தை ஆரம்பித்த பிரெஞ்சுப்பிரதமர் முதலில் மொரோக்கோ சென்றார்.

35 வருடங்களுக்கு முன்னர் ஆட்சியைக் கைப்பற்றிய மன்னர் ஹசன் II ஜனநாயக வழிக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றார் என பாராட்டிய பிரெஞ்சுத் தூதுக்குழு,

மொறோக்கோ செலுத்த வேண்டியுள்ள பழைய கடன்களில் ஒரு பகுதியை இரத்துச் செய்வதோடு மேலும் பெருமளவு பொருளாதார உதவியை வழங்கப்போவதாகவும் அறிவித்துள்ளது.

கடந்த நவம்பரில் இடம்பெற்ற தேர்தலை இரத்துச்செய்யும்படி கோரியுள்ள எதிர்க் கட்சிகள், மன்னர் ஹசன் II-ன் ஆதரவாளர்கள் ஊழல் நடவடிக்கையில் இறங்கினர் எனக் குற்றம்சாட்டியுள்ளன. (97312281)

## யூத படுகொலையை மறுத்துரைத்த லுபென்னுக்கு நீதிமன்றம் 3 இலட்சம் பிராங்குகள் தண்டனை விதித்தது

இரண்டாம் உலகப் போரின் போது நாசிப்படைகளால் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டது சில்லறை விடயம் என ஜேர்மனியில் தெரிவித்த பிரெஞ்சு தீவிர வலதுசாரிக் கட்சியின் தலைவருக்கு கடுமையான தண்டனை விதித்து பிரெஞ்சு நீதிமன்றம் கடந்த 26.12.97 வெள்ளியன்று தீர்ப்பளித்துள்ளது.

இனவாத அழிப்புக்களை நியாயப்படுத்திய குற்றத்திற்காக ஏற்கனவே தண்டனைக்குள்ளாகிய தேசிய வெறியனான லுபென் யூத சங்கங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதோடு பிரான்சில் வெளியாகும் முக்கிய பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தனது குற்றத்தை பிரகடனம் செய்து விளம்பரம் செய்யவேண்டும் என்றும் நீதிமன்ற கட்டளையிட்டுள்ளது. பத்திரிகையில் வெளியிடும் இம்மன்னிப்பு விளம்பரங்களின் செலவை அவர் பொறுப்பேற்க வேண்டும் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இத்தொகை 3 இலட்சம் பிராங்குகளை தாண்டும் என கணிக்கப்பட்டுள்ளது.

1000 பக்கம் கொண்ட இரண்டாம் உலகப் போர் வரலாற்றில் 12 வரிகளில் மட்டும் உள்ள யூதப்படுகொலை சில்லறை (Detail) விடயம் என்ற குற்றத்திற்காகவே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. வரலாற்றில் வார்த்தைகளின் எண்ணிக்கையல்ல சம்பவங்களின் முக்கியத்துவம்தான் முக்கியமானது என்பதை புரிய மறுத்த குற்றத்திற்காகவே இவருக்கு இத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வாகன சேவை

உங்கள் பொருட்கள் வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்

ரவி: 01 48 76 51 90 / 06 07 62 26 89 / 01 42 23 23 10

## மக்கள் தீர்ப்பையும் எதிர்த்து ஒக்கினாவாவில் புதிய அமெரிக்க தளம்

ஜப்பானில் நிலைகொண்டுள்ள 47 ஆயிரம் அமெரிக்கத் துருப்புக்களில் 75% மான படையினர், Okinawa தீவில் நிலைகொண்டுள்ளனர்.

இவர்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு புதிய மிதக்கும் விமானத்தளம் ஒன்றை Nago தீவுக்கு அண்மையில் அமைக்க அமெரிக்கா அனுமதிகோரியது.

இதற்காக Nago பிரதேச மக்களிடம் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்பட்டது. 2 ஆயிரம் அதிகப்படி வாக்குகள் அமெரிக்க படைத்தள விஸ்தரிப்புக்கு எதிராகக் கிடைத்த போதிலும் படைத்தளத்தை தொடர்ந்து அமைப்பதற்கு அனுமதியளிக்க Nago நகரசபை முடிவு செய்துள்ளது. (9721227 F)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கியூபாவில் முதலாவது நத்தார் பண்டிகை! பெத்தலகேம் வழிகளை இஸ்ரேல் மூடியது

இன, மத, பிரதேச வேறுபாடுகளால் பிளவுண்டு மோதும் சமூகங்களிடையே ஒற்றுமையும் மேன்மையும் தோன்றவேண்டும் என பிரார்த்தித்து பாப்பரசர் விடுத்த செய்தி உலகெல்லாம் ஒலித்திருக்க நத்தார் பண்டிகை கடந்த 25.12.97 வியாழனன்று உலகெல்லாம் கொண்டாடப்பட்டது.

யேசுநாதர் பிறந்த பெத்தலகேம் நகரில் உள்ள தேவாலயத்துக்கு கத்தோலிக்கர்கள் செல்லும் பாதையை இறுதி நேரத்தில் மூடிய இஸ்ரேல் குண்டுத் தாக்குதல் நடைபெறும் திட்டம் பற்றிய இரகசியத் தகவலே இம் முடிவுக்குக் காரணம் என அறிவித்துள்ளது.

பாலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பெத்தலகேம் நகரில் உள்ள தேவாலயத்திற்கு யாசீர் அரபாத்தும் அவரது கத்தோலிக்க மனைவி Souha-வும் சென்று வழிபட்டனர். பத்திரிகையாளர் மத்தியில் பேசிய Souha, 'கிறிஸ்தவர்கள் பெத்தலகேம் வருவதைத் தடுக்க இஸ்ரேலுக்கு உரிமை இல்லை' எனத் தெரிவித்துள்ளார்.

இது ஒருபுறமிருக்க, கியூபாவில் உள்ள கிறிஸ்தவர்கள் நத்தார் பண்டிகையை கொண்டாடும் முகமாக கியூபாவில் நத்தார் தினம் விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருந்தது. மதச் சார்பற்ற கியூபாவில் முதல் தடவையாக நத்தார் தினம் விடுமுறையாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (97221264)

# கொங்கோ ஜனநாயகக் குடியரசு மக்கள் சீனாவை முன்மாதிரியாகக் கொள்ளும்

**- கபிலா -**

சி.ஐ.ஏ.-யினால் பிரான்ஸ் போன்ற மேற்கத்தேய அரசுகளால் வளர்க்கப்பட்ட சர்வாதிகாரி முபுட்டுவை வீழ்த்தி பதவிக்கு வந்த கபிலா தனது முதலாவது வெளிநாட்டு சுற்றுப்பயணமாக சீனா சென்று திரும்பியபின் கடந்த 24.12.97 புதனன்று நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் 'மக்கள் சீனக் குடியரசை' மாதிரியாகக்கொண்டு கொங்கோ ஜனநாயகக் குடியரசு கட்டியெழுப்பப்படும் என உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

சேகுவேராவின் படையணியில் இருந்த கபிலா 1960 காலப் பகுதியில் மக்கள் சீனக்குடியரசில் இராணுவப் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மொரோக்கோவில் அடக்கம் செய்யப்பட்ட முபுட்டுவின் சடலம் கொங்கோ ஜனநாயகக் குடியரசுக்குக் கொண்டுவரப்பட்டு அடக்கம் செய்யப்பட வேண்டும் எனவும் அப் பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனாதிபதி லோறன் கபிலா தெரிவித்துள்ளார். (97412261)

# காலனித்துவ சக்திகளிடமிருந்து ஸாம்பியாவின் சுதந்திரத்தை வென்ற கெனத் கவுண்டா கைது

காலனித்துவ சக்திகளிடம் இருந்து ஸாம்பியாவின் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காக அளப்பெரும் தியாகங்கள் பல புரிந்த 'தேசத்தின் தந்தை' என வர்ணிக்கப்படும் ஸாம்பியாவின் முதலாவது ஜனாதிபதியை கடந்த 25.12.97 அன்று கைதுசெய்து ஸாம்பிய மக்களுக்கு 'நத்தார் பரிசு' வழங்கியுள்ளது ஸாம்பிய அரசு.

1964 முதல் 1991 வரை ஸாம்பிய ஜனாதிபதியாக இருந்த கெனத் கவுண்டா 70-களின் நடுப்பகுதியில் கூட்டுச்சேரா மாநாட்டுக்காக கொழும்பு வந்திருந்தபோது அதே மாநாட்டுக்காக கொழும்பு வந்திருந்த கியூப ஜனாதிபதி பிடல் காஸ்ரோவுடன் இணைந்து இலங்கைத் தமிழர்களின் இன்னல் குறித்து ஆர்வம் காட்டிய முக்கிய தலைவராவார்.

அங்கோலா, மொசாம்பிக், சிம்பாபே, நமீபியா போன்ற நாடுகளின் சுதந்திர இயக்கங்களுக்கும் அவர் நேரடியாக உதவியிருக்கின்றார். தென்னாபிரிக்காவில் நிலவிய வெள்ளையின இனவாத ஆட்சியை எதிர்த்த முக்கிய தலைவர் இவராவார். ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமையியக்கம் எனப்படும் OUA இன் தலைவராக இரு தடவைகள் பதவி வகித்த இவரைக் கைது செய்ததற்கான காரணம் எதனையும் ஸாம்பிய ஆட்சியாளர்கள் வெளியிடவில்லை. தன்னை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்வரை உண வருந்தமாட்டேன் என அவர் தெரிவித்துள்ளார். மலாவி நாட்டைச் சேர்ந்த தந்தைக்கு குழந்தையாகப் பிறந்த இவரை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாமல் செய்வதற்காக அரசியல் சாசன திருத்தத்தை கொண்டு வந்த ஆட்சியாளர்கள், 'வேறு நாட்டு பெற்றோரின் குழந்தைகள் தேர்தலில் போட்டியிட முடியாது' என கடந்தவருடம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (97312271)

## உலக நினைவலைகளில்

# பொலிசார் என அடையாளம் காட்டியவர்களால் அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் போன BEN BARKA

மொரோக்கோவில் உள்ள மன்னராட்சிக்கெதிராக போராடும் ஜனநாயகக் கட்சியான மக்கள் கட்சியின் தலைவர் MEHDI BEN BARKA-வை 29.10.1965 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 இற்கு பாரிசில் உள்ள Bd. St. Germain-இல் இடைமறித்த சிலர் தம்மை பிரெஞ்சுப் பொலிசார் என அடையாளம் காட்டி தமது வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். அதன் பின் Ben Barka உயிருடனே காணப்படவுமில்லை. அவரது சடலம் கூட மீட்கப்படவில்லை.

இந்த 'கைது'டன் தொடர்புடையவர் என Antoine Lopez என்பவர் தேடப்பட்டார். இவர் பிரெஞ்சு உளவுப் படையான Sdece-இற்கு மிக வேண்டியவர் எனக் கருதப்பட்டவராவார்.

Ben Barka கைது செய்யப்பட்டு Fontenay -Le Vilompte இற்கு கொண்டு செல்லப்பட்டதுவரை நேரில் கண்ட சாட்சிகளில் ஒருவர் Georges Figon ஆவார். மொறோக்கோ மன்னர் ஹசன் II-இன் பிரெஞ்சு விஜயம் தொடர்பாக பாரிஸ் வந்திருந்த ஜெனரல் Oufkir மேற்படி பென்பார்காவின் முகத்தில் 'அறைந்ததை' தான் பார்த்ததாகவும் தெரிவித்த Figon பின்னர் தனது அறையில் பிணமாக மீட்கப்பட்டார். அவர் தற்கொலை செய்துகொண்டதாக உத்தியோகபூர்வ அறிக்கைகள் தெரிவித்தன.

Figon-ஆல் குறிப்பிடப்பட்ட ஜெனரல் Oufkir பிரெஞ்சு உளவுப்படைத் தலைவர் Maurice Grimaud-ஐ நவம்பர் 3-ம் திகதி சந்தித்த விடயம் உட்பட அனைத்து விபரங்களும் 27.10.1965 திகதியிட்ட 'லு மோண்ட்' பத்திரிகையில் வெளியாகியது.

1972-இல் மன்னர் ஹசனைக் கவிழ்க்க முயன்றதாகத் தெரிவிக்கப்பட்ட Oufkir பிணமாக மீட்கப்பட்டார். பின்னர் தற்கொலை செய்துகொண்டார் என அறிவிக்கப்பட்டது.

**''நேற்றைய செய்தி இன்றைய வரலாறு**
**இன்றைய செய்தி நாளைய வரலாறு**
**வரலாறும் செய்தியும் வாழ்வின் பதிவுகள்''**

# வாரக் குறிப்பு

**21.12.97 ஞாயிற்றுக்கிழமை**

- துனிசியா ஜனநாயக சோசலிசக்கட்சியின் முன்னாள் தலைவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அண்மையில் பிரான்சுக்கு விஜயம் செய்த இவர் பல முக்கியஸ்தர்களைச் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
- செச்செனிய கொமாண்டோ குழு ஒன்று ரஷ்ய படைப்பிரிவு ஒன்றின் மீது தாக்குதல் நடாத்தியுள்ளது.
- அமெரிக்க பத்திரிகையாளர்களின் விருதைப்பெற்ற குரோசியப் பத்திரிகையான Herald Tribune பத்திரிகையின் ஆசிரியர் குரோசிய ஜனாதிபதி பிராங்கோ துஜ்மானை அவமதித்து எழுதியதற்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

**22.12.97 திங்கட்கிழமை**

- அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் பொஸ்னியாவில் சுற்றுப்பயணம்.
- திபெத்திய சுதந்திரம் தொடர்பாக அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் என ஐ. நா. சபையின் உபகுழுஒன்று தெரிவித்துள்ளது.
- ஐரோப்பிய சமூகத்தில் துருக்கி இணைக்கப்பட வேண்டும் என இத்தாலிய வெளிவிவகார அமைச்சர் லம்போர்டோ டினி கோரியுள்ளார்.
- முன்னாள் அமெரிக்க அதிபர் கெனடி சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையொன்றின்படி, சுட்டுக்கொல்லப்படுவதற்கு சில வாரங்களுக்கு முன்பு வியட்னாமில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறும் உத்தரவில் அவர் கைச்சாத்திட்டார் எனவும் இவ் ஆவணம் கொலைக்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆவணத்தில் கைச்சாத்திட்டது 04.10.63 கொலை செய்யப்பட்டது 22.11.63.
- 'கொக்கோ கோலா' நிறுவனம் 'ஒறேஞ்சினா' நிறுவனத்தை கொள்வனவு செய்துள்ளது.

**23.12.97 செவ்வாய்க்கிழமை**

- பிரெஞ்சு 'இரத்த வங்கி' அதிகாரிகள் விட்ட தவறினால் 1984 – 1985 காலப் பகுதியில் ஆட்கொல்லி 'எய்ட்ஸ்' நோய் பரவக் காரணமாக அமைந்த பரிசீலிக்கப்படாத இரத்த விநியோகம் தொடர்பாக பல உயர் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பெரும்பகுதி இரத்தம் சிறைக் கைதிகளிடம் எடுக்கப்பட்டது என்ற செய்தியும் வெளியாகியுள்ளது.
- 'தலிபன்'களால் விதிக்கப்பட்டதடைகளினால் ஆப்கானிஸ்தானில் இரண்டு இலட்சம் பேர் வரை பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளதாக ஐ.நா. அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.
- மெக்சிக்கோவில் சியப்பாஸ் இந்தியர்கள் 45 பேர் முகமூடி மனிதர்களால் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளனர்.
- இஸ்ரேலிய அரசு உருவாக்கப்பட்ட 50வது ஆண்டு வெள்ளி விழாவில் உரையாற்றிய பிரெஞ்சுப் பிரதமர் பாலஸ்தீன – இஸ்ரேல் சமாதான ஒப்பந்தம் புத்துயிர் பெறவேண்டும் என்ற தனது ஆவலை வெளியிட்டுள்ளார்.

**24.12.97 புதன்கிழமை**

- ஸாம்பியாவின் முன்னாள் ஜனாதிபதி கெனத் கவுண்டா தலைநகர் லுசாக்காவில் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டுள்ளாதாக அறியப்படுகிறது.
- பாகிஸ்தானில் இடம்பெற்ற ரெயில் விபத்து ஒன்றில் 18 பேர் பலியாகியுள்ளனர்.
- பொஸ்னியாவில் 18 மாதங்கள் மட்டும் இருப்பதாக திட்டமிடப்பட்டு இறக்கப்பட்ட நேட்டோ படைகள் முன் குறிப்பட்டபடி 1998 ஜூன் மாதம் பொஸ்னியாவில் இருந்து வெளியேற மாட்டா என அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் தெரிவித்த கருத்தை நேட்டோ படையணி உட்பட சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொண்டுள்ளன.
- கென்யாவில் பரவி வரும் புதிய கிருமி ஒன்றினால் 200-ற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். அடையாளம் காணப்படாத இக் கிருமி எவ்வாறு உருவானது என்பது விஞ்ஞானிகள் மத்தியில் கேள்வியை எழுப்பியுள்ளது.
- ஹொங்கொங்கில் கோழியினத்தில் இருந்து பரவும் காய்ச்சல் 4 பேரை பலிகொண்டதைத் தொடர்ந்து சீனாவில் இருந்து ஹொங்கொங்கிற்கு கோழி இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் வரை பிரித்தானிய ஆட்சியின் கீழ் இருந்த ஹொங்கொங், தற்பொழுது சீன ஆட்சியின் கீழ் வந்துள்ளது. 70 வீதமான கோழி இறைச்சி சீனாவில் இருந்து இறக்குமதியாகியது.
- மாட்டுப் பைத்திய நோய் பரபரப்பால் ஐரோப்பாவில் இருந்து இறக்குமதியாகும் மாட்டிறைச்சியை அமெரிக்கா தடை செய்தது பாரட்சமான பொருளாதாரப் போர் என ஐரோப்பா குற்றம் சாட்டியுள்ளது.

**25.12.97 வியாழக்கிழமை**

- பெரு நாட்டில் பயங்கரவாதக் குற்றத்திற்காகக் சிறைவைக்கப்பட்டிருந்த கைதிகளில் 300 பேர் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
- ஜப்பானிய கடற்படை, உலக தரத்தில் நான்காவது இடத்தை எட்டியுள்ளது. முதலாவது அமெரிக்கா, இரண்டாவது ரஷ்யா, மூன்றாவது பிரித்தானியா. இதுவரை நான்காவது இடத்திலிருந்த பிரான்ஸ் ஐந்தாமிடத்தை எட்டியுள்ளதாக 'Flottes de Combat 98' சஞ்சிகை கணிப்பீடு வெளியிட்டுள்ளது.
- ஹமாஸ் இயக்கத்தின் சார்பாக தற்கொடைத் தாக்குதல் நடாத்தத் திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஜேர்மனியப் பிரஜை இஸ்ரேலியப் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஆணைப்படி சிறையில் வைக்கப்பட்டார்.
- நத்தார் பண்டிகையான இன்று பிரித்தானியாவில் வீசிய கடும் புயல் பல்லாயிரம் மக்களுக்கு மின்சார வசதி இல்லாத நிலையை உருவாக்கியது.
- ஈரானில் முதல் தடவையாக நான்கு பெண்கள் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- பிரித்தானிய இராணுவத்தின் ஆட்டிலரி பிரிவில் பெண்களையும் இணைத்துக் கொள்ள ரொனி பிளேயர் அரசு முடிவு.

**26.12.97 வெள்ளிக்கிழமை**

- ஜனவரி முதல் பகுதியில் வாஷிங்டனில் இடம்பெற உள்ள அமெரிக்க அதிபருடனான சந்திப்பில் விரிவான சமாதானத் திட்டமொன்றை பாலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் சமர்ப்பிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- பாலஸ்தீன இயக்கங்களில் ஒன்றான 'ஹமாஸ்' இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டு பத்தாவது ஆண்டு கொண்டாட்டம் 'காசா' பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இஸ்ரேலுக்கு எதிரான புனிதப் போர் தொடரும் என தீர்மானிக்கப்பட்டது.

**27.12.97 சனிக்கிழமை**

- வட அயர்லாந்தில் உள்ள Maze சிறையில் வைத்து புரட்ஸ்தாந்து மதத்தைச் சேர்ந்த தீவிரவாதி Billy Wrigth கத்தோலிக்க தீவிரவாதிகளால் சுட்டுக் கொலை.
- பிரான்சில் அதிகரித்து வரும் விவாகரத்து வழக்குகளை நகரசபைகள் முடிவெடுக்க அதிகாரமளிப்பது தொடர்பாக நிதி மந்திரி ஆலோசனைகளை வெளியிட்டுள்ளார்.
- சியாப்பாசில் இந்தியர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக ஆளும் PRI கட்சியைச் சேர்ந்த நகரசபைத் தலைவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி தொலைத்தொடர்பு நிலையம்

# Gayathree Mobile Communication LTD

குறைந்த செலவில் சர்வதேச தொலைபேசி தொடர்புகளுக்கும் மலிவான அழைப்பு அட்டைகளுக்கும் உங்கள் நினைவில் இருக்கவேண்டியது காயத்திரி தொலை தொடர்பு நிலையம்



NEW

**MOTOROLA MEMPHIS**
இலவசம்
இணைப்பு மட்டும்
**£35**



**NOKIA 1620**
இலவசம்
இணைப்பு மட்டும்
**£35**



**ERICSSON GF768**
**£149.99**
இணைப்பு:
**£25**



**ERICSSON PH388**
**£44.99**
இணைப்பு:
**£20**



**NOKIA 8146**
**£89.99**
இணைப்பு
தற்போது இலவசம்



**STAR TAC MOTOROLA**
**£149.99**
இணைப்பு:
**£25**

## சர்வதேச அழைப்பு கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| சிறிலங்கா | – | 59 p. நிமிடத்திற்கு |
| பாகிஸ்தான் | – | 57 p. நிமிடத்திற்கு |
| இந்தியா | – | 49 p. நிமிடத்திற்கு |
| பங்களாதேஷ் | – | 60 p. நிமிடத்திற்கு |
| அமெரிக்கா | – | 20 p. நிமிடத்திற்கு |
| சோமாலியா | – | 70 p. நிமிடத்திற்கு |
| ஈகுவடோர் | – | 49 p. நிமிடத்திற்கு |
| கொலம்பியா | – | 45 p. நிமிடத்திற்கு |

ஏனைய நாடுகளுக்கும் குறைந்த கட்டணமே

Best call card 20%
First Telecom 20% கழிவு

**இணைப்புக்களுடன், இணைப்பு இல்லாமல்!**

**GMS & Voda**

**Mobile 0958632428**
**Fax 0181 552 9313**

**One 2 One**

**Leather Case £7.99; - Car Chrger £7.99 - Hand Free set £99.99**

விசேட நத்தார் விலை குறைப்புகளுக்கு தொலைபேசியில் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும். (20–ம் திகதி முதல் 30–ம் திகதி வரை மட்டுமே)

*291A High Street North, Manor Park E 12* **Tel: 0181 552 9113**

Pub


கலைபண்பாட்டுக் கழகம்

## விடுதலைப் புலிகள்- ஜேர்மனிப்பணியகம் நடாத்தும்

# கேணல் கிட்டு நினைவு ஓவியப் போட்டி 1998

விடுதலைப் புலிகளின் ஜேர்மனிப் பணியகக் கலைபண்பாட்டுக் கழகம் வருடா வருடம் நடாத்திவரும் கேணல் கிட்டு நினைவு ஓவியப் போட்டியின் 1998-ம் ஆண்டுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

*கலைபாண்பாட்டுக் கழகம்*
*விடுதலைப் புலிகளின் – ஜேர்மனிப்பணியகம்*
*நடாத்தும்*

### கேணல் கிட்டு நினைவு ஓவியப்போட்டி 1998

**விண்ணப்பப்படிவம்**

1. விண்ணாப்பதாரரின் முழுப்பெயர் ........................................
2. பெற்றோர் அல்லது பாதுகாவலர் பெயர் ........................................
3. முகவரி........................................................................
   ........................................................................
4. தொலைபேசி இல ........................................
5. விண்ணப்பதாரரின் பிறந்தநாள்:: நாள்......... மாதம்......... ஆண்டு.....................
6. பங்குபற்றும் பிரிவு கீழ்ப்பிரிவு / நடுப்பிரிவு / மேற்பிரிவு / அதிமேற்பிரிவு

மேலே குறிப்பிட்டுள்ள பெயருடைய விண்ணப்பதாரராகிய நான், கேணல் கிட்டு நினைவு ஓவியப்போட்டி - 1998 இற் பங்கேற்க விரும்புகிறேன் என்றும், நடுவர் தீர்ப்பை முழுமனதுடன் ஏற்பேன் என்றும் உறுதி கூறுகின்றேன்.

------------------------------ ------------------------------
பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பம் விண்ணப்பதாரரின் கையொப்பம்

### ஓவியப் போட்டிக்கான விதிகள்

1. போட்டியிற் பங்குபற்றுவோர் ஓவியங்களை வரைந்து, வரையப்பட்ட ஓவியத்தின் பின் பக்கத்தில் கையொப்பமிட்டு, பெயரையும் முகவரியையும் குறித்து, விண்ணப்பத்துடன் இணைத்து, கீழே குறிப்பிட்டுள்ள தொடர்பு முகவரிக்கு 05.01.98 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். தெரிவு செய்யப்படும் போட்டியாளர், பின்னொரு நாளில் இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படுவார்.
2. ஓவியங்கள், போட்டியாளரின் சுதந்திரமான - சுயமான கற்பனையில் வரையப்படல் வேண்டும்.
3. பிரிவுகளும் வயதெல்லையும்
   **கீழ்ப்பிரிவு:** 01.01.1988 அன்றும் அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள்
   **நடுப்பிரிவு:** 31.12.1982 இற்கும் 01.01.1988 இற்கும் இடையில் பிறந்தவர்கள்
   **மேற்பிரிவு:** 31.12.1978 இற்கும் 01.01.1983 இற்கும் இடையில் பிறந்தவர்கள்.
   **அதிமேற்பிரிவு:**: 31.12.1978 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்
4. கீழ்ப்பிரிவினரும் நடுப்பிரிவினரும் வரையவேண்டிய ஓவியத்தின் அளவு 24.செ.மீ 34 செ.மீ பயன்படுத்தக் கூடிய வர்ணம்.
   வர்ணக்கட்டி (Farbkriede), மெழுகுவர்ணம் (wachsmalstift), வர்ண எழுதி (bundstift), வரைவு வர்ணம் (tuchfarbe), வர்ண இழைத்தடி (filzstift) நீர்வர்ணம் (wasserfarbe)
   மேற்பிரிவினரும் அதிமேற்பிரிவினரும் வரையவேண்டிய ஓவியத்தின் அளவு 30செ.மீ. 40செ.மீ. பயன்படுத்தக்கூடிய வர்ணம்: நீர்வர்ணம் (wasserfarbe) மட்டுமே.
5. ஓவியத்தின் தலைப்பு: **கீழ்ப்பிரிவு:** போட்டியாளரின் விருப்பத்திற்கமைய தலைப்பிடலாம்.
   **நடுப்பிரிவு:** நம் மண்ணின் சுவாசம்
   **மேற்பிரிவு:** முகம் காட்டாத நல்முத்துக்கள்
   **அதிமேற்பிரிவு:** சும்மா கிட்டுமா சுதந்திரம்
6. போட்டிக்காக அனுப்பி வைக்கப்படும் ஓவியங்களைத் திரும்பப் பெற விரும்பும் போட்டி யாளர், நினைவு நாள் அன்று நிகழ்ச்சி மண்டபத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
7. பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் வயதை உறுதிப்படுத்த அத்தாட்சிப் பத்தி ரம் அல்லது அடையாள அட்டை கேட்கப்படுவர்.
8. விண்ணப்பம் செய்வதற்கான **இறுதிநாள்: 05.01.98**
9. விண்ணப்பங்களும் ஓவியங்களும் அனுப்பவேண்டிய முகவரி

**K.T.O.**
**Post fach: 1160, 37441 Bad Sachsa.**

**ஆர்வமுள்ள அனைவரையும் பங்குபற்றும்படி அழைக்கின்றோம்.**

*கலைபண்பாட்டுக்கழகம்*
*தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மனிப் பணியகம்*
**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

## மனக்கண் திறக்குமா?

வன்னிப் பெருநிலப்பரப்பில் கடந்த மூன்று வார காலத்துக்குள் நடந்த 13 க்கும் அதிகமான பட்டினிச் சாவுகள், அங்குள்ள நம் உடன் பிறப்புக்களின் அபாய நிலையை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயபுரத்தைச் சேர்ந்த ஒரு குழந்தை பட்டினியால் இறந்துவிட்டது. அதை அடக்கம் செய்த அந்தக் குழந்தையின் பெற்றோரிடம் பணம் இருக்கவில்லை. செய்வதறியாது கதறிக்கொண்டிருந்த பெற்றோருக்கு அவர்களது பிரதேசத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களில் ஒன்று நிவாரண உதவி வழங்கும் செய்தி தெரியவந்தது. தங்கள் அருமைக் குழந்தையின் சடலத்தை வீட்டில் வைத்துவிட்டு ஓடோடிச்சென்று நிவாரணப் பொருட்களை வரிசையில் நின்று, அவற்றை வாங்கி பிறருக்கு விலைக்கு விற்றுவிட்டு, அந்தப் பணத்தைக்கொண்டு தங்கள் அருமைச் செல்வத்தை அடக்கம் செய்த பரிதாபச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

இன்னொரு 2 1/2 வயதுக் குழந்தை பசியால் துடித்து, நோயால் வாடி, உயிருக்குப் போராடிக்கொண்டிருந்ததைப் பார்த்த அதன் தாயார், பட்டினியால் வாடி உடலில் நடக்கக்கூடிய தெம்பில்லாத நிலையிலும் தனது குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்று ஒரே நோக்கில்–12 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வைத்திசாலைக்கு கால்நடையாகவே பிள்ளையைக் கையில் ஏந்தியபடி ஓடியிருக்கிறார். என்ன கொடுமை, அந்த அபலைத் தாய் வைத்தியசாலைக்குள் நுழைந்தபோது குழந்தையின் உடலில் உயிர் இருக்கவில்லை.

கடந்த இரண்டுவார காலத்துக்குள் நடந்த இந்த இரண்டு துயரச் சம்பவங்களும் மனிதாபிமானமுற்ற எவரையும் கண் கலங்கவைத்துவிடும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இதிலே வேதனை தரும் செய்தி என்னவென்றால் இங்கே ஐரோப்பாவிலும் கனடாவிலுமாக சற்றேறக்குறைந்த 4 இலட்சம் தமிழர்கள் இருந்தும் எங்கள் உடன் பிறப்புக்கள் எங்கள் வருங்காலச் சந்ததியினர் அங்கே சாப்பாட்டிற்கு வழியின்றி நோய்க்கு மருந்தின்றி மடிந்துகொண்டிருக்கும் கொடுமை நிகழ்ந்துகொண்டிருப்பதே!

இங்கே இருக்கக் கூடிய புலம் பெயர்ந்த பசியில் ஒளி மங்கிப்போகும் ஒவ்வொரு குழந்தையினரும் உயிரைக் காக்கமுடியும். இங்கே எங்கள் மனக் கண் திறந்தால் அங்கே எங்கள் மழலைகளின் சின்ன விழிகளில் ஒளி பிறக்கும்.

## இவ்வார தலைப்புகள்

### சரிநிகர்

24 .12.1997

## மட்டக்களப்பு குண்டுவெடிப்பு ?

தொடர்ச்சியாக இடம்பெறும் குண்டு (வெடிப்பு) சம்பவங்கள் மட்டக்களப்பு வாசிகளிடையே அதிர்ச்சி அலையை பரப்பியுள்ளது. 1990–களின் ஆரம்பத்தில் இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றன. மேலும் அப்போது இராணுவ உளவுத்துறை உயரதிகாரியாக இருந்தவர் இப்போது மட்டக்களப்பு பிரிகேடியராக (தளபதி) பொறுப்பேற்றுள்ளார். ஒருவர் இச் சூழ்நிலையை ஆராய்ந்தால் பின்வரும் நிலைப்பாட்டுக்கு வரலாம்

1. இது இராணுவத்தின் மனோவியல் போர்த் தாக்கங்களைக் காட்டுகின்றது.
2. வடபோர்முனையில் விடுதலைப் புலிகளால் ஏராளமான தொல்லைகளை எதிர்கொள்ளும் இராணுவம், கிழக்கில் குண்டுவெடிப்புகளை மேற்கொள்ளுவதன் மூலம் புலிகளை மக்கள் பார்வையில் களங்கப்படுத்தலாம்.
3. குண்டுவெடிப்புகளை நடாத்தி பரபரப்பான சூழ்நிலை ஏற்படுத்துவதன் மூலம், தொடர்ந்தும் இவ் இராணுவத்தினர் வடக்கிற்கு இடம் மாற்றப்படாது கிழக்கிலேயே இருக்கலாம்.
4. தொடர்ந்து குண்டுவெடிப்பு பாதிப்புகளை நடாத்துவதன் மூலமும் புலிகளை அதற்காக குற்றம் சாட்டுவதன் மூலமும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தலாம்.
5. இப்படியான சூழ்நிலையை தோற்றுவிப்பதன் மூலம் LTTE ஒரு பயங்கரவாத இயக்கம் என சர்வதேச சமூகம் கண்டனம் செலுத்தும்.
6. தற்போது கொண்டாட்ட காலமாதலால் குண்டுவெடிப்பு மூலம் மக்கள், சந்தைப் பகுதிகளுக்கு ஏராளமாக வருவதை தடுக்கலாம். இது படைகளின் ஆட்பற்றாக்குறை காரணமாக எழும் பிரச்சினைகளைத் தீர்க்கும்.

### THE HINDU
India's National Newspaper

29 .12.1997

## சந்திரிகாவின் தடுமாற்றம் தனது தீர்வும் - திம்புவும்

... அவர்., சந்திரிகா இனப்பிரச்சினைக்கான தீர்வை திம்பு கோட்பாடுகளிலும் உயர்ந்த தீர்வுப் பொதியின் அடிப்படையில் தீர்க்க விரும்புவதாக கூறினார்.

சிறீலங்காஅரச கட்டுப்பாட்டு அலைகள் ஊடாக கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், அண்மையில் திரு. பிரபாகரன் மீள வலியுறுத்திய திம்பு கோட்பாடுகள் தான் தனது பேச்சு வார்த்தைக்கான வழிகாட்டி என்பது 'அர்த்தமற்றது' எனக் கூறினார்.

திம்பு கோட்பாட்டுக்கு எதிரான தனது முகத்தை வெளிக்காட்டிய ஜனாதிபதி, அண்மையில் பாராளுமன்றத்தின் முன்வைக்கப் பட்ட சட்ட அமைப்பு தீர்வுப்பொதி திம்பு கோட்பாட்டின் அடிப்படையில் பெறப்படும் அதிகாரத்திலும் பரவலானது எனக் கூறினார்.

(குறிப்பு: திம்பு கோட்பாடு என்பது தமிழர்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துவது. மாறாக சந்திரிகாவின் தீர்வுப்பொதி அதனை நிராகரிப்பது)

### சீறுவ (சிங்களம்)
(ஜே.வி.பி. யின் உத்தியோகபூர்வ வெளியீடு)

மார்கழி 1997)

## புளொட்–ரெலோ சில ஏக்கர் பரப்பு

இனவெறி அடிப்படையில் இடம்பெறும் அதிகாரப்பகிர்வு உள் முரண்பாடுகளையே தரும் என்ற அனைத்து அறிகுறிகளும் தென்படும் இவ்வேளையில் அரசாங்கத்துடன் உள்ள பிரிவினைவாதக் குழுக்கள் தமக்குள் மோதிக் கொள்கின்றன. வவுனியாவில் இடம் பெறும் புளொட் - ரெலோ மோதல் இதற்கு உதாரணம் என வவுனியா வவுனியாவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தாம் புலிகளின் பயமில்லாது நடமாடக்கூடிய சில ஏக்கர் பரப்பை சமமாகப் பிரிக்க முடியாது உள்ளனர்.

தங்கள் பிரதேசத்தில் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்கின்றனர். எப்படி இவர்கள் மாவட்ட கவுன்சிலர்களாக செயல்படுவார்கள்?

## எதிரொலிகள்

### தமிழகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவும்

'....வீட்டை போவம்...' இந்த வார்த்தைக்குள் தாம் எத்துணை உணர்வுகள் முட்டி மோதுகின்றன! எதிர்பார்ப்பு; ஆசை; விட்டுப் பிரியமுடியாத உறவு. உடலை விட்டுப்பிரியாத உயிர்போல எத்தனை எத்தனை செய்கைகள் மனதிற்குள் நிகழ்கிறது!

அப்பாடா!

தாங்க முடியவில்லை. இழப்புகளைத் தாங்க முடியவில்லை. எத்தனை முறைகள் நாம் நம்வீட்ட போக முயன்றிருக்கிறோம். அம்மா கோயிலுக்குக் கூட்டிப் போவாள்.

சாமி காட்டுவாள். 'அம்மோய் வீட்டபோவம்'; அம்மா ஆஸ்பத்திரிக்கு கூட்டிப் போவாள் 'அம்மோய் வீட்ட போவம்' அம்மா கடைக்குக் கூட்டிப் போவாள் 'அம்மா வீட்ட போவம்' இப்படி நான் முரண்டு பிடித்துள்ளேன்.

ஆனால், இன்று என் குஞ்சரங்கள் நித்திரை தூக்கத்திலேயே வீட்டை விட்டுப் பிரியும்போது அவர்களின் தாகம் எப்படியிருக்கும்? நானறிவேன்!

உயிர் வாழ்வே ஊசலாட்டமாய் போன வாழ்சூழல் என் தாயகத்தில் என் மருமக்கள் எங்கோ ஒது மூலையில் நின்று என் அக்காவை 'வீட்ட போவம்' என்றிருப்பார்கள். இது என் பிரக்ஞைக்குள் வரவேயில்ல இறைவன் என் இருப்பையே அசைக்கிறார். ஒரு சிறுகதையில் அதுவும் நான்கு அல்ல ஐந்து வார்த்தைகளில் இவ்வளவு பாரம் அதிகமாக்கிறாரே! இது, நான் உணரும் மனப்பாரம்! அந்தத் தூயவனின் ஆசையெல்லாம் வீட்ட போவம். தான் ஊர்ந்து திரிந்த வீட்டைப் பார்க்கும் அவா.

வீடு என்ன வெறும் கல்லும் மண்ணுமா?

இல்லவேயில்லை!

இளையவன் கூறிய மாதிரியேதாம். அதை நாம் உணர்கிறோம், உள்ளம் நோகிறோம்; மனம் வெடித்து அழுகிறோம். இஃது எங்களது வீடு; எங்கள் வாழ்வு; எங்கள் உயிர். இதைப் பிரிந்து எப்படி?... 1983-ம் வருஷம்.

ஆடிக் கலவரம். கொழும்புக்கருங்கல் சிவன் கோவிலுக்குள் நாம், பல்லாயிரம்பேர்கள்!

அப்போது எனக்கு வயது 21

அன்று என் உணர்வு எப்போது வீட்ட போவேன்; என் அம்மாவை, அக்காவை, தங்கையை, என்னோடு எட்டு மூலைப் பட்டம் விட்டு விளையாடிய தம்பிமார்களைப் பார்ப்பேன் என்ற ஏக்கம் – எப்போநான் ஓடித்திரிந்த வீட்ட போவன்? வாலிப வயதிலேயே இப்படியெனில் 'சின்னஞ் சிறுவயதிலுள்ள பிரதீபன் நிலையை விளங்கிக்கொள்வது 'வீட்ட போவம்' இதுதாம் இன்று 14 வருஷத்திற்குப் பிறகும் தமிழ் பேசுவோரின் சமூக யதார்த்தம்!

ஏன்? -விடை மிக இலகுவானது தமிழ் பேசுவோர் பக்கம். ஆக சிங்கள பாசிச அரசிற்குப் புரியுமா 'எம், நிலை?' அல்ல தீர்வுப்பொதிக்குள் குதிரையோடும் ஓடுகாலிகளுக்குப் புரியுமோ எம்மூர் இளையவன் சிறுகதை சொல்லவில்லை!

அவர் சில வார்த்தைகளால் இதைச் சாத்தியப்படுத்துகிறார்!

அவர் கதைகளைத் தேடிப் பிடித்து வாசித்துவிட ஒரு உந்துதல் இத.. வீட்டபோவம் என்றொரு மனவலி. அழுகிறேன், பிரதீபன் லவே; இது வெறும் பொய் அல்ல.

அன்போடு
ப.வி.சிறீரங்கன்

### தமிழகத்திற்கு முக்கியத்துவம்

நக்கீரனில் காக்கைவன்னியன் முதல் கதிர்காமர்வரை என்ற கட்டுரைத் தொடரில் (44) குழப்பமான அம்சங்கள் சில உள்ளன.

தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தின் பல அம்சங்களை சரியாகச் சுட்டிக்காட்டும் நக்கீரன், சண்முகதாசன் அவர்கள் சம்பந்தமாகக் குழம்புகிறார். சில இடங்களில் அவரின் ரசிகனுமாகிறார். சண்முகதாசன் அவர்களின் கொள்கைப்பற்றுதியாக மனப்பான்மை, துணிவு, திறம்படவாதி சாமர்த்தியம் போன்றவற்றால் 60-ம் ஆண்டுகளுக்கு பிற்பாடு இலங்கையில் மாக்சிச -லெனிசிச இயக்கத்தை வளர்த்து எடுத்ததில் அவரின் பங்கு மிகப்பெரியது. அத்துடன் வட பகுதிக்கு சாதிப் போரின்மூலம் ஆயுதப் போரை அறிமுகப்படுதியதிலும் அவரின் பங்கு பெரியது.

நக்கீரன் சொல்வதுபோல் சண்முகதாசன் கட்சி அணியைச் சேர்ந்த (பெரும்பான்மையோர்கள் என்று சொன்னாலும் முறையாகாது) பலர், சண்முகதாசன் அவர்கள் பிடிவாதப் போக்கும், தனிநபர் வாதமும், புத்தகப் பார்வை கொண்டவர் என சொன்னது-சொல்வது தப்பித்துக்கொள்வதற்காக அல்ல. கட்சி சிதறுண்டதற்கு இப்போக்கும் முக்கியம் ஆனது என்பதே. இவ் விடயத்தில் உண்மையே சொல்கின்றார்கள்.

தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தை அடுத்து தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமான விவாதங்கள் முதன்மை பெற்றபோது, சண் அவர்கள் 'தமிழ்ச் சங்கம் ஒரு தேசிய இனம் இல்லையென்று அடித்து வாதிட்டார்' அதற்கு ஸ்டாலின் அவர்கள், தேசிய இனம் என்றால் என்னவென்று கொடுத்த நான்கு வரையறைகள் வளர்ச்சிப்போக்கை கணக்கிலெடுக்காது புத்தகவாத கண்ணோட்டத்தில்' வளர்ச்சி அற்ற வரட்டுக் கோட்பாடாகவே வாதிட்டார். இதன் அடிப்படையில் சுயநிர்ணய.உரிமை கோட்பாடு சம்பந்தமாகவும் குழம்பியே இருந்தார். சுயநிர்ணய உரிமை.... 'பிரிவினை என்ற கோட்பாட்டையும் பிடிவாதமாக கொண்டிருந்தார்.

நக்கீரனுக்கு இன்னொரு குழப்பம், வர்க்கப் போராட்டம்பற்றியது, தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திலும் வர்க்கப்போர் இழையோடியேயிருந்தது. சண் அவர்கள் பல கட்டுரைகளில் குறையைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

'மனித குல வரலாறு வர்க்கப்போரின் வரலாறு'என கார்ல்மார்க்ஸ் சொல்லி இருக்கிறார். இது ஒரு சமூக விஞ்ஞான உண்மை. அதன் அடிப்படையில் சரியாகப் பார்த்தால் சாதிக போராட்டத்தில் மட்டும் அல்ல தேசிய இன விடுதலைப் போராட்டங்களுக்குள்ளும் வர்க்கப் போராட்டம் புதைந்து இருக்கின்றது.


நவனீதன்
'சுவிஸ்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

பகுதி II

46



# பௌத்த சிங்கள தேசியவாதிகளுக்கு கிடைத்த வெற்றி

1960-க்கும் 1970-க்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் புத்தூர், அச்சுவேலி, அல்வாய் கரவெட்டி ஆகிய 4 இடங்களில் பௌத்த சிங்களப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

1962-ல் மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட்கட்சி, மற்றும் சிறுபான்மைத் தமிழர் மகாசபை ஆகியவற்றின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ் பௌத்த சங்கம் இப்பாடசாலைகளை அமைப்பதற்கு துணைபுரிந்தது. இதற்காக இச் சங்கத்தின் தலைவர் எம்.வைரமுத்துவுக்கு சமாதான நீதவான் பட்டம் கொடுக்கப்பட்டது.

★ புத்தூர் பஞ்ஞாசீக வித்தியாலயம்
★ அச்சுவேலி ஸ்ரீ விபஸ்சி வித்தியாலயம்
★ கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயம்
★ அல்வாய் சேய் மகே வித்தியாலயம்

ஆகிய இந்த நான்கு பௌத்தப் பாடசாலைகளும் - தமிழ் சமூக் அமைப்பிலுள்ள சாதியக் கொடுமைகளை ஒழிப்பதற்காக அமைக்கப்பட்ட பாடசாலைகள் என்று சொல்லப்பட்டன.

இந்து சாதி அமைப்பினால் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களது பிள்ளைகளை இந்தப் பாடசாலைகளுக்கு கல்வி கற்க அனுப்புவதன் மூலமும் பௌத்தர்களாக மாறுவதன் மூலமும் - அரசாங்க சலுகைகளையும் வேலை வாய்ப்புக்களையும் சுலபமாகப் பெற்றுக் கொள்ளலாம் எனப் பிரச்சாரப்படுத்தப்பட்டது.

ஆனால் உண்மையில் தமிழ் சமூக அமைப்பில் எந்தளவு தூரத்துக்கு சாதியும், தீண்டாமையும் இருந்ததோ, அந்தளவு தூரத்திற்கு சிங்கள சமூக அமைப்பிலும் சாதி ஒரு தீர்மானகரமான சக்தியாக இருந்தது. தீண்டாமையின் அழுத்தங்கள் குறைவாக இருந்த போதிலும் சாதிய வேறுபாடு பார்ப்பதும், அந்த அமைப்பை கட்டிக் காக்கும் தன்மையும், தமிழ் சமூக அமைப்புக்கு எந்தவிதத்திலும் குறைந்ததாக இல்லை.

தங்களுடைய சமூக அமைப்பில் உள்ள சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராக, அதிலும் பௌத்த தத்துவத்துக்கு எதிரான சாதிய பிரிவினைகளுக்கு எதிராக தங்களுடைய பிரதேசத்தில் போராட்டம் நடத்தாத பௌத்த சங்கத்தினர், யாழ்ப்பாணத்தில் சாதி ஒழிப்புச் சேவை செய்ய முன்வந்தது அடிப்படையில் இனவாத அரசியல் நோக்கத்தைக் கொண்டதாக இருந்தது.

> தங்களுடைய சமூக் அமைப்பில் உள்ள சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராக, அதிலும் பௌத்த தத்துவத்துக்கு எதிரான சாதிய பிரிவினைகளுக்கு எதிராக தங்களுடைய பிரதேசத்தில் போராட்டம் நடத்தாத பௌத்த சங்கத்தினர், யாழ்ப்பாணத்தில் சாதி ஒழிப்புச் சேவை செய்ய முன்வந்தது அடிப்படையில் இனவாத அரசியல் நோக்கத்தைக் கொண்டதாக இருந்தது.

அதாவது தமிழ் மக்கள் மத்தியில் இருந்த உழைக்கும் மக்களில் பெரும்பான்மையினரான, (சாதி ரீதியில்) ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் மீது திணிக்கப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிராக ஆயுதமேந்திப் போராட முற்பட்டதும், இந்தப் போராட்டங்களில் வெற்றிகளை அடைய ஆரம்பித்ததும், தென்னிலங்கையில் இருந்த பௌத்த சிங்கள பேரினவாதிகள் கிலிகொள்ள ஆரம்பித்தனர். சாதிய ஒடுக்கு முறைக்கு எதிரான ஆயுதப் போராட்டம் வெற்றியடையும் பட்சத்தில், அடுத்த கட்டமாக அது இன ஒடுக்கு முறைக்கு எதிரான ஆயுதப் போராட்டமாக புதிய பரிமாணத்தை அடையக்கூடிய சாத்தியக் கூறுகள் இருந்ததை அவர்கள் அவதானித்தனர்.

எதிர்காலத்தில் தங்களுக்கு வரப்போகின்ற ஆபத்தை தடுத்து நிறுத்திவிடலாம் என்று அவர்கள் எண்ணினர்.

எனவேதான் 'சாதி அமைப்பினால் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் பௌத்தர்களாக மதம் மாறுவதன் மூலமும், பௌத்த பாடசாலைகளில் கல்வி கற்பதன் மூலமும் அரச உத்தியோகம் முதலான பல சலுகைகளை துப்பாக்கியின்றி, போராட்டமின்றி, இரத்தம் சிந்தாமல் பெற்றுக்கொள்ளலாம்' என்கின்ற வஞ்சகத்தனமான ஒரு கருத்தை அந்த மக்கள் மத்தியில் பரவவிட்டனர்.



அந்த சமூகத்தில் பொருளாதார ரீதியாக மேல் நிலைக்கு வந்துவிட்ட சிலரை 'சமாதான நீதவான்' பட்டம், அரச நிர்வாகத்தில் ஊழியர் பதவி முதலானவற்றைக்கொடுத்து விலைக்கு வாங்கி தங்களுடைய இந்த நச்சுத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அவர்களை கருவியாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

மறுபுறத்தில் யாழ்ப்பாண கனவான்கள் கட்சிகளான தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும், பௌத்த சிங்கள பெருந்தேசியவாதிகளின் கபட நோக்கத்தைப் புரிந்துகொண்டு, அதை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்குவதற்குப் பதிலாக, அந்தத் தீய நோக்கத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் விதத்திலேயே நடந்து கொண்டனர்.

தமிழ் மக்கள் மத்தியில் உருவெடுத்துள்ள ஆயுதப் போராட்டத்தை திசை திருப்பி விடுவது தான் எதிரியின் பிரதான மூலோபாயம். அந்த மூலோபாயத்தை வெற்றியடைய வைப்பதற்கு போராடுகின்ற மக்கள் மத்தியிலிருந்து ஒரு பகுதியினரை பௌத்தர்களாக மதம் மாற்றி விடுவதன் மூலம்- தமிழர்கள் என்ற வகையில் அவர்கள் ஒன்று சேர்ந்துவிடாதபடி இனத்துக்குள்ளேயே ஒருபகை முரண்பாட்டை உருவாக்க வேண்டும் என்பதுதான் எதிரியின் திட்டமாகும். அதாவது தங்களுடைய அடிப்படை உரிமைகளுக்காக ஆயுதப் போராட்டம் நடாத்தும் பௌத்தர்களாக மாற்றுவதன் மூலம், பௌத்த சிங்களவர்களுக்கு எதிரான போராட்ட உணர்வைக் கொண்ட ஒட்டு மொத்தமான தமிழ் சமூகத்திலிருந்து அவர்களை பிரித்து தனிமைப் படுத்தி விடவேண்டும் என்று பௌத்த சிங்கள தேசியவாதிகள் திட்டமிட்டிருந்தனர்.

தங்களை பெரிய அரசியல் மேதாவிகள் என்று சொல்லிக் கொண்டிருந்த தமிழ் கனவான்களுக்கு எதிரியின் திட்டத்தை முறியடிக்கும் விதத்தில் புதிய மூலோபாயம் ஒன்றை உருவாக்கும் திறமை இருக்கவில்லை.

உண்மையில் இவர்கள் தமிழினத்தின் எதிர்கால நலனை முன்னிட்டு அறிவு பூர்வமாகச் சிந்தித்து தங்களுடைய அடிப்படை உரிமைகளுக்காகப் போராடி மக்கள் பக்கம் நின்று கொண்டு, எதிரியின் பக்கம் நின்றவர்களை அம்பலப்படுத்தி, தமிழினத்தின் ஒற்றுமையை வலியுறுத்தி, சாதி ஒழிப்புப் போராட்டத்தின் நியாயத் தன்மையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தால், பிற்காலத்தில் பௌத்த சிங்கள பேரினவாதிகள் ஏற்படுத்திய எத்தனையோ பேரிழப்புக்களை தவிர்த்திருக்க முடியும்.

> மூலோபாயத்தை வெற்றியடைய வைப்பதற்கு போராடுகின்ற மக்கள் மத்தியிலிருந்து ஒரு பகுதியினரை பௌத்தர்களாக மதம் மாற்றி விடுவதன் மூலம்- தமிழர்கள் என்ற வகையில் அவர்கள் ஒன்று சேர்ந்துவிடாதபடி இனத்துக்குள்ளேயே ஒருபகை முரண்பாட்டை உருவாக்க வேண்டும் என்பதுதான் எதிரியின் திட்டமாகும்.

ஆனால் இந்தக் கனவான்கள் தங்களுடைய வர்க்க நலனை முன்னிட்டு இந்தப் போராட்டத்தில் வெளிப்படையாக நடுநிலையாளர்கள் போலவும், திரை மறைவில் போராட்டத்தை நசுக்குவதற்கு பௌத்த சிங்கள ஆளும் வர்க்கத்தின் அடக்கு முறைக் கருவியாக அக்காலத்தில் செயற்பட்ட சிறீலங்கா பொலீசாருக்கு மறைமுக ஒத்துழைப்பு வழங்கினர். இவர்களின் இந்த இரட்டை வேடத்தன்மை, 'சாதி எதிர்ப்பு போராட்டம் நடத்தியவர்கள் எல்லாம் சிங்களவர்களின் கைக்கூலிகள், தமிழினத்துரோகிகள் என்று சாதியக்கனவான்கள் முத்திரை குத்துவதற்கு வழிவகுத்துவிட்டது.

மொத்தத்தில் எதிரி நினைத்தது நடந்துவிட்டது. தமிழர்கள் நடத்திய சாதி ஒழிப்பு, ஆயுதப் போராட்டத்தை திசை திரும்பும்படி செய்தாகிவிட்டது. தமிழர்கள் ஒன்று பட்டு ஒரு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகளை தள்ளி வைக்கச் செய்தாகிவிட்டது. தமிழர்களைப் பிரிக்கும் சாதியை மறுபடி புத்துயிர் பெறச்செய்தாகிவிட்டது. சகல விதத்திலும் எதிரி வெற்றி அடைந்துவிட்டான்.

யாழ்ப்பாண சமூக அமைப்பை மாற்றிய, அங்கே ஒரு புரட்சிகர சூழ்நிலையை உருவாக்கிய பத்து வருடகால போராட்டத்தை எதிரி வெற்றி கொண்டதானது, தமிழர்களின் உரிமைப்போரை 20 வருடகாலம் பின்தள்ள வைத்த நடவடிக்கைக்குச் சமானம் என்பதை தமிழரசுக் கட்சித் தலைவர்களும், தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர்களும், முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் மக்களுக்கு மூடி மறைத்து, 1970 இல் நடைபெற இருக்கும் தேர்தலுக்கு வாக்கு கேட்பதற்கு 'இந்த பௌத்த பாடசாலை விடயத்தை' ஒரு மிகப் பெரிய துருப்புச்சீட்டாக பயன்படுத்த திட்டமிட்டிருந்தனர்.

**- நக்கீரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஊழி முதல்வன் உருவம் போல்....

நா.கண்ணன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

'அதென்னது?' என்றார் பிள்ளை.

'கார்னெல் யுனிவர்சிட்டி அமெரிக்காவிலே இருக்கு அங்க போய் டாக்டர் பட்டம் வாங்கலாம்ன்னு தான். அதுக்காக டோ·ஃபென்னு ஒரு பரீட்சை எழுதணும். நல்ல ஸ்கோர் வாங்கியிருக்கேன். கார்னெல் யுனிவர்சிட்டியிலே செலக்ட் ஆகணும்.'

பிள்ளைக்கு தூக்கிவாரிப் போட்டது. 'சரி, சரி அதெல்லாம் அப்புறமா விவரமா சொல்லு. முதெல்ல போய் குளிச்சுட்டு இட்லி சாப்பிடு' என்றார் பிள்ளை.

'சுகந்தி ரொம்பத்தான் மாறிக்கிட்டு வருது. ஓடி வந்து கட்டிக்கிடுச்சே. சினிமாக்காரங்க மாதிரி' என்று மெதுவாக சொன்னாள் செண்பகம் பிள்ளையிடம்.

சுகந்தி மாடியில அவள் அறையில் படுத்திருந்தாள்.

'இந்த பாரு செண்பகம், நான் கண்டிசனா சொல்லிட்டேன். ஓம் பொண்ணுட்டே நீயே சொல்லிடு. வெளிநாடு, கிளிநாடெல்லாம் வேண்டாம். பேசாமல் கல்யாணம் கட்டிக்கிட்டு வீட்டோட இருக்கச் சொல்லு.'

'அட நல்லா இருக்கு அழகு. நா எப்படி அந்த வளந்த பொண்ணுட்டே சொல்லுவேன். நீங்கதானே புள்ள இல்லாத கொறைக்கு செல்லமா வளத்தீங்க. பத்தோட நிறுத்தியிருந்தா சரி. கல்யாணம் கட்டிக்கிட்டு ஊரோட இருக்க. மேல, மேல படிக்க வச்சீக. இப்ப எப்படி திடும்ன்னு படிக்காத கல்யாணம் கட்டிக்கன்னு சொல்றது. அவ என்ன மத்த பொண்ணுக மாதிரியா? எந்த வம்பு தும்புக்கும் போகாம படிப்பு, படிப்புன்னுதானே கெடக்கா. அய்யர் சொல்ற மாதிரி அவ சாதகத்திலே அப்படித்தான் எழுதியிருக்கு போலருக்கு' என்றாள் செண்பகம்.

'அவரு கிடக்காரு அய்யரு' என்றார் பிள்ளை கடுப்புடன்.

'சரி அதுக்கு, இப்பவே ஏன் கவலைப்படறீக. மொதல்ல அமெரிக்காவிலேர்ந்து கடுதாசி வரட்டும்' என்று சமாதானம் செய்தாள் செண்பகம்.

பிள்ளைக்குத் தெரியும் தன் பெண்ணின் திறமை. குழந்தையாய் இருக்கும்போதே, திருப்பாவை, திருவெம்பாவை, திருவாசகம் எல்லாம் மனப்பாடம். மார்கழி காலையில் கோவிலில் அவள் பாடுவது வழக்கமான ஒன்று. பள்ளி நாட்களில் எப்போதும் வகுப்பில் முதலாவதாக வருவாள். அய்யர் வீட்டு பசங்களை தோற்கடிச்சு தன் பொண்ணு படிப்பதில் பிள்ளைக்கு எப்போதும் பெருமையுண்டு. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மாநில முதலாக வந்தாள். பத்திரிகையிலெல்லாம் வந்தது. ஊரே பேசிக்கொண்டது. பிள்ளைக்கு பெருமை பிடிபடவில்லை.

பிள்ளைக்குத் தெரியாது கல்வி என்பது பாரதி பேசும், 'அக்கினிக் குஞ்சு' என்று அதன் தாகம் எளிதில் அடங்காதது என்று. 'அறியாமைக் காட்டை அழிக்கவல்ல தீ', அவர் அறியாமலே அக்கினிச் குஞ்சை வளர்த்துவிட்டார். ஒவ்வொரு நிலையிலும் சுகந்தி அபார. திறமையுடன் தேறி நின்றாள். அவள் யாருக்கும் கஷ்டம் கொடுக்காமல் ஸ்கொலஷிப் வாங்கியே தன் படிப்பை கவனித்துக்கொண்டாள். தன் காலிலே தானே நின்றாள். அவளின் ஒரே ஆயுதம் அவள் அறிவு. அதன் முன் பிள்ளையால் போரிட முடியவில்லை. இப்போது அமெரிக்கா போகிறேன் என்கிறாள்.

பிள்ளை தூக்கம் வராமல், புரண்டு, புரண்டு படுத்தார்.

காலை விழித்ததும் வயல் காட்டுப் பக்கம் போய்விட்டார். சுகந்தி விழித்து பல் தேய்த்துக்கொண்டிருக்கும் போது கக்கூஸ்காரி வந்தாள். அவள் தகர டின்னிலிருந்து ஒரே நாற்றம். சுகந்திக்கு தன் பெற்றோர் மீது கோபம்கோபமாக வந்தது. எத்தனை முறை சொல்லியாகிவிட்டது. 'செப்டிக் டாங்க்' வைத்து 'பிளாஷ்' டாய்லெட் கட்டச் சொல்லி. இதை எப்படித்தான் சகித்துக்கொண்டு இருக்கிறார்களோ?!

சுகந்திக்கு கக்கூஸ்காரி மீது பரிதாபம் வந்தது. 'இதோ பாரு, உன் பேரு என்ன?'

கக்கூஸ்காரி திரும்பினாள். சுகந்தியை விட இரண்டு வயது பெரியவளாய் இருக்கலாம். நல்ல உயரமாக, அழகாக இருந்தாள். அவளுக்கு சல்வார் கம்மீஸ் போட்டு சென்னையில் உலாவ விட்டால் டி.வி. அறிவிப்பாளர்கள் தோத்துப் போவார்கள். இந்த ஊரில் பிறந்து இந்த இழி தொழில் செய்கிறாள். மூக்கு வழிய அவள் பெண் கூடவே வந்திருந்தது.

'எண்ட்ர கூப்பிட்டீங்களா எம்பேரு பாப்பாத்தி!'

என்றாள். அவர்கள் தெலுங்கு பேசும் குறவர்கள். தமிழ் கேட்க வேடிக்கையாய் இருந்தது.

'பாப்பாத்தியா! ஏன் அப்பிடி?'

'அது அப்பிடித்தானுங்க நா அய்யருவீட்டு பொண்ணுமாதிரி இருக்கேன்று 'நானா' பேரு வச்சிது'.

அப்போதுதான் பார்த்தாள் பாப்பாத்தியை. இந்த புற அழுக்கெல்லாம் இல்லாம குளிப்பாட்டி நிக்க வச்சால் நல்ல நிறமாக இருப்பாள். பாப்பாத்தி மீது பாசம் கூடியது.

'பாப்பாத்தி, ஓம் பொண்ணு படிக்குதா?'

பாப்பாத்தி சிரித்தாள். 'படிப்பா, அதெல்லாம் நமக்கு வராதுங்க. இவளும் எம்மாதிரி தொழில்பண்ண வேண்டியதுதான்.'

சுகந்திக்கு ஆத்திரமாக வந்தது. 'ஏய் உனக்கு அறிவு இருக்கா. நீதான் வீடு வீடா போய் மலம் எடுக்கற, உம் பெண்ணுக்கு என்ன தலையெழுத்தா? அவளை படிக்க வை. படிச்சு கலெக்டர் ஆகட்டும்.'

'அட போம்மா, நீங்க ஒண்ணு. அதெல்லாம் ஆவற காரியமா. நாங்க மலம் எடுக்காட்ட ஊரு சனம் என்ன பண்ணும்?'

'ஊரே அழுகி நாறட்டும். இப்ப என்ன நாத்தம் குறைச்சலா இருக்கு! நீ முன்னேற்ற வழியைப் பாரு' என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போது கையில் சொம்புடன் ஆச்சி அங்கு வந்தாள்.

'காலங் காத்தாலே, குறத்தி கெட்ட என்ன பேச்சு? டீ பாப்பாத்தி நீ வந்த காரியத்தை முடிச்சுட்டு மேல வேலையப்பாரு' என்றாள். பாவம், பாப்பாத்தி பயந்து கொண்டே கக்கூஸை நோக்கிப் போனாள்.

சுகந்திக்கு எல்லோர் மேலும் கோபம் வந்தது. திரும்பி வீட்டுக்குள் வருவதற்குள் கொல்லைக்கு வெளியிலிருந்து குரல் கேட்டது.

'அம்மா கதவைத் திறங்க நாந்தான் கட்டாரி வந்திருக்கேன். சொவரு வைக்கணும்.'

சுகந்தி போய் கதவைத் திறந்தாள்.



கட்டாரிக்கு அப்பா வயது இருக்கும். இவள் குழந்தையாய் இருந்ததிலிருந்து வருகிறான். கொல்லைப்புற மண் சுவர் ஒவ்வொரு மழைக்குப் பிறகும் கரைந்துவிடும். இவன்தான் வந்து சுவர் வைக்க வேண்டும். கட்டாரி நல்ல உழைப்பாளி. வந்த சில பொழுதுகளில் மண்வெட்டி கொண்டு நிலத்தை கொத்த ஆரம்பித்தான்.

உச்சி வெய்யில் மட, மடவென ஏற ஆரம்பித்தது. ஒரு பன்னிரெண்டு மணி வாக்கில் சுகந்தி மீண்டும் கொல்லைப்புறம் வந்தபோது கட்டாரி சுவரெல்லாம் நேர்த்தி பண்ணி, வேர்த்து விறுவிறுத்து இருந்தான்.

'அம்மோய், தண்ணி கொடுங்க.'

சுகந்தி அவன் மேல் இரக்கப்பட்டு வேகமாக உள்ளே வந்து எவர்சில்வர் செம்பில் குளிர்ந்த பானைத் தண்ணீரை மோந்து சென்றாள். வெட்டி வேரின் மணம் குளிர்ச்சியைத் தந்தது. இவள் அவன் கையில் சொம்பைக் கொடுப்பதற்குள், வேக, வேகமாக பின்னால் வந்த ,செண்பகம் 'கொஞ்சம் பொறும்மா, நான் தண்ணி ஊத்தறேன் என்று சொல்லிவிட்டு, கட்டாரி இங்க·வா' என அவனை கிணற்றடிக்கு அழைத்தாள். மட, மடவென கிணற்றுத் தண்ணீரை இறைத்து அவள் ஊற்ற கட்டாரி கைகளில் ஏந்தி உறிஞ்சிக் குடித்தான்.

சுகந்திக்கு அதன் உள் அர்த்தம் புரிய கொஞ்சம் நேரம் எடுத்தது. வீட்டுக்குள் வந்தவுடன் அம்மாவிடம் கேட்டாள். 'ஏன் கட்டாரி எவர் சில்வர் சொம்பில் தண்ணி குடிக்கக் கூடாது?'

'அடி அசடே. அவன் வலையன் அவனுக்கெல்லாம் பானைத் தண்ணி கேக்குதாக்கும். கிணத்துத் தண்ணி போதும்' என்றாள்.

சுகந்தி ஆத்திரத்துடன் சொம்பை 'ணங்' என்று வைத்துவிட்டு மேல் அறைக்குப் போனாள். அவளுக்கு கோபம் கோபமாக வந்தது. சாதியைக் கட்டிக் கொண்டு அலையும் இவர்களையெல்லாம் விட்டு ரொம்ப தூரம் ஓடிவிடவேண்டும். இவர்கள் மனிதனை மனிதனாய் பார்க்கும் வரை ஊருக்கு வரவே கூடாது.

சுகந்தி ஜன்னலை வெறித்துப் பார்த்துக்கொண்டு இருந்தாள். 'பார்ப்பனீயத்தின் வெற்றி' என்ற புத்தகத்தின் அட்டையிலிருந்து அம்பேத்கார் இவளை பார்த்துக்கொண்டே இருந்தார்.

இவள் குமுறலை அடக்க போஸ்ட் மேன் வந்து சேர்ந்தான். கார்னெல் பல்கலைக் கழகத்திலிருந்து கடிதம் வந்திருந்தது. இவள் தேர்வாகியிருந்தா. படிக்க உதவிப் பணத்துடன். அவள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அம்மாவிடம் சொல்லிவிட்டு பின் மாலைக் குளியல் போட துணையுடன் பம்ப் செட்டுக்கு போய்விட்டாள்.

சுப்பிரமணியபிள்ளை வீட்டுக்குள் வந்ததும் வராததுமாக 'பார்த்தீர்களா, சுகந்திக்கு வெளிநாட்டிலே தேர்வாயிருச்சாம். போகவர காசோட, படிக்கிறதுக்கும் காசு தராங்களாம். அய்யரு சொன்னது சரியாப்போச்சு பாருங்க' என்றாள் செண்பகம்.

பிள்ளைக்கு கடுப்புத்தான் வந்தது. 'அய்யரு நல்ல அய்யரு கருநாக்கு! சொன்னா பலிச்சு தொலைச்சிடுது' என்றார்.

இரண்டு நாள் வீட்டில் முயற்சிகள் நடந்தன. நல்ல வார்த்தை சொல்லி சுகந்தியை ஊரோடு நிறுத்த. இதனால் சுகந்தியின் பிடிவாதம்தான் அதிகமானது.

அதற்குள் ஊருக்குள் செய்தி பரவிவிட, உள்ளூர் தினத்தந்தி ஏஜெண்ட் வந்துவிட்டார். 'உங்க வீட்டுலே சரஸ்வதி குடியிருக்கா. கொளந்தையிலிருந்து நானும் பாக்கிறேன், சொகந்திப் பொண்ணோட சூட்டிகை குறையவேயில்லை. இப்ப் வெளிநாடு போகுதாம். ஊரு இன்னும் தெறந்த வாயை மூடல, என்ன படிப்பு, என்ன படிப்பு நம்ப தாலுகாவிலேயே இந்தப் படிப்பு படிச்சது யாருமில்ல' என்றவாறு பேச, பேச சுப்பிரமணியபிள்ளை குளிர்ந்தார்.

சின்னதாக ஒரு பாராட்டுவிழா வேறு ஏற்பாடு செய்துவிட்டார்கள். பிள்ளை இனி என்ன சொன்னாலும் சுகந்தியின் வெளிநாட்டுப் பயணம் தடைப்படாது என்று தோன்றிவிட்டது. பிள்ளையும் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களைப் பற்றி படித்தது, கேட்டதை வைத்து பெருமையாக பேச ஆரம்பித்தார்.

சுகந்தி போய் மூன்று வருடம் ஆகிவிட்டது, விளையாட்டுப்போல் இடையில் ஒரு முறை வந்தாள். அவள் விருப்பப்படியே வீட்டில் மாற்றங்கள் தோன்றலாயின. கக்கூஸ் மாறியது, மண் சுவர் கல் சுவர் ஆனது, பானைக்குப் பதில் குளிர்பதனப்பெட்டி வந்தது. வீட்டில் ஒரு ரூம் ஏர் கண்டிசன் ஆனது. சுகந்தியும் இப்போது சம்பாதிப்பவள் ஆகிவிட்டாள் அல்லவா!

ஆனாலும், சுகந்தியிடம் அதிக அலட்டல் இல்லை. எப்போதும் போல் எல்லோரிடமும் அன்பாக பழகினாள். பாப்பாத்திக்கு நல்ல சேலை வாங்கித் தந்தாள், கட்டாரிக்கு வேட்டி கிடைத்தது. கிட்டுவுக்கு வேட்டி, சட்டை இப்படி தினமணியுடன் ஹிந்தியும் வர ஆரம்பித்தது. ஹிந்தியைப் படித்துக்கொண்டே சொன்னாள் சுகந்தி, 'என்ன ஜனங்க மாறமாட்டங்கபோல ருக்கே'

'என்ன மாறனும்ன்னுங்கறே' என்றாள் செண்பகம் அடுப்பில் இருந்துகொண்டே


'பின்ன என்ன? பொண்ணு, பையன் பாக்கிறதுன்னா, படிப்பை பாக்கலாம், அழகைப் பாக்கலாம், உசரமான, குள்ளமான்னு பாக்கலாம் அத விட்டுப்புட்டு, கோத்ரம், சைவ வேளாளர், இந்து வேளாளர், இந்து நாடார், கிற்ஸ்தவ நாடார் அப்படீன்னுட்டு, எல்லோரும் மனுஷங்கதானே. இந்த பாப்பாத்தியை பாரு, என்ன அழகு. அவ எல்லாம் வெளிநாட்டிலே இருந்தா டேட்டிங் வாங்க வரிசையில நிப்பாங்க. இங்க இருந்து தன்மானம் இல்லாம, சுய மரியாதை இல்லாம, அடிமையாய் கீழ்ப்பட்டு, இழிவு பட்டு... சே! என்ன சமூகம் இது' என்று நீளமாக முறையிட்டாள் சுகந்தி.

'சரிதான் போ! அதுக்காக அவங்க அவங்களுக்கு உள்ள வரம்பை மீறலாமா? நம்ம பண்பாடு என்ன ஆறது' என்றாள் செண்பகம்.

மூலையில் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சுப்பிரமணியபிள்ளை செண்பகம் முதல் முறையாக புத்திசாலித்தனமாய் பேசுவதாய் உணர்ந்தார்.

(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்விகள் தீபிகா சண்முகராஜா, நிரஜா சண்முகநாதன் ஆகியோரை** பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## கவிதை பாடுவோம்

### புத்தாண்டு வருகவே!

வருக வருக வருகவே
புதிய வருடம் வருகவே

உலக மாந்தர் யாவரும்
நிறைவு கொண்டு வாழவே
புதிய வருடம் வருகவே!

தரணியெல்லாம் சிறுவர்கள்
வறுமை நீங்கி வாழவே
புதிய வருடம் வருகவே!

ஈழ மண்ணில் வாடும் சிறுவர்
வாழ்வில் புதுமை மலரவே
புதிய வருடம் வருகவே!

மனிதரெல்லாம் ஒரு குலம்
என்ற உணர்வு பொங்கிட
நாளை மனிதர் வாழ்ந்திட
புதிய வருடம் வருகவே!!

– நிலா –

## அறிந்துகொள்ளுங்கள்

### கின்னஸ் புத்தக வரலாறு


உலகத்தில் பல வீரர்கள் தங்கள் சாதனைகளை 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெறச் செய்யவேண்டும் என்பதற்காக பல்வேறு போட்டிகளிலும் உற்சாகமாக கலந்து கொள்கிறார்கள். ஆனால் இந்த 'கின்னஸ்' தோன்றிய வரலாறு அதிகமான பேருக்கு தெரியாமல் உள்ளது.

'கின்னஸ் புக் ஒஃப் த வேல்ட்' என்பது ஒரு புத்தக வெளியீட்டு நிறுவனமாகும். சேர். கக் பீவர் என்ற ஆங்கிலேயரால் தொடங்கப்பட்டது. சேர். கக் பீவர் ஒரு முறை வேட்டைக்குச் சென்றார். அப்பொழுது 'கோல்டன் பிளவர்' என்ற பறவையை அவர் துப்பாக்கியால் சுட்டபோது துப்பாக்கிக் குண்டின் வேகத்தையும் மிஞ்சி அப்பறவை தப்பித்து ஓடியது.

அன்றிலிருந்து கக் பீவர் அந்தப் பறவையின் வேகம் என்ன? அது மணிக்கு எத்தனை கிலோ மீற்றர்கள் பறக்கிறது? என்று எங்கும் விசாரித்துப் பார்த்தார். பல புத்தகங்களிலும் தேடிப் பார்த்தார். அவருக்கு சரியான விடை கிடைக்கவில்லை. உடனே அவர் தாமாகவே அந்தப் பறவையின் வேகத்தைக் கணித்துக் கொண்டார். இதே போன்று உலகத்தில் எத்தனையோ சங்கதிகள், அற்புதமான சாதனைகள் நிகழ்ந்திருக்கக் கூடுமென்று உணர்ந்த கக் பீவர், எல்லாவற்றையும் தேடித்தொகுத்தார். வருடா வருடம் அந்தச் சாதனைகளில் மாற்றங்களையும் கண்ணுற்ற 'கக்' வருடா வருடம் ஒரு புத்தகத்தைக் வெளிக்கொண்டுவரத் தீர்மானித்தார். அதுவே கின்னஸ் என்ற புக் ஒஃப் த வேல்ட் நிறுவனம் வெளியிடும் கின்னஸ் என்ற சாதனைகளின் தொகுப்பாகும்.

## குட்டிக்கதை படிப்போம்

### வேலைக்கு ஒரு ரூபாய் மூளைக்கு ஒன்பது ரூபாய்



ஒரு கட்சியின் தலைவர் கூட்டம் ஒன்றில் பேசுவதற்காக வேகமாக தன்து காரில் சென்றுகொண்டிருந்தார். நடுவழியில் கார் நின்றுவிட்டது. கார்சாரதிக்கோ கார் ஓட்டத்தான் தெரியும். திருத்தத் தெரியாது. இருவரும் இறங்கி என்னவெல்லாமோ செய்து பார்த்தார்கள். கார் இயங்கவேயில்லை. என்னடா செய்வது இரவு எட்டு மணிக்கு முன்னர் கூட்டத்திற்கு போய்விடவேண்டுமே என கட்சித் தலைவர் பரபரத்தார்.

அப்போது எதிரே வந்துகொண்டிருந்த வாகனமொன்றில் ஒரு 'மெக்கானிக்' இருந்தார். அவரை அழைத்து காரை பழுது பார்க்கச் சொன்னார். கட்சித் தலைவர்-இதற்கு பத்துரூபா செலவாகும் என்று மெக்கானிக் சொன்னார். சரி தருகிறோம். 'முதலில் எனது காரை திருத்துங்கள்' என்றார் கட்சித் தலைவர் மெக்கானிக், ஒரு சுத்தியலை எடுத்து கொஞ்சம் கழன்றிருந்த ஆணியை சட்டென்று ஒரு தட்டுத் தட்டினார். கார் உடனே இயங்கத் தொடங்கியது. 'என்ன'ப்பா இந்த ஒரு தட்டுக்கா 10 ரூபாய் கூலி கேட்கிறாய் என்றார் தலைவர். அப்போது மெக்கானிக் சொன்னார் 'இந்த ஒரு தட்டுக்கு ஒரு ரூபாய்தான். அது எங்கே தட்டவேண்டும் என்று தெரிந்து கொண்டதுக்குத்தான் மிகுதி ஒன்பது ரூபாய்' என்று. 'சரி சரி இந்தா பிடி' என்று. பணத்தை எடுத்துக்கொடுத்துவிட்டு புறப்பட்டார் கட்சித் தலைவர்.

*(தமிழக கிராமியக் கதைகள்)*

## சின்னக்கட்டுரை

### செவ்வாய் கிரகத்தில் உயிர் வாழ முடியும்

நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் பூமிக்கிரகத்தை விட்டு, இன்னொரு கிரகமான செவ்வாய்க் கிரகத்திலும் உயிர்கள் வாழ முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மிக அண்மைக்கால ஆய்வுகளின்படி பூமிக்கு மிக அருகில் உள்ள செவ்வாய் கிரகத்தில் வளிமண்டலம் காணப்படுவதோடு காலநிலை மாற்றங்களும் நடைபெறுவதாக தெரியவந்துள்ளது. அப்பகுதியில் மணல் பிரதேசமான புழுதி படிந்த தரை உள்ளதாகவும் அத்தரையில் தாவரங்கள் வாழும் அறிகுறியாக கோடையில் கபில நிறத் தோற்றமும் மாரியில் பசிய தோற்றமும் தென்படுவதாகவும் கூறப்படுகிறது.

தாவரங்கள் வளரக்கூடிய சூழ்நிலை உள்ள நிலையில் அங்கு மனித வர்க்கமும் வாழ முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். வளர்ந்து வரும் விஞ்ஞான முன்னேற்றத்தினால் செவ்வாய்க் கிரகத்தில் எதிர்காலத்தில் மனிதர்கள் சென்று வாழக்கூடிய சூழ்நிலை உண்டென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகத்தில் பெருகிவரும் சனத் தொகையை ஈடு செய்ய செவ்வாய் கிரகம் உதவி செய்யும்தான். ஆனால் சாதாரண வசதி குறைந்த மக்களால் அங்கு செல்வது சாத்தியமாகுமா?

## விடுகதைகள்

1. ஆடு இங்கே. தோல் அங்கே. அது என்ன?
2. மேலிருந்தும் வருவான். கீழிருந்தும் வருவான் அவன் யார்?
3. உச்சியிலே கிரீடம். உடம்பெல்லாம் கண். அது என்ன?
4. ஆயிரத்தில் ஒருத்தி. அவள் ஆயிரத்திற்கும் ஒருத்தி. அவள் யார்?
5. கசப்பவன். ஆனால் உடலுக்கு உகந்தவன் அவன் யார்?
6. கறுத்த மனிதனின் கண்ணீர் வெள்ளை. அது என்ன?

**விடை: அடுத்தவாரம்**

தொகுப்பு:
செல்வன் தி.விமல்
சுட்காட், ஜேர்மனி.

## மனிதன் இறந்தபின் உயிருடன் இருக்கும் உறுப்புகள்



மனிதன் இறந்து போன பிறகும் சில உறுப்புகள் சிறிது நேரம் உயிருடன் இருக்கும். எந்தெந்த உறுப்புகள் எவ்வளவு நேரம் உயிருடன் இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியுமா? இதோ தெரிந்துகொள்ளுங்கள்

| | |
|---|---|
| கண்கள் | - 31 நிமிடம் |
| மூளை | - 10 நிமிடம் |
| கால் | - 4 மணி |
| தோல் | - 5 நாட்கள் |
| இதயம் | - 10 நிமிடம் |
| காது | - 1 மணி |
| தோல்பட்டை | - 4 மணி |
| எலும்பு | - 30 நாட்கள் |

*தகவல்: வாலாஜா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயைக் காக்க தவிக்கும் தனயன்

வெளிநாடுகளில் உள்ள வயோதிபர்களுக்கு இறுதிக் காலங்களில் ஒத்தாசை புரிவது கூலிக்குச் சம்பளம் வாங்கும் பணிப்பாளர்களேயொழிய பிள்ளைகள் என்பது மிக அரிதான விடயம். இதற்கு ஆபத்து வந்துவிட்டதோ என அஞ்ச வைக்கிறது ருமேனியா நாட்டுப்பெண் Radica வின் கொலை வழக்கு.

இன்று இவ் வழக்கு பிரான்சில் தான் நடைபெற்று வருகின்றது. காரணம் Rodica என்ற இப் பெண் பிரான்சில் தாதியாக வேலை பார்த்த 82 வயதுடைய வயோதிபர் மாரடைப்பால் இறந்துவிட்டார். ஆனால் இவர் இப் பெண் தன்னில் கடைசிக் காலத்தில் காட்டிய அன்பால் தன் சொத்துக்களை இவரிடமே கொடுத்துவிட்டார். இங்குதான் பிரச்சினை தொடங்கியது. இவரின் மரணத்தைப் பலர் சந்தேகிக்கத் தொடங்க, முடிவில் பிரேதப் பரிசோதனை Digitaline என்ற மருந்தை அதிகம் செலுத்தியதாலேயே இறந்தார் என்றாகிவிட்டது.

இதனால் இன்று Rodica நீதிமன்றம்வரை செல்ல வேண்டியதாகிவிட்டது. அங்கு சென்ற பின் தான் இவரைப் பற்றிய பல தகவல்கள் மேலும் வந்து சேர்ந்தது. இவரின் முதல் கணவனும் இவ்வகையான மர்மமான முறையாகவே கொல்லப்பட்டிருந்தார். அதுமட்டுமா! தன்னைவிட 20 வயதிற்கு மூத்த இரண்டாவது கணவரும் இவ்வாறே சொத்துக்கள் கைக்குவர இறந்துபோயுள்ளார்.

இதையெல்லாம் அறிந்த நீதிமன்றம் துருவித்துருவி நின்று Rodica வை விசாரணை செய்கிறது. ஆனால் இதெல்லாம் அப்பட்டமான பொய் என்கிறார் Rodica வின் மகனான 29 வயதுடைய Marius. எனது அம்மா ருமேனியாவில் சாதாரண பெண்ணாக ஒரு தொழிற்சாலையில் வேலை பார்த்தார். பின் இரவு வேளையில் அரசாங்கப் பள்ளியில் பகுதி நேரமாக வைத்தியத் துறையில் படித்து நீண்ட காலத்தின் பின் ஒரு நல்ல தாதியாக வைத்தியசாலையில் வேலை செய்தார். என்னை மிகக் கண்ணியமாக வளர்த்தார். முன்னர் இவரின் முயற்சியால் நான் சிறு வயதிலேயே அதி சிறந்த மாணவனாக விளங்கியது மட்டுமல்ல. இன்று வழக்கறிஞராகவும் இருக்கிறேன். மேற் கூறப்பட்டவை சந்தர்ப்ப வசத்தால் துர்ப்பாக்கிய நிலைக்கு எனது அம்மாவைத் தள்ளிய எதிர்பாராத குற்றச் சாட்டுகள் என்கிறார். இவர் மட்டுமல்ல Rodica வின் வக்கீலும் இதையேதான் குறிப்பிடுகிறார்.

ஆனால் உண்மை என்னவென்பது வழக்கின் இனிவரும் முடிவுதான் சொல்லும். நியாயமாகவே Rodica குற்றம் செய்திருந்தால் அதற்கான தண்டனையை அனுபவித்தே தீரல் வேண்டும். ஏனெனில் அற்ப பணத்திற்காக உயிரை எடுக்கும் தீயவர்கள் சமூகத்தைக் கெடுக்கும் துரோகிகளே!

# தொலைக்காட்சி துறையில்

## பால் வேறுபாட்டிற்கு எதிராக ஒரு தீர்ப்பு

'ஏன் நீர் உமது கருவை கலைத்துவிட்டு நடிக்க வரமுடியாது?' என தொலைக்காட்சி நடிகை Hunter Tylo வை கட்டாயப்படுத்திய ஒரு அமெரிக்க நிறுவனம் அப் பெண்ணின் உறுதியான முயற்சியால் 5 மில்லியன் டொலர்களை நட்டஈடாக அவருக்குக் கொடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சி தொடர் ஒன்றில் நடித்து வந்த நடிகையான இவர் இடைநடுவில் கர்ப்பமானார். அவரது கருவைக் கலைத்துவிட்டு நடிக்க வருமாறு தயாரிப்பாளர்கள் கட்டாயப்படுத்தினர். மறுத்ததினால் அவர் தொடரைவிட்டு தூக்கி எறியப்பட்டு உயர் தொழில்நுட்பம் மற்றும் பிறிதொரு நடிகை என்பன ஊடாக தொடரை தயாரிப்பாளர்கள் தொடர்கின்றனர்.

நடிகை Hunter Tylo இதனை மன்னிக்கத் தயாரில்லை; லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் இதற்காக வழக்குத் தொடுத்தார். தனக்கு ஏற்பட்ட மனோ ரீதி



யான பாதிப்புக்கு 4 மில்லியன் டொலர்களையும் பொருளாதார இழப்புக்கு 894, 601 டொலர்களையும் அவர் நட்டஈடாக பெற்றுள்ளார்.

அவருக்கு எதிராக வாதாடிய தொலைக்காட்சி நிறுவனம், அவர் தன் அழகை இழந்துவிட்டதால் தூக்கி எறியப்பட்டதாக கூறியது. இதற்கு எதிராக குரல் கொடுத்த பெண்கள் அமைப்புக்கள் இது பாரபட்சமான ஆணாதிக்க விடயம் என குற்றம் சாட்டின.

இச்சட்ட வெற்றியை கொண்டாடிய Hunter Tylo 'இது சற்று தாமதமாகிவிட்டது. எனது குடும்ப வாழ்வு, தனிப்பட்ட வாழ்வு என்பவற்றையும் எனது திருமண உறவையும் இது பாதித்துவிட்டது' என குறிப்பிட்டார்.

இதில் வேடிக்கையான விடயம் Hunter Tylo க்கு பதிலாக இத்தொடரில் நடித்த பிறிதொரு பெண்ணான Lisa Rinna தற்போது கர்ப்பிணியாகிவிட்டார். தற்போது கதை திருத்தப்பட்டு கதாபாத்திரம் கர்ப்பிணியாக்கப்பட்டுள்ளது.

# சாதனை படைக்கும் சகோதரிகள்

அக்கா, தங்கைகளான நம்ரிதாவும் சுப்ரீத்தும் இந்தியாவின் விமானப்படையில் பைலட்டுகளாக சேவையாற்றுகின்றனர். இருவரும் ஒரே விமானத்திலேயே பணிபுரிவதுதான் மிகச் சிறப்பானதொன்றாகும். அக்கா பைலட்டும் தங்கை துணைப் பைலட்டுமாக இரு சகோதரிகளின் தைரியத்துடனேயே அதில் எல்லாப் படையினரும் பயணம் செய்கிறார்கள்.



இருவரும் வெவ்வேறு பிரிவுக்கு விண்ணப்பம் செய்த போதும் ஒன்றாகவே வேலை கிடைத்ததால் ஒரே குடும்பத்துப் பெண்களின் கையில் விமானம் மாட்டிக் கொண்டுவிட்டது.

இச் சகோதரிகளின் கூட்டுத் தொழில் மிக வித்தியாசமானது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதே இதன் விசேடமாகும்.

# சொல்லிவை!

அன்பிற்குரிய நண்பியே!
உனது சோகத்தை அறிந்தேன்
உனது பெற்றோரிடம் உள்ள
'சொத்து' என்ற
சதையைக் கொத்துவதற்கு
குறிபார்த்து வட்டமிடும்
'கழுகுகள்'பற்றியும் அறிந்தேன்
பல இலட்சத்துடன்
நகை, வீடு, வயற்காணி....
யாவும் அறிந்தேன்
படிப்புச் செலவையும்
பட்டியலில் சேர்த்துக்கொள்ளும்
பரிதாபத்தையும் அறிந்தேன்

ஆருயிர் நண்பியே
எனக்கோர் உதவி செய்
தூணில் சாய்ந்திருந்து
தூரத்தே வெறிக்கும்
உன் அம்மாவிடம் சொல்லிவை
ஐம்பதாயிரம் போதாதென
அல்லும் பகலும் அலைக்கழியும்
உன் அப்பாவிடமும் சொல்லிவை
சீ....தனம் வேண்டாம் எனும்
'சீரிய மாப்பிள்ளைக்காய்
சீவியத்தில் காத்திருப்பேன்' – என்று

– செல்வி

# ஒரு பெண் படித்தால் அது நாலுபேர் படித்தமாதிரி

## – 'தந்தை பெரியார்'

பெண்களின் முன்னேற்றத்திற்கு கருத்துடன் உழைத்த கண்ணியவான்களில் தந்தை பெரியார் மிக முக்கியமானவர். இவர் ஆரம்பந்தொட்டே பெண்களிற்கு சமூகத்தில் உயர்ந்த இடம் கிடைக்கப் பெறவேண்டும் என்று அயராது உழைத்தவர். இன்று அவர் உயிருடன் இல்லாது போனாலும் அவரின் சொத்துக்கள் யாவுமே பெண்கள் முன்னேற்றத்திற்கே முக்கியமாகச் செலவு செய்யப்படுகின்றன. குறிப்பாக பெண்கள் கல்வித் தரத்தில் முன்னிலையில் திகழ வேண்டி இச் சொத்துக்களை பயன்படுத்தி வருகிறனர்.

இவ் அறக் கட்டளையின் தலைவர் வீரமணி. இதற்காகவே தஞ்சை மாவட்டம் வல்லத்தில் மகளிருக்காக பொறியியல் கல்லூரி, மகளிர் பொலி டெக்னிக், ஐ.டி.ஐ. எனப்படும் தொழில் பயிலகம், சமூகத் தொடர்கல்விக் கல்லூரி, வணிகவியல் பயிற்சி மையம், பெரியார் மணியம்மை மருத்துவமனை, குடும்ப நல மையம் போன்றவற்றை அமைத்துள்ளார்கள். அதைவிட இங்கு கல்வி கற்கும் மகளிர்கள், அதிக அக்கறையுடன் உயர்ந்த தரத்திலே பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

இதனால் இன்று அமெரிக்கா, சிங்கப்பூர், கனடா எனப் பல நாடுகளிலும் இங்கு படித்த பெண்கள் உயர்ந்த பதவிகளை வகிக்கின்றனர். இதைவிட சென்னையில் பெரியார் திடலில் மருத்துவமனை, கணினிப் பயிற்சி நிலையம் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் தேர்வுகளிற்குப் பயிற்சியும், இலவச சட்ட உதவி நிலையங்களும் இயங்கி வருகின்றது. இவையும் குறிப்பாக பெண்கள் நலனையே முக்கியமாக அவதானித்து செயலாற்றுகிறார்கள். சிறந்த பெண் மருத்துவர்கள் மூலம் ஏழைகளிற்கு நிறைந்த பிரவசம், அறுவைச் சிகிச்சை என்பன வெற்றிகரமாக நடை பெறுகிறது.

அதுமட்டுமல்லாது சுயமரியாதைத் திருமண நிலையம் மூலம் பல ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு உதவி செய்யப்படுகிறது. அதைவிட கலப்புத் திருமணத்திற்கு ஆதரவும் வழங்கிக் கொள்கிறார்கள். இது மட்டுமல்லாது திருமணமானாலும் அவர்களின் குடும்பப் பிரச்சினைகளையும் தீர்க்க சட்ட ஆலோசனைகளும் ஆதரவும் எப்போதும் தொடர்ந்து கொண்டே வருகிறது. பெண்கள் நாட்டின் கண்கள் என்ற கூற்று இப் பெரியார் வாயிலாக நிலைநாட்டப்பட்டு வருவது பெண்களாகிய எமக்கு பெரியதொரு மகிழ்ச்சியே. இவர்கள் பணி நீண்டு தொடரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் புயலை தாக்குப்பிடித்து தமிழ் மொழி நிலைத்து நிற்கும்

## - அவ்வை நடராஜன்


**பிரபல தமிழறிஞரும் - தஞ்சை தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான ஔவை நடராஜன் அவர்கள் பாரிஸ் நகரத்துக்கு அண்மையில் வந்திருந்தார். ஈழமுரசு அலுவலகத்தில் எமது வாசகர்களுக்காக அவர் வழங்கிய பேட்டி**

**○ உலகம் வெகுவேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்ற நிலையில், தகவல் தொடர்பு வலைப் பின்னலுக்குள் உலகமே கிராமமாகிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், நம் தமிழ் மொழியால் தாக்குப் பிடித்து நிலைத்து நிற்க முடியும் என்று நினைக்கிறீர்களா?**

■ மொழி என்பதுதான் எங்களுடைய இனத்திற்கு எழுச்சி தருவதாகவும் உணர்வு தருவதாகவும் வடிவு தருவதாகவும் இருக்கின்றது. இதில் எந்த ஐயமும் இல்லை. நாங்கள் அதை எப்பவும் பெருமிதமாய்ச் சொல்வது. தமிழ் என்று சொன்னால் நீங்கள் இயல்பாக நினைப்பது போல நான் ஒரு மொழி என்ற அளவில் நான் அதை நிறுத்துவதில்லை. தமிழ் என்றால் மொழி, தமிழ் என்றால் வாழ்வு, தமிழ் என்றால் மக்கள், தமிழ் என்றால் இனம் என்றெல்லாம் கருதுகின்ற ஒரு மரபை நாம் பழைய நாட்களில் பார்க்க முடிந்தது. உங்களுக்கு ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன். சங்க இலக்கியத்தில் குறிஞ்சிப்பாட்டு என்று ஒன்றுண்டு, அது ஒரு பத்துப்பாட்டு. அந்தக் குறிஞ்சிப்பாட்டை எழுதியவர் கபிலர் என்ற பெரும் புலவர். தமிழ்மக்களுடைய திருமண வாழ்வை திருமண இயல்புகளைக் காட்டுவதற்காக அமைக்கப்பட்ட பாடல் அந்தக் குறிஞ்சிப்பாட்டு. அந்தக் குறிஞ்சிப் பாட்டு பாடி முடித்த பின்னர் அதற்கு ஒரு குறிப்பு எழுதியிருக்கின்றார் கபிலர். என்ன குறிப்பு என்றால், தமிழர்களுடைய காதல் வாழ்வை சொல்லுகின்ற பாடல் இது என்று தான் எழுதி இருக்க வேண்டும். அவர் அப்படி எழுதவில்லை. வேறு ஒரு வேந்தன் வந்து தமிழ் மக்களுடைய காதல் வாழ்க்கையின் இயல்மையை நீங்கள் பாடலாகப் பாடிக் காட்ட முடியுமா? என்று கேட்டதிற்குப் பிறந்தது இந்தப்பாடல் என்று எழுதியிருக்கிறார்.

அதாவது ஆரிய அரசன் பிரகத்தன் என்பானுக்கு தமிழ் அறிவுறுத்தப்பாடியது என்கிறார் கபிலர். பாருங்கள்! தமிழ் என்று சொன்னால் அது மக்களைக் குறிக்கிறது. எனவேதான் தமிழ் என்பதை தமிழ் மக்கள் மொழி என்ற அளவையும் தாண்டி தாங்கள் வழிபடுகின்ற ஒரு பரம் பொருளைப்போல தங்கள் வாழ்க்கையில் ஒன்றாகக்கலந்திருக்கின்ற ஒரு உணர்வு வாய்ந்த வடிவமாகவே கருதுகின்ற ஒரு சிறப்பை எண்ணி எண்ணிப் பெருமிதமடைகின்றோம். எனவே இந்த மொழி நெடுங்காலமான இலக்கியத்தில் தொடர்ந்து கொண்டு வருகின்ற மொழி. வாழ்க்கையில் பல துறைகளில் வளம் சேர்ந்து வருகின்ற மொழி என்று காணும்போது மக்கள் இனம் வாழ்கின்ற வரை மக்கள் இனம் தங்கள் மரபை காத்து வருகின்றவரை எந்த ஒரு மொழியும் சீர் குலைந்து விடும் என்ற கருத்தை நான் ஏற்பதில்லை.

மக்கள் குறைவார்களேயானால் - மக்கள் மொழியைப் பேசுகின்ற மரபு குறையுமானால் நடைமுறை வழக்கில் அந்த மொழி தன்னுடைய வாய்ப்பை இழக்குமானால், அந்த மொழியினுடைய வளம் குறையும். அப்போது மொழி கொஞ்சம் தணியும். இந்தக் கருத்தைத்தான் பாரதியார் சொன்னதாக நண்பர்கள் அர்த்தம் கொண்டார்கள். அவர் சொன்னது என்ன? சொல்லவும் கூடுவது இல்லை. சொல்லும் திறமை தமிழ் மொழிக்கு இல்லை என்று உரைக்கின்றபோது, மெல்லத் தமிழ் இனி சாகும் என்று அந்தப் பேதை உரைத்



தான். இந்த வசை எமக்கு எய்திடலாமோ? இந்த இழிவை நாம் தாங்க முடியாது. ஆகையினால் மேற்கே மெத்த வளர்ந்த அந்த மேன்மைக் கலைகள் தமிழிலில்லை எனவே புத்தம் புதிய தொழில்நுட்பம்கூறும் பஞ்ச பூதத்தின் செய்கைகள் அவ்வளவையும் இங்கே கொண்டுவந்து சேர்ப்பீர் என்று சொன்ன முறையாகத்தான் அதைக் கண்டுகொள்ள வேண்டும்.

**○ நவீன விஞ்ஞானம் வளர்ந்து கொண்டிருக்கின்றது. அதாவது தகவல் தொடர்வலயங்கள் அதாவது (Internet) இன்ரர்நெற் என்று சொல்லப்படுகின்ற புது உலகமே கிராமமாகிக் கொண்டிருக்கின்ற இன்றைய சூழலில் தமிழ் போல அதாவது எந்தவிதமான ஆட்சியதிகாரமோ அல்லது எவ்வகையான அதிகாரமோ அதிகாரக் கட்டமைப்போ இல்லாத மொழி எதிர் நிற்கமுடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?**

■ நல்ல அருமையான கேள்வி கேட்டிருக்கிறீர்கள். நீங்கள் சொல்வதுபோல நான் வந்து அறிவியல் பரப்புவது என்று கூடச் சொல்ல விரும்பவில்லை. அறிவியல் புயல் வீசுகின்றது. எனவே அறிவியல் புயல் வீசும்போது நெடும் மரங்கள் கூட நிமிர்ந்து நிற்குமா? அது தலை சாய்த்துவிடுமே என்று நீங்கள் கருதுகின்ற கவலை தமிழ் மக்களுக்கு வந்துவிட்டது. எனவே அந்தக் கவலையும் ஆர்வமும் கருத்துத்தேடலும் மக்களிடத்தில் நிரம்பி வழிவதனால் ஒரு பெருமை. எனக்கு மகிழ்ச்சியைத் தருவது என்னவென்றால் தமிழ்ப் பல்கலைக்கழகம் என்று தொடங்கியபோது இந்திய நாட்டில் வேறு மொழிப் பல்கலைக்கழகங்கள் அவ்வளவு விழுமிய நிலையில் இல்லை. வடமொழிப் பல்கலைக் கழகங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தன. ஆனால் தமிழ் பல்கலைக்கழகம் என்று தொடங்கிய பின்னர் வாழ்வியல் அறிவியல் களஞ்சியம், சொற் களஞ்சியம், இன்றைய தமிழ் அறிவியல், தமிழ் விதிமுறை என்பன எல்லாம் ஆராய்ந்து கூடுதலாக வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் மக்கள் நெஞ்சத்தில் பெருகி வழிவதை நான் மகிழ்ச்சியோடு சொல்ல விரும்புகிறேன். வாய்ப்பில்லை, சொல் வளமில்லை, போதிய நூல்களை நாம் உடனே விற்க முடியவில்லை என்ற இடர்பாடு இருந்தாலும், இந்த அறிவியல் விழிப்புணர்வு என்பது மக்களிடையே பெருகி இருக்கின்றது. தமிழகத்தில் எங்கள் மாநில அரசில்தான், தமிழக வளர்ச்சிப் பண்பாட்டுதுறை என்ற அரசுத் துறையை நாங்கள் உருவாக்க முடிந்

> *மெல்லத் தமிழ் இனி சாகும் என்று அந்தப் பேதை உரைத்தான். இந்த வசை எமக்கு எய்திடலாமோ? இந்த இழிவை நாம் தாங்க முடியாது. ஆகையினால் மேற்கே மெத்த வளர்ந்த அந்த மேன்மைக் கலைகள் தமிழிலில்லை எனவே புத்தம் புதிய தொழில்நுட்பம்கூறும் பஞ்ச பூதத்தின் செய்கைகள் அவ்வளவையும் இங்கே கொண்டுவந்து சேர்ப்பீர் என்று சொன்ன முறையாகத்தான் அதைக் கண்டுகொள்ள வேண்டும்.*

தது. பின்னர்தான் பிற மாநிலங்கள் எல்லாம் கலைபண்பாட்டுத் துறையைப்போல வளர்த்தார்கள். நமக்கொரு மகிழ்ச்சி தருவது என்னவென்றால் இலங்கை நாடு இருக்கின்றது. சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா, மொறீசியஸ், றெயூனியன் என்று பார்த்தால் ஏறத்தாள ஒரு ஆறு நாடுகளில் கிட்டத்தட்ட ஆட்சிமொழி என்ற அளவிற்கு தமிழ் மொழியினுடைய பயன் மிகச் சிறப்பாக இருக்கின்றது. அதில் நான் ஈழத்தை மிகவும் நன்றியோடு சொல்லவேண்டும். அங்கு தமிழருக்கு அரசியல் நெருக்கடிகள் நேர்ந்தாலும் 100 அல்லது 120 ஆண்டுகளுக்கு முன்னரே கூட மருத்துவ உடலியல் நூலை தமிழில் மொழியாக்கம் செய்திருக்கின்றார்கள். அதையெல்லாம் நாம் கற்பனை கூடச் செய்யமுடியவில்லை.

மொழி வளர்ச்சி என்பது மெல்ல மெல்லத் தான் நடக்கும். சொற்கள் பயன்பாட்டிற்கு வருவது மெல்ல மெல்லத்தான் நடக்கும். தமிழக உயர் நிலைப் பள்ளியெல்லாம் ஆங்கில மொழியாக இருந்து தமிழாக மாறிவிட்டது. இப்போது கூடப் பாருங்கள்; தமிழ்நாட்டு இளைஞர்கள் உயர் நிலைப்பள்ளிகளில் தொழில் கல்வியை மிக நன்றாகக் கற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு இன்னும் தமிழில் சொற்கள் வரவில்லையே தவிர கருத்து அவர்கள் நெஞ்சத்தில் பதிந்துவிட்டது. கருத்து நெஞ்சத்தில் பதிந்துவிட்டால், நாளடைவில் சொற்கள் பிறக்கும். எனவே அறிவியல் வளர்ச்சி என்பது மொழிக்கு ஆக்கமுடையதாகவும், மொழியை வளர்க்கும் நோக்கமுடையதாகவும் திகழும் என்று நான் நம்புகிறேன்.

**○ தமிழகத்தில் இன்றைய ஊடகங்கள் அல்லது பத்திரிகைகள் ஆங்கில பெயர்ச்சொற்களை வினைச் சொற்களாகவும், ஆங்கில மூலச் சொற்களையே தமிழ்ச் சொற்களாகவும் மாற்றிக்கொண்டிருக்கும் நிலை. இது வந்து பயனுடையதாக தமிழ் மொழியை விரிவாக்கம் செய்து கொள்வதற்கு உதவுமா? அல்லது தமிழ் மொழி அழிந்து செல்வதற்கு உதவுமா? இதை நாம் தடுக்கும் வகையில் என்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம்?**

■ இதைத் தடுக்க வேண்டும் என்பதற்கு நான் முதல் அணியில் நிற்கிறேன். என் இப்படி விளைந்தது என்பது பற்றித்தான் ஆழ்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். முடியும். பேரறிஞர் அண்ணா அவர்கள் மொழித் திட்டம் என்ற கருத்தை வலியுறுத்தினார். நீங்களே எடுத்துக்கொள்ளுங்களேன். இரு மொழி என்று சொன்னால் இரு விழி என்று கருத்து. இரு விழியின் வலது கண் எது இடது கண் எது என்பது பற்றியெல்லாம் நாம் ஆராய வேண்டியதில்லை. எனவே தமிழ் மொழியை ஆர்வத்தோடு கற்பதுபோலவே ஆங்கிலத்தையும் கற்கவேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது. நீங்கள் நன்றாகச் சொன்னதுபோல, அறிவியல் புயல் வீசுவதால் நாங்கள் நாடுகளுடைய உணவுகள், உடை வாழ்க்கை முறை இவைகளெல்லாம் பெரிய மாற்றம் பெற்றுக்கொண்டு வருகின்றன. நான் சொல்லுவேன் இந்தப் 'பிஸ்ஸா' உணவு எங்கள் பிள்ளைகளுக்கு மிகப் பிடித்த உணவாக மாறி இருக்கின்றது. எனக்குத் தெரிந்து இந்த உணவு ஐந்தாண்டுகளுக்கு முன்பு தமிழக மக்களுக்குத் தெரியாது. இன்று பிஸ்ஸா உணவு எங்கள் தமிழ் நாட்டு இளைஞர்களுக்கு காலை உணவாக மாறி இருக்கின்றது. உணவில் மாறிவிட்டார். உடையில் மாறிவிட்டார். எனக்குத் தெரிந்து என்னுடைய தாய் கோதுமை வாங்கமாட்டார் ஏனென்றால் அது நம்முடைய உணவு இல்லையென்று சொல்லிக்கொண்டிருக்கின்றார் ஒரு நண்பர்.

இதைவிட இன்னும் 20 ஆண்டுகளுக்கு முன்பு அல்லது 60 ஆண்டுகளுக்கு முன்பு என்று சொன்னால் உருளைக்கிழங்கும், தக்காளியும் இது அயல்பொருள் என்று நாம் விலக்கிய காலம் உண்டு. எனவே உணவில் மாற முடிகிறது. உடையில் மாறிவிட்டோம். அது உங்களுக்கு நன்றாகத் தெரிகின்றது. உணவு, உடை, உறவு நெறிகளிலும்கூட மாநிலம் கடந்து திருமணம் செய்துகொள்வதில் நாங்கள் இப்போது அவ்வளவு தூரம் அதற்கு மறுப்புக்காட்டுவதில்லை. நாம் சொல்லக்கூடாது என்னுடைய மகனே அப்படி மறந்திருக்கின்றான்.

எனவே உணவு, உடை, உறையுள் அமைப்பு வாழ்க்கை நெறி இவைகளின் மாற்றத்தைக் காணும் போது மொழியும்கூட இயல்பான மாற்றங்களைப்பெறும். நான் சொல்வதை விழிப்பாகச் சொல்கின்றேன். மொழி சில மாற்றங்களைப் பெறும். அதில் இன்னுமோர் கருத்து "எனது நண்பர் ஒருவர் சொன்னார், உழைப்போடு கூடிய வாழ்க்கையில் அவர்கள் உழைப்புக்குப் பயன்படுகின்ற கருவியை அவர்கள் கையாளும் போது சில சொற்கள் அவர்கள் நெஞ்சத்தில் எளிதாகப் பதியும். இப்போது பாருங்கள். கியர் போடுங்கள் என்ற சொல்லில் இருக்கின்ற சிக்கல் என்னவென்றால், இரண்டு எழுத்து மூன்று எழுத்து அயல் சொற்களை விலக்குவது கடினம், நீண்டசொல்லாய் இருந்தால் நல்லது. அதனால் தான் உண்டு. பேருந்து என்ற சொல் எனக்கு ரொம்பப் பிடித்த சொல் என்றாலும், கார் என்பதை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை.

'மு.வ.' சொல்லுவார் பிள்ளைகளுக்கு பெயர் வைப்பது கூட இரண்டு எழுத்துக்களில் அல்லது மூன்று எழுத்துக்களில் வைக்க வேண்டும் என்று. எனவே சுருக்கத்தை நோக்கச் செய்வது இயல்பு. இந்தச் சுருக்கச்சொல் வடிவம்தான் ஆங்கிலத்தில் நிறைய இப்போது உள்ளது. இதை நான் இதை வரவேற்கின்றேன் என்று எண்ணிவிடாதீர்கள். அதுமட்டுமல்லாமல், தமிழ் மக்களுக்கு இந்த ஆங்கில பழக்க வழக்கங்களினாலும் நடைமுறைகளின் நெருக்கத்தினாலும் எல்லா நிலைகளிலும் இந்தச் சொற்களைக் கலப்பது எளிது. அதுவும் நீங்கள் சொன்னதுபோல இந்த ஊடகங்கள் அவை கூறுபோடுகின்றனவாகவே இருக்கின்றன. இதைக் கொஞ்சம் குறைக்க வேண்டும் என்ற கருத்தில் தமிழக அரசு ரொம்ப விழிப்பாக இருக்கின்றது. இப்போது தமிழ் வளர்ச்சிப்பாட்டுத் துறையைப்பற்றி அமைச்சரே இருந்து யோசித்துக் கொண்டு வருகின்றார். 'பேக்கரி' என்று இருப்பதையெல்லாம் அடுமறை தொழிலகம் என்று பெயர் வையுங்கள். வங்கி வைப்பகம் என்றெல்லாம் சொற்கள் வரும்போது எளிதுதானே.

நான் இப்படி ஆங்கிலத்தைக் கற்று எழுதுகின்றவர்களை பகைவர்கள் என்று சொல்லி என்னுடைய எதிர்ப்பைக் காட்ட வேண்டாம் என்று விரும்புகின்றேன். ஆனால் எங்களுக்கெல்லாம் சினம் வருகின்றபடி நடந்துகொள்கிறீர்கள் என்று நான் தமிழ் நாட்டில் ஒரு கூட்டத்தில் சொல்லியிருக்கின்றேன். ஏனென்றால் நீங்களும் இந்த மொழியை இகழ்வது என்று தொடங்கினால் உங்களுக்கு ஒரு பெரிய அழிவு வரும் என்றுமட்டும் நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். அழிவையும் இழிவையும் இந்த 'ஊடகத்துக்காரர்கள்' அதிகம் அரவணைத்துக் கொள்ள வேண்டாம் என்று ஈழமுரசு சார்பில் அவர்களை வேண்டிக் கொள்ள விரும்புகிறேன்.

- ஈழமுரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு

கதை: 3

# ஒரு இமைப் பொழுது

எல்லாமே ஒரு கண் இமைப்பொழுதினில் நடந்து முடிந்துவிட்டது.

ஒரு நொடி. ஒரு க்ணப்பொழுது. அது நடந்து முடிந்ததைச் செரித்துக்கொள்ளவே சிரமப்பட்டுக் கொண்டிருந்தான் செல்வராசன்.

முற்றத்திற்கு நிழலாகும் - நறுமணம் பரப்பும் வெள்ளை மலர்களாய் புஷ்பிக்கும் - அந்திப்பொழுதின் - காட்சிக்கு இதமாகும் - என்றெல்லாம் எண்ணிக்கொண்டு காட்டுமரம் எடுத்து வந்து அமைத்திருந்த பந்தலில் படர்ந்திருந்த மல்லிகைக்கொடி சின்னாபின்னமாகிச் சிதறுண்டு மண்ணில் அலைந்து கொண்டிருந்தது.

வாசற் புறத்திலிருந்து வரிசையாக நாட்டப்பட்டிருந்த இளைய தென்னை மரங்களின் குரும்பைகள் நாலாபக்கமும் சிதறிப்போய் வட்டுச் சரிந்து ஓலைகள் நிலத்தைத் தடவிச் சோகம் விசாரித்தபடி.

அழகாய் பூத்துக் குலுங்கும் ரோஜாச் செடிகள் வரிசையாக வளர்ந்திருந்த விதம் விதமான குரோட்டன்கள் - கொத்துக் கொத்தாக கண்களுக்கு விருந்தளிக்கும் கனகாம்பரச் செடிகள் - பல நிறங்களில் மலர்ந்து அழகு காட்டும் செவ்வந்திகள் பற்றையாய் படர்ந்து வண்ணம் வண்ணமாய் மலர்கள் பூக்கும் 'எக்ஸ்சோரா'க்கள் அனைத்தும் உருக்குலைந்து கருகிச் சிதைந்தது செத்துப்போய்க் கிடந்தன.


சிறிது சிறிதாக சேமித்து வியர்வைக் குழையலில் கட்டி எழுப்பிய கோட்டை. விருந்தினரை வரவேற்க ஒரு கூடம் - அலுவலக வேலைகளுக்கென தனியறை - விருந்தினர்களைத் தங்க வைக்க கழிப்பறை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக அறை- குழந்தைகள் இருந்து படிக்க - விளையாட பொழுதுபோக்க -என ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஏற்பாடுகள், தொலைக்காட்சி வைக்க - வானொலிப் பெட்டி பொருத்த, ஷோக்கேஸ் வைக்க - சாப்பாடு மேசைபோட - என ஒவ்வொரு விடயத்திற்கும் நிதானமாக திட்டமிட்டு கட்டப்பட்ட கோயில். குசினி - ஒவ்வொரு சின்னத் தேவைக்கும் கவனத்தில் எடுத்து செய்த வசதிகள். இவ்வாறு சீரழிந்து போய்க்கிடக்கும் காட்சியினைக் கண்ட கண்கள் குளமானது. நெஞ்சம் வெந்தது. நாக்கு வரண்டு போனது. கால்கள் சோர்ந்து துவண்டு போனது. அடுத்தது என்ன என்ற நினைவே மறந்து செயலற்றுப் போனதோர் ஸ்தம்பிதமான நிலை. ஆம் ஒரு பெரும் கற்குவியலாய்க் கிடக்கிறது வீடு. இந்த நிஜத்தைத் தெரிந்து கொள்ளவே சிரமப்பட்டான் செல்வராசன்.

சுமார் அரைமணி நேரத்திற்கு முன்பதாக மெல்லியதாக ஒரு இரைச்சல் கேட்கத் தொடங்கியபோதே செல்வராசனின் மகன் தீபன், 'அம்மா! அம்மா பொம்மர் வருது' எனக் குரல் கொடுத்தபடி வீட்டுக்கு வெளியே ஓடி வான வெளியை நோட்டமிடலானான்.

'தூரத்தில் தான் வருகுது. வீட்டுக்க ஒருத்தரும் நிக்காதையுங்கோ' - கத்தினான் தீபன். செல்வராசனும், மனைவி சரளாவும் மட்டுமல்ல அண்டை அயல் வீடுகளில் இருந்தவர்களும் ஓடி வந்தனர்.

'எங்க ...எங்க...என்ன வருகுது?' எனக் கேட்ட குரல்களில் பதற்றம். பொம்மரா? அவ்ரோவா? சீனத்துச் சகடைவிமானமா? அறியும் ஆவல் தொக்கிநின்றது.

'எல்லாரும் இப்படியே கூட்டமாய் நிண்டால் இங்கதான் போடுவான். போங்கோ எல்லோரும் பங்கருக்குள்' கடுமையாய்ச் சீறினார் செல்வராசன். பங்கருக்குள் போக முண்டியடித்தனர் ஒவ்வொருவரும். ஒவ்வொருவராக மட்டுமே இறங்கி உட்செல்லக்கூடிய அந்த நிலவறையானது, நன்கு பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்தது. கற்பாறை நிறைந்த அந்த மண்ணில் ஆறடி ஆழம் அளவுக்கு நிலத்தைக் கிண்டி நான்கு புறமும் சீமெந்தால் பூசி, பனைமரக் குற்றிகளால் மூடி... அதற்கும் மேல் மண் மூடைகள் அடுக்கி, மாமரத்து நிழலில் மறைவாக அமைக்கப்பட்டிருந்தது பதுங்கு குழி. இருபது பேர்வரையில் ஓரளவு வசதியுடன் இருக்கக்கூடிய அந்தப் பதுங்குகுழிக்குள்,சுமார் முப்பத்தைந்து மனித ஜீவன்கள் உயிரையே கைப்பிடிக்குள் அடக்கிக் கொண்டிருப்பது போன்றதான பிரமையுடன், காதையடைக்கும் பேரிரைச்சல் காற்றடித்த திசையெங்கும்.



'வாறான், வாறான், குத்துறான் குத்திக்கொண்டுவருகுது இங்கதான்... வாறான். கெதியாய் போங்கோ.' குரல் கொடுத்தபடி ஓடிவந்தான் பக்கத்துவீட்டு நிமலன்.

'டோம்' என்று மிகப் பயங்கரமான ஒரு சத்தம் அதைத் தொடர்ந்து 'சிலிங்...' 'சிலிங்' என்ற சத்தங்களுடன் ஜன்னல் கண்ணாடிகள் நொருங்கி வீழ்ந்தன. கூரை ஒடுகள் இடம் மாறின. உடைந்த ஓட்டுத்துண்டுகள் சீலிங் சீற்றுக்களை சிதறச் செய்தபடி நிலத்தில் வீழ்ந்தன. எங்கோ மிகச் சமீபமாகத்தான் இந்தக் குண்டு வீழ்ந்திருக்கவேண்டும் என்பதை எழுப்பி ஓய்ந்த அதிர்வின் அலைகள் நிரூபணம் செய்தன. செல்வராசன் மறைந்திருந்த மாமரம் பேயாட்டம் ஆடி ஓய்ந்தது. இனியும் இப்படி நிற்பது சாத்தியப்படாது என்பதை உணர்ந்து பதுங்கு குழிக்குள் தன்னைப் புதைத்துக்கொண்டான்.

புழுக்கம் நிறைந்து வியர்வை நீர் உடம்பால் வழிந்து ஓடியது. காதில் விழும் பேரிரைச்சல்கள் ஈரல் குலைகளைக் கருக வைத்தன. ஆங்காங்கே தீர்க்கப்படும் வேட்டொலிகள் 'டாம்', 'டோம்' என வெடிக்கும் குண்டுகளின் அதிர்வுகள். வீரிட்டு அழும் குழந்தைகளின் அழுகுரல்கள்... அச்சத்தால் நடுங்குவோரின் விசும்பல்கள். இத்தனைக்கும் மத்தியில் 'அடுத்த கணம் என்ன நேருமோ? என்ற பதற்றத்துடன் மனிதர்கள் நிலவறைக்குள்ளே நடுங்கும் நெஞ்சங்கள். எத்தனை நாட்கள்தான் இந்த வாழ்க்கை நீடிக்கும் என்பதுவே செல்வராசனின் சிந்தனையாக இருந்தது. இப்படியே இருந்து ஒவ்வொரு நாளும் அணுவணுவாக செத்துப்பிழைப்பதைக் காட்டிலும் ஒரேயடியாக செத்துத் தொலைந்து விடுவதே மேல் என்ற எண்ணம் ஒரு பொறியாக மேலெழும்பியது. குடும்பம் என்ன ஆகும் என்ற சிந்தனை அதனை மறித்துப் போட்டது, மனைவி - பதின்னான்கு வயதைப் பூர்த்தி செய்யும் மகள் நிர்மலா - பன்னிரண்டாவது வயதை எட்டிப் பிடிக்கும் மகன் தீபன் -இவர்களுக்கு அடுத்ததாக வேந்தன், கங்கா அத்தனை பேரின்வாழ்வும் கேள்விக் குறியாகிவிடுமே என்ற சபலம் மனதைச் சஞ்சலப்படுத்தியது.

யாழ்ப்பாண நகரை அண்டிய பகுதியில் மின்சார உபகரணங்களை விற்பனை செய்யும் கடையொன்றை நடத்திவரும் செல்வராசனின் சுமார் பதினைந்துவருட உழைப்பின் பெறுபேறாக நிமிர்ந்து நிற்பது இந்த ஒரு வீடு. ஆனால் இந்த வீட்டிலும் நிம்மதியாக இருக்க முடியவில்லை. இந்தப் பதுங்கு குழியினுள் கிடந்து சிரமப்பட வேண்டிக்கிடக்கிறதே என்பதை எண்ணியபோது, இனம் புரியாத கோபம் கொப்புளித்தது செல்வராசனுக்கு.

இந்த வீட்டைக் கட்டுவதற்குப் பட்ட சிரமம் நெஞ்சில் நிழலாய் ஆடியது. அத்திவாரம் வெட்ட -கல்லு அறுக்க -நிலை வைக்க- வளைவைக்க என ஒவ்வொரு விடயத்திற்கும் நாள் பார்த்து திரிந்தது -மணல் தேடி - மரம் தேடி -அலைந்த சம்பவங்கள் ஒவ்வொன்றாய் காட்சியில் விரிந்தது. மனம் லயித்து இருந்தது. ஆனால் அவனது மகிழ்ச்சியை நீடிக்கவிடக்கூடாது என்றோ என்னவோ? சகடை விமானத்தின் பேரிரைச்சல்கள் காதைக் கிழித்தது. வெளியே நின்றுகொண்டிருந்த வீட்டின் வளர்ப்பு நாயான 'பைசரும்' கூட மூச்சிரைக்க பங்கருக்குள் ஓடிவந்தது. எந்த ஜீவன்களும் ஈடு கொடுக்க முடியாதபடி அந்தக் கணப் பொழுது வந்துபோனது.

பதுங்கு குழிகூட ஒரு கணம் ஆடி அசைந்தது போலிருந்தது.

'ஐயோ கடவுளே' 'அம்மா தாயே' என்ற கூக்குரல்கள் உச்சக் தொனியில் எழுந்து ஓய்ந்தன. மாமரத்தின் ஓரிரண்டுகிளைகள் கூட முறிந்து காற்றில் பறந்து மிதந்தன. 'சொய்ங்' என்ற ஒருவித விசில் ஒலி பரவி செல் துண்டுகள் சிதறல்களாக எங்கும் வீசப்பட்டது. மிகச் சமீபமாக வந்துவிட்ட 'வை-12' எனப்படும் சீனத்துச் சகடைகாறி உழிழ்ந்த குண்டு ஒன்றினால் செல்வராசனின் வீடு தரைமட்டமாகியது. ஆனால் இப்போது தான் அவனது உணர்வுகள் முளைத்து எழத் தொடங்கின. எனக்கென்று இருந்த இதுவும் இல்லாமல் போயிற்று. இனியும் தாமதிக்க என்ன காரணம்? கேள்விக்கான விடை அவனுக்கு கிடைக்கவில்லை. இந்த மண் எங்களின் சொந்த மண். கட்டடங்களை அழிப்பதனால் இந்த மண்ணின் மீதான எங்களின் பிடிப்பு அறுந்து போடுமா என்ன?

இந்த மண்ணின் எல்லைகளை மீறி எதிரிகள் உட்புகுவதைத் தடுக்காதுவிடின் எங்களுக்கென எதுவும் எஞ்சப் போவதில்லை என்றவாறு எண்ணத் தலைப்பட்டான் செல்வராசன்.

விமான' இரைச்சல்கள் ஓய்ந்து போக, பதுங்குகுழியிலிருந்து வெளிவந்த ஒவ்வொருவர் முகத்திலும் வேட்டைக்கு தப்பிய வெள்ளாட்டின் சாயல் அப்பிக் கிடந்தது. செல்வராசன் நிதானமாகப் பதுங்கு குழியின் வாசலிலேயே குந்தியிருந்தான்.

'ஆளுக்கு ஒரு சோடி உடுப்பாவது எடுக்க வேணும். அதுக்கிடையில் மீண்டும் பொம்பர் வராமல் இருக்கவேணும் ஆண்டவனே' எனப் பிரார்த்தித்தபடி செல்வராசனின் மனைவியும், குழந்தைகளும் அந்தக் கற்குவியலைக் கிளறத் தொடங்கினர்.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தேடியவை

கடைசி இராப்போசனத்தின் கதை உமக்குத் தெரியுமோ? என்று என்னைக் கேட்டு விட்டு கண்களைச் சிமிட்டி உடலினை ஒருமாதிரிக் குலுக்கினார் 'கையார்'.

அட..டா இந்த [அப்] பாவி மனுசன் பண்டிகைக் காலங்களின் கதை தெரியாமல் ஏதாவது உளறி வைக்கப் போகிறாரே என எண்ணிய நான், கடைசி இராப்போசனக் கதைக்கும் நத்தார் பண்டிகைக்கும் சம்பந்தமில்லை. அது உயிர்த்த ஞாயிறு தினத்துடன் சம்பந்தப்பட்டது என எல்லாம் அறிந்தவன்போல பெருமையாக[?] சொல்லி வைத்தேன்.

அது..சரி.. இந்தச் சின்ன விசயம் எனக்குத் தெரியாதாக்கும்... நான் அந்த இராப்போசனக் கதையை சொல்ல வரவில்லை. 'சி' னா லங்காவின் நாடாளுமன்றத்தில் நடந்த இராப்போசனக் கதையினை சொல்ல வந்தேன் என்று இடக்காகச் சொல்லிய கையார் தொடர்ந்தார். 'சி'லங்கா நாடாளுமன்றத்

# செஞ்சோற்று கடன் அட..அட அப்படியா?

தில் ஒவ்வொரு முறையும் வர[வு]ாத செலவுத் திட்ட விவாதக் கூட்டத்தொடர் முடிவடைந்ததுடன் சபைக்கு நாயகமானவரால் சபை உறுப்பினர்களுக்கு ஒரு 'விருந்து' வழங்கப்படுவது வழக்கம். அந்த வகையில் இம் முறையும் அப்படி ஒரு விருந்து வழங்கப்பட்டது. வராத செலவுத் திட்டத்தினால் மக்களுக்கு நன்மை பயக்காவிடினும் இந்த விருந்தில் பாராளுமன்ற படிமாத்தான்களின் வயிறு நிறைந்து விடும்.

அம்மணியாருடைய அரசின் கடைசி இராப்போசன விருந்து இதுதான் என பச்சை அணியாரின் க[ா]ட்சிக்காரர்கள் சாடை மாடையாக விருந்தில் கூறிக்கொண்டார்களாம்.

வராத செலவுத்திட்ட வி[ழல்]...வாதத்தில் வ[ா]ள்... வ[ா]ள் என்று கத்தியதாலும் நீண்ட நாட்கள் தலைநகரில் தங்கியிருந்த களைப்பாலும் பெரும்பாலான உறுப்பினர்கள் விருந்தினை மறந்து தங்கள் தொகுதிகளுக்கு பறந்து விட்டனர். ஆனால் 'தெமிழ் குலுக்கள்' மட்டும் தவறாது கலந்துகொண்டு ஒரு பிடி பிடித்துள்ளனர். பாவம்... சொந்த தொகுதிப் பக்கமாகத்தான் அவர்கள் செல்ல முடியாதே?'

ஐந்து நட்சத்திர உல்லாச விடுதியொன்றில் சுடப்பட்டு பரிமாறப்பட்ட முட்டை அப்பங்களை தெமிழ் குழுவினர் விழுந்து...விழுந்து ஒரு பிடி பிடித்தார்களாம். விருந்து களைகட்டும்போது டக்..டக் தேவானவரின் கட்..சீ..யை சேர்ந்த சகபாடி 'சிவமான தாசன்' பெரிய அம்மணியாரின் கதிரைப்பக்கமாகச் சென்று யாழ்ப்பாணத் தேர்தலில் தமது கட்...சீ..க்கு கொஞ்சம் சலுகைகளை பெரிய மனது பண்ணி வழங்க வேண்டுமென கேட்டு வைக்க, அம்மணியாரோ 'பட்டென'... இது உணவருந்தும் வேளையென திருவாய் மலர்ந்தருளி வைக்க... அதை கேட்டு இவர் அசடு வழிந்தபடி தனது கதிரைக்கு வந்து சேர்ந்தாராம். நல்ல வேளை... நல்லவேளை.. அம்மணியார் ஒரு எலும்புத் துண்டை அவருக்குக் கொடுக்கவில்லை.

இதோ! இன்னொரு விருந்துபற்றிய கொசுறுச் செய்தியையும் படியுங்கள் கண்மணிகாள்! இந்த விருந்து முடிந்த கையோடு எதிர்க்கட்சி அ[ர]ணிலாரும் தாஜ் சமுத்திரா ஐந்து நட்சத்திர விடுதியில் ஒரு விருந்து வைத்திருந்தார். அந்த விருந்திற்கும் தெமிழ் குழுக்கள் வருகை தந்து உண்டுகளித்து மகிழ்ந்து கொண்டிருக்கும்போது, அணில் வீட்டுக் காரர்களோ நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கிறார்கள். பிறகு எமது விருந்திற்கும் வருகிறார்கள். என்ன மனிதர்களப்பா இவர்கள்! என தமக்கிடையே கிசு கிசுத்தும் கொண்டனராம்

சரி... சரி.. அது சரி...இப்போது தெமிழ் குழுக்கள் செஞ்சோற்றுக் கடன் பட்டிருப்பது யாருக்கு? பெரிய அம்மணியாருக்கா? அன்றி அணிலாருக்கா?... கையிலே காசு... வாயிலே தோசை! வாழ்க [அவர்கள்] சனநாயகம் [ஹி..ஹி]!!

★ ★ ★

இக்பால் அத்தாஸ் என்ற பெயரினைக் கேட்டால் சிறீலங்காவின் பரிவாரங்களுக்கும்...பெரிய அம்மணியாரின் அரசியற் குரவர்களுக்கும் பெரி...ய்...ய ஒவ்வாமை வந்துவிடும். உள்ளூர் ஆங்கில ஏடொன்றினில் வாராந்த இராணுவ ஆய்வுக் கட்டுரைகளிலும், வல்லரசான் வீட்டு தொலைக்காட்சி சேவையொன்றில் அவ்வப்போது தலையினையும் காட்டி வருபவர் இக்பால் அத்தாஸ். தற்போது அவரின் தலையினை எடுத்து விடுவதற்கு பரிவார பெரிசுகளின் அதரவுடன் சில முயற்சிகள் நடப்பதான புதினம் மோனை யாருக்குக் கிடைத்துள்ளது.

அண்மையில் பாதுகாப்பு பரிவாரத் தரப்பினால் அவிழ்த்து விடப்பட்ட கட்டுக் க[ா]தையொன்றில் இக்பால் அத்தாசினால் எழுதப்படும் கட்டுரைகள் மூலமாக பலனுள்ள சில விசயங்களை [!?] புலிகள் எடுத்துக்கொள்கின்றார்களென்ற குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டிருந்தது.

கைத்தடி வத்தையரும் வான்படைத் தொள.. பதியும் ஒரு படி மேலே போய் இக்பால் அத்தாஸ் நாட்டின் இராணுவ விடயங்களை வெளிவிடும் ஒரு 'துரோகி' எனவும், புலிகளின் கையாள் எனவும் நாமகரணம் சூட்டினர். தற்போது அத்தாஸ் செல்லுமிடமெங்கும் புலனாகாத்துறையினரும் மோப்பம் பிடித்து வருவதும் பளிச்... பளிச்.

அத்தாசுக்கு ஏன் இந்த நிலை எனக் கேட்கிறீர்களா? கண்மணிகளே! விமானப் படையின் சிட்டுகளெல்லாம் சிறகொடிந்து பொத்...பொத் என கொஞ்சக் காலமாக விழுந்தனவல்லவா? அந்த வேளையில் அத்தாஸ் எழுதிய கட்டுரைகள் பலவற்றில் சிட்டுகளின் கொள்வனவில் ஊ...ழ..ல் பொதிந்திருந்ததாகவும் அதனால்தான் அவை செ[ா]ல்லாமற் கொள்ளாமல் கீழே விழுகின்றன என்பதாகவும் கருத்துக்கள் அடுக்கடுக்காக இடம் பெற்றிருந்தன. இந்தக் கருத்துக்களால் வான்படை தொளபதிக்கு பெரும் உர்..உர்!!

இதுமட்டுமல்ல பல அமைச்சுக்களிலும், 'அ'னாவாதிகளின் பொதுவாழ்விலும் இடம் பெறும் ஊழல் திருவிளையாடல்கள் பலவற்றையும் அத்தாஸ் அவ்வப்போது கட்டுரைகள் மூலம் அம்பலப்படுத்தி வருவதும் அரச குண்டர்களுக்கு உர்..உர் + உர்...உர். எனவேதான் அத்தாசுக்கு 'ஏதாவது' பரிகாரச் சிகிச்சை செய்ய வேண்டுமென துடியோ....துடியெனத் துடிக்கிறார்கள்.

இவர்களின் துடிப்பு தற்போது சர்வதேச ரீதியிலும் எட்டி விட்டதால் பத்திரிகை தணிக்கைக்கு எதிரான சர்வதேச மத்திய நிலையம் பெரிய அம்மணியாருக்கு நேரடியான ஒரு 'கடி'... தத்தை எழுதி கண்டனம் தெரிவித்துள்ளது. இவ்வாறான 'பூச்சாண்டி' விளையாட்டுக்களில் இனிமேல் ஈடுபட வேண்டாமென உங்களது ஆட்களுக்கு உத்தரவிடுங்கள் எனவும் மேற்படியார் அக் 'கடி'...தத்தில் கோரியுள்ளனராம்.

தன்னை பற்றி தற்போது காச்சு மூச்சென கதை அடிபடுவதுபற்றி அத்தாஸ் கூறுவது இதுதான், எனது கட்டுரைகள் மூலமாகவே புலிகள் பல இராணுவ தரவுகளைப் பெற்றுக்கொள்கின்றார்கள் என்று அரசு குற்றஞ்சாட்டுகிறது. அட..டே அரசு அப்படியா நினைக்கிறது. ஆனால் புலிகளிடம் உண்மையிலேயே நல்லதொரு புலனாய்வுத்துறை இருக்கிறதே! அரச புலனாய்வுத்துறையினருக்கு இது தெரியவில்லையோ! எனவும் வினாவுகிறார் அவர்.

★ ★ ★

## முதலாம் நாள் விசாரணை

# 'புரட்சியை தொழிலாகக் கொண்டவன் நான்'

## என தெரிவித்த கார்லோஸ் சார்ள் து ஹோலுக்கு தனது மரியாதையைச் செலுத்தினார்.

பிரெஞ்சு உளவுப் படையான DST அதிகாரிகள் இருவரையும் தனது முன்னாள் கூட்டாளியையும் 1975 ஜூன் 27-ல் சுட்டுக்கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட 'சர்வதேச பயங்கரவாதி' மீதான விசாரணை கடந்த 12.12.97 வெள்ளியன்று பாரிஸ் நீதிமன்றத்தில் ஆரம்பமாகியது.

- 1994 ஓகஸ்ட் 14-ம் திகதி சூடானில் தான் கைது செய்யப்பட்டு பிரான்சுக்குக் கொண்டு வரப்பட்ட விதம் தொடர்பாக கார்லோஸ் கடுமையான எதிர்ப்பை தெரிவித்தார்.

கையில் ஒரு பிளாஸ்டிக் பையுடன் சர்வசாதாரணமாக மெத்ரோவுக்குள் நுழைவதுபோல் குற்றவாளிக் கூண்டினுள் நுழைந்த கால்லோஸ் மெல்ல அமர்ந்தார்.

நீதிபதி குறுக்கிட்டு 'எழுந்திருங்கள்' என்றதும் சீற்றமடைந்தவராக 'ஓம் ஓம்' எனத் தெரிவித்து எழுந்தபடி ஜூரிகளாக நியமிக்கப்படவுள்ள ஆண்களையும் பெண்களையும் கூர்ந்து நோக்கிவிட்டு தன் அடையாளத்தை நீதிபதிமுன் பிரகடனம் செய்தார்.

'என் பெயர் இல்யிச். என் குடும்பப் பெயர் ரமிரேஸ் சஞ்சேஸ். கார்காஸில் நான் பிறந்தேன். எனது தொழில் லெனினிச கோட்பாடுகளின்படி புரட்சி செய்தல். எனது வாழ்விடம் இந்த உலகம். கடைசியாக வசித்தது கால்ட்டூம்' ஜூரிமாரின் பட்டியலை பறித்தெடுத்த கார்லோஸ் சீட்டிழுப்பு முறைப்படி ஜூரிமாரை தானே தெரிவு செய்ய வேண்டும் என கர்ச்சித்தார். தனது வழக்கை தானே நடாத்தும் சட்டத்தரணிபோல் அவர் காணப்பட்டார்.

கார்லோசின் சட்டத்தரணி Coutant - Peyre ஐ அழைத்த நீதிபதி கால்லோசுக்கு உதவும்படி பணித்தார்.

குள்ளமானவராகவும் நரைத்த தலையுடனும் காணப்பட்ட கார்லோஸ் மீண்டும் தலையிட்டு,

'நீதித்துறைதான் நான் வாழ்ந்த சமூகம். நான் இளைஞனாக இருந்தபோது சட்டத்தரணிகளினதும் நீதிபதிகளினதும் குழந்தைகளுடனேயே நான் விளையாடுவேன்' எனத் தெரிவித்தார்.

சபையில் இருந்தோரை நோக்கியபடி தன் மைக்கிரோர்வை எடுத்து தான் பேசுவது எல்லோருக்கும் கேட்கிறதா என கேட்டபடி தன்னை ஒரு 'பிரபல்யமான புரட்சிக்காரன்' எனவும் 'அரசியல் தலைவன்' எனவும் 'ஒரு ராஜதந்திரி' எனவும் சொன்னார்.

மேலும் தொடர்ந்து 'இரத்தம் தோய்ந்த உடலுடன் தான் போராடுவதாகவும்' இஸ்ரேலிய ஆக்கிரமிப்பால் காயமடைந்த பல நூற்றுக் கணக்கான குழந்தைகள், அப்பாவிகளின் காயங்களிலிருந்து வழிந்த இரத்தம் தன் உடலெல்லாம் பரவியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஜெனரல் சார்ள்துஹோலை ஒரு உயர்ந்த மனிதர் எனச் சித்தரித்த கார்லோஸ் தான் ஒரு திருடனல்ல எனவும் ஒரு அரசியல் கைதி எனவும் தொடர்ந்துரைத்தார்.

'காயமடைந்த அப்பாவிகளின் பெயரால் நடாத்தப்படும் இவ்வழக்கு சியோனிசவாதத்தின் வடிவம் என்ச் சித்தரித்த கார்லோஸ், பாலஸ்தீன மக்களின் உன்னதமான போராட்டம் இந்த வழக்கால் மாசுபடுத்தப்படுகிறது' எனத் தெரிவித்தார்.

இவ்வழக்கில் மொசாட் படையின் சதிகளுக்கு பிரெஞ்சு பொலிஸ் உயர் அதிகாரிகள் பலியாகியுள்ளதாக தெரிவித்த கார்லோஸ், இந்த வழக்கில் சட்ட நுணுக்க வெற்றிடத்தில் தான் இருப்பதாகத் தெரிவித்தார்.

14.08.1994-ல் சூடானில் தான் கைது செய்யப்பட்டதும் பிரான்சுக்குக் கொண்டுவரப்பட்டதும் சட்ட ரீதியாக வ்லுவற்றது என்ற விடயத்தை கார்லோஸ் பிரஸ்தாபித்தபோது மேல்முறையீட்டு நீதிமன்றம் இது பற்றி ஏற்கனவே தீர்ப்பு வழங்கிவிட்டது என பிரதம அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

இத் தருணத்தில் தலையிட்ட கார்லோசின் சட்டத்தரணி இசபெல் தனது வாதத்தின்போது 'DST என்ற பிரான்சின் அரசியல் பொலிசார் அப்படித்தான் அவர்களை வர்ணிக்கலாம். கார்லோஸை 'கைது செய்து கார்டூமில் இருந்து கொண்டுவந்து இறக்கும்போது காலை 10 மணி. கைது செய்யும் உத்தரவு 13 மணிக்கே வழங்கப்பட்டிருக்கின்றது. அதிகாலை 3 மணியளவில் இருந்து காலை 10 மணிவரை போதை மருந்து ஏற்றி கார்லோசை மயக்க நிலையில் வைத்தே கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்காக யார் யாருக்கு எவ்வளவு பணம் செலுத்தினார்கள்' எனக் கேள்வி எழுப்பினார்.

'நான் சில தடவைகள் சட்டத்துக்குப் புறம்பான நடைமுறைகளைக் கடைப்பிடித்தேன். சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்மீது அதனைத் திணித்தன' எனத் தெரிவித்த கார்லோஸ்

'எங்கள் எதிரி, மனித குலத்தின் எதிரியான வல்லாதிக்க சக்தியான அமெரிக்காவும் அதன் அடிவருடிகளுமே' எனத் தெரிவித்ததோடு,

'இரண்டாம் உலகப் போரில் யூதர்கள் துன்பப்பட்டார்கள் என்றதன் பேரால் பாலஸ்தீன மக்களின் நிலத்தை அவர்கள் ஆக்கிரமிக்க உரிமையுடையவர்கள் என்கிறார்கள்.'

*(வழக்கு 15.12.97 திங்களுக்கு ஒத்தி வைக்கப்படுகின்றது)*

*(14.12.97 லுமொன்டில் வெளியான விசாரணை அறிக்கையின் சுருக்கம் இது)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு லண்டன் மாநகரில்

# துவாரகா

## Cash & Carry

இல்லை என்பது
இங்கில்லை


N°: 199, The BROADWAY, Southall, Middx.

T.P: 0181 / 813 9126

Pub

தென்னிந்திய
இலங்கை உணவு
வகைகளின்
சொர்க்கம்
Palm Beach

திருமணவிழாக்கள்
மற்றும்
விருந்துபசாரங்களுக்கான
தரமான உணவு
வழங்குநர்கள்.
மக்களின் அங்கீகாரம்
பெற்ற தரமான
உணவகம்



வாரத்தின்
7 நாட்களும்
உங்களின்
சேவைக்காக
மதியம் 12 மணி
முதல்
3 மணி வரை
மாலை
6 மணி முதல்
இரவு
11.30 மணி வரை
திறந்திருக்கும்

# Palm Beach

17 Ealing Road, Wembley,
Middle sex - Hao 4AA.
Tel: 0181 900 8664

Pub

இலண்டனில்
நகைத் தெரிவுகளுக்கு

# ராஜூ பட்னி அன் சன்

## PATTNI HOUSE

58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HAO 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887

Pub

# சங்கர் அன் கோ
# மாபெரும் மலிவு விற்பனை

டிசம்பர் முதலாம் திகதி முதல் ஜனவரி 14 ஆம் திகதி வரை




GRAND SALE



**Tamil, Hindi, Punjabi & Sinhala**

* Films Songs
* Devotional songs
* Classical Vocal & Intruments
* Christian Songs







CDs from.................... .99P
Audio cassetts from. .50P
Video cds from..........£6.00
Videos from...............£1.99

தமிழ், ஹிந்தி, பஞ்சாபி, சிங்களம்
ஆகிய மொழிகளில்

சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள்,
சாஸ்திரிய சங்கீதம்,
– வாய்ப்பாடு
– வாத்தியங்கள்
கிறிஸ்தவப் பாடல்கள்

## SHANKAR & CO

231, NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDLESEX
HAZ SMN
Tel: 0181 - 42 68 960
Fax: 0181 - 86 15 248




ALL SRILANKAN PRODUCTS AT WHOLE SALE PRICES

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் எம்.ஜி.ஆர் அரங்கில் புனர்வாழ்வுக் கலைத் தென்றல்

சென்ற சனிக்கிழமை ஜேர்மனியின் முன்ஸ்ரர் நகரில் புனர்வாழ்வுக் கலைத் தென்றல் நிகழ்ச்சி நடைபெற்றது. 1997-ம் ஆண்டுக்கான அதிஸ்ட இறுதிக் கலைநிகழ்ச்சியான இதில் தமிழர் புனர்வாழ்வுக் கழக ஜேர்மனிக் கிளை நடாத்தும் 1997-ம் ஆண்டுக்கான அதிர்ஸ்ட இலாபச் சீட்டிழுப்பு நடைபெற்றது. அதனை தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மனிப் பணியகத்தின் தென்மாநிலச் செயற்பாட்டாளர் சிறீரவி நடாத்திவைத்தார். பரிசுகளை தமிழர் புனர்வாழ்வுக் கழக ஜேர்மனிப் பொறுப்பாளர் ஆனந்தராஜா வழங்கினார்.

தமிழீழ விடுதலைக்கான ஒத்துழைப்புக்களை மனோபூர்வமாக நல்கி மனிதாபிமானக் காவலராக வாழ்ந்த எம்.ஜி.ஆர் அவர்கள் மறைந்த 10-வது ஆண்டு நிறைவையொட்டி, நிகழ்ச்சி நடந்த மேடைக்கு எம்.ஜி.ஆர் அரங்கம் எனப் பெயரிட்டு அதனுடைய மனிதநேய செயற்பாடுகள் நினைவுகூரப்பட்டன.

விடுதலைக்காக உயிர் கொடுத்த மாவீரருக்கும் சிங்கள இனவாத அரச பயங்கரவாதத்தால் உயிர் நீத்த தமிழ் மக்களுக்காகவும் அமைதி வணக்கம் செலுத்தி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. முன்ஸ்ரர் நகர தமிழாலய நிர்வாகி ராஜகுலம் வரவேற்புரை வழங்கினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிப் பணியக கலைபண்பாட்டுக் கழக நடன ஆசிரியர்களான பவித்திரா செல்வகாந்தன், அற்புதராணி கந்தசாமி ஆகியோரது மாணவர்களான முன்ஸ்ரர் தமிழாலய மாணவர்கள் ஆசிரியையுடன் இணைந்து தமிழீழ இசைநடன வித்தகரான வீரமணி ஐயரின் 'கொடியோரின் கொடுமை' என்ற நாட்டிய நாடகத்தை வழங்கினர். புதிய பிறப்பு என்னும் நடன வடிவம் ஒன்றை அற்புதராணி எழுதி, நடனமாடினார். கண்ணன் இசையமைத்திருந்தார்.

முன்ஸ்ரர் நகரத் தமிழாலய நிர்வாகி ராஜகுலம் எழுதி இயக்கிய 'கற்பூரதீபம்' என்னும் நாடகம் ஒன்றும் மேடையேற்றப்பட்டது.

விடுதலை கானம்பாடி என்னும் சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி 1997-ன் ஒளிப்பேழை வெளியீட்டை பிரச்சாரப்பிரிவின் சிவகணேசன் அவர்கள் செய்ய, றாட்டிங்கன் நகரத் தமிழாலய நிர்வாகி டேவிற்சிங்கோ முதற்பிரதியைப் பெற்றார். புயலடித்த தேசம் என்னும் விடுதலைப்பாடல் ஒலித்தட்டை அமைப்பின் பிறீமன் பிரதிநிதி நாகராஜா வெளியிட முன்ஸ்ரர் நகர தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி நற்குணராஜா முதற் பிரதியைப் பெற்றார். கடலின் ம்டியில், வங்கத்தில் ஒருநாள் ஆகிய இரு ஒலித்தட்டுக்களின் இணைப் பேழையை அமைப்பின் பொன் நகரப் பிரதிநிதி சிவசோதிநாதன் வெளியிட்டுவைக்க கம்பேர்க் நகர பிரதிநிதி யோகேந்திரன் முதற் பிரதியைப் பெற்றார்.

எம்.ஜி.ஆர் அவர்களின் சிறப்பியல்புகளை நினைவுகூர்ந்த தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மனிப் பணியக கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கா.சிவநாதன், எம்.ஜி.ஆர் அவர்கள் நீதிக்காக துணிந்து நின்று தமிழீழ மக்களின் துயர்களைந்தவர், அஞ்சாநெஞ்சோடு விடுதலைப் புலிகளை ஆதரித்து உதவி புரிந்தவர்- அவரை நம்பிய மக்களுக்கு துரோகமிழைக்காத தூய தலைவர். தனது மக்கள் சக்தியையும் அரசியற் சக்தியையும் அழிந்துகொண்டிருக்கும் தமிழீழ மக்களின் விடிவுக்குப் பயன்படுத்தும் உறுதியைக் கொண்டிருந்தவர். சுயநலமற்ற துணிவான மிகப்பெரிய மனிதாபிமானி எனக் குறிப்பிட்டார். நன்றியுரையை தமிழாலய நிர்வாகி அருணகிரிநாதன் வழங்கினார்.

நிகழ்ச்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிப் பணியகம் கலைபண்பாட்டுக் கழக அறிவிப்பாளர்களான வலன்ரையின், ஜேசுதாசன் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

# புகலிட நிகழ்வுகள்

## சார்சல் தமிழ்ச் சங்க 2வது அகவை நிறைவு விழா

சார்சல் தமிழ் சங்கத்தின் 2-வது அகவை நிறைவு விழா எதிர்வரும் 04.01.98 ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் கண்காட்சி, நடனம், மேல்நாட்டு நடனம், சிறுவர் நிகழ்ச்சிகள், இசைக் கச்சேரி, கராத்தே நிகழ்ச்சி, நாடகம் ஆகிய கலைப்படைப்புகள் அரங்கேற்றப்படவுள்ளன.

**விழா நடைபெறும் மண்டபம்:**

**`Forum des Choletts'**
**Ville de Sarcelles**
**4/6 Av 8 Mai 1945**
**95200 Sarcelles.**
**(Bus 249, 368)**

இவ் விழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள் விழா அமைப்பாளர்கள்.

**பிரவேசம் இலவசம்.**

## பிரதிநிதிகளின் கவனத்திற்கு

20.12.1997 திகதி முன்சர் நகரத்தில் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தால் நடாத்தப்பட்ட 1997ம் ஆண்டிற்கான அதிர்ஸ்ட்லாபச்சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு,

**1வது பரிசு: 000636 க.ஆனந்தகுமார், 2வது பரிசு: 000126 இரகுநாதன், 3வது பரிசு: 004408 விக்கினதாசன்.**

மற்றும் 25 ஆறுதல்பரிசுகளின் இலக்கங்கள் 3057, 3840, 4389, 1714, 3667, 4704, 5919, 2877, 5336,5916, 5477, 4801, 3561, 2869, 4355, 4609, 5483, 0333, 5129, 5918, 4510,4310, 0055, 3007, 305.

இவர்களுக்குரிய பரிசைப்பெற்று உரியவர்களிடம் கொடுப்பதுடன் நீங்கள் விற்ற சிட்டைகளுக்குரிய பணத்தை உடனடியாக கீழ் உள்ள வங்கி இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

நன்றி

T.R.O. Konto : 7360217,
BLZ : 31070001, Deutsche Bank
41189 Monchen gladbach

*பொறுப்பாளர்*
*தமிழர் புனர்வாழ்வுக் கழகம்*
*ஜேர்மன் கிளை.*

# மரண அறிவித்தல்

## திரு.மூத்ததம்பி மார்க்கண்டு

(பெரிய கல்லாறு, மட்டக்களப்பு)

**பிறப்பு: 01.12.1912**



**இறப்பு: 24.12.1997**

*திரு. மூத்ததம்பி மார்க்கண்டு அவர்கள் 24.12.97 அன்று சிவபதம் அடைந்துவிட்டார். இவர் முன்னாள் ஊர்த்தலைவரும் கோயில் வண்ணக்கரும் ஆவார்.*

*இவர் திருமதி அருளம்மாவின் அன்புக் கணவரும், இலங்கையில் வசிக்கும் கருணைக்கிருபை, கருணைராஜா, கருணைரெட்னம், நவரட்னராஜா, கோணநாயகம் (ஜேர்மனி), தவராஜா(ஜேர்மனி), சோதிராசா, சதாசிவம் (மொஸ்கோ மருத்துவபீடம்), மூர்த்தி, ஜெயபால், றமணி (கொழும்பு), செல்வி(ஜேர்மனி), புலேந்திரராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும்,*


*மகேஸ்வரி, குணலெட்சுமி, அஞ்சலி, தேவிகாலெட்சுமி (ஆசிரியை), வாணி, சுசிகலா (மருத்துவபீடம்) சறளா ஜெயந்திரம் (ஓமான்), கனகராசா (சாரதி), அன்பழகன் ஆனந்தராஜா (ஜேர்மனி), வில்லியசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயக்கருரை, ஜெயக்கிருபால், (ஜேர்மனி)ஜெயலக்கி, ஜெயக்கிருஸ்ணா, ஜெயச்சந்திரிக்கா, ஜெயதாஸ், ஜெயநிலா, டிலீம், சதீஸ், தனு(ஜேர்மனி) ஆகியோரின் அம்மப்பாவும், தேவதர்சினி மோகனதாஸ் (மொஸ்கோ) மஞ்சு பிறசாந், நிர்மல் நிரோ, புறோமி ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.*

*அன்னாரின் தகனக் கிரிகைகள் பெரிய கல்லாறு இந்து மயானத்தில் 25.12.97 அன்று நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

தகவல்: மகள்- செல்வி, மருமகன்- ஆனந்தன், மகன்- தவராசா (டனன்போர்க், ஜேர்மனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரீசில் மீண்டும் - முகம்



புலம்பெயர் வாழ்வின் அவலங்களைச் சித்தரித்த முகம் திரைப்படம் பாரீசில் மீண்டும் திரையிடப்படவுள்ளது.

புலம் பெயர்ந்த நாடுகளில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களில் பார்த்தவர்கள் பலரது பாராட்டுதல்களையும், பத்திரிகைகளின் விமர்சனங்களையும் பெற்ற இத் திரைப்படம் 11.01.98 ஞாயிறு மாலை 6.00 மணிக்கு 99, Bis Rue St Martin, 75003 Paris என்ற முகவரியில் அமைந்துள்ள Amorc திரையரங்கில் திரையிடப்படவுள்ளது.

# டென்மார்க் மாவீரர் நிகழ்வுகள் - 97

தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் பணிமனையால் மாவீரர்தினம் இம்முறையும் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது. இதில் முதல் நடவடிக்கையாக மாவீரர்தின கரபந்தாட்டப்போட்டி நடாத்தப்பட்டது. மேற்படி போட்டி 01.11.97 சனிக்கிழமை Gjellerup பாடசாலை உள்ளக மைதானத்தில் நடைபெற்றது. இரண்டு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் மொத்தம் 32 கழகங்கள் பங்குபற்றின. இதில் பிரிவு ஒன்றில் 'நீபோ' விளையாட்டுக் கழகம் முதலாவது இடத்தையும், இரண்டாவது இடத்தை 'டென்ராம்' விளையாட்டுக்கழகமும் பெற்றன. பிரிவு இரண்டில் முதலாவது இடத்தை 'டென்ராம்' வி.கவும், இரண்டாவது இடத்தை 'நீபோ'வும் பெற்றன. மாவீரரை மரியாதை செய்யுமுகமாக கொடிவணக்கப்பாடல், விசேட அஞ்சலி சகிதம் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. காலை 09.00 மணி முதல் இரவு 22.00 மணிவரை போட்டிகள் நடைபெற்றன. இறுதியில் பரிசளிப்பு நடைபெற்றது.

மாவீரர்தினம் 22.11.97 சனிக்கிழமையன்று டென்மார்க்கின் தலைநகரான கொப்பன்கேகன் மாவட்டத்தில் 'நிகூபிங்' நகரில் நடாத்தப்பட்டது. 18.30 மணிக்கு கொடிவணக்கப்பாடலுடன் நிகழ்வுகள் ஆரம்பித்தன. பின் மாவீரரின் பெற்றோர் தீபமேற்ற பொதுமக்கள் மாவீரரை விளக்கேற்றி அஞ்சலித்தனர். எழுத்தாளர் அ.பாலமனோகரன் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து கலை பண்பாட்டுப் பொறுப்பாளர் உரை நிகழ்த்தினார். பின்னர் பரதநாட்டியம், சிறுவர் பேச்சுக்கள் என்பன தொடர்ச்சியாக இடம் பெற்றன. பின் குறு நாடகம் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து தமிழீழ இசைக் குழுவினரின் மாவீர கானங்கள் இடம் பெற்றது. இரவு 23.00 மணிக்கு நிகழ்வுகள் நிறைவடைந்தன. மாவீரர் தினத்திற்காக விசேட் மேடையமைப்பு, மாவீரர் துயிலிடம் போன்றன உருவாக்கப்பட்டிருந்தன.

29.11.97 சனிக்கிழமையன்று கோர்ணிங் நகரில் மாவீரர்தினம் கொண்டாடப்பட்டது. மாவீரர் தினத்திற்காக விசேட மாவீரர் துயிலும் இல்லம் ஏற்பாடு செய்யப்பட்டது. இம்முறை மாவீரருக்காக விசேட மலர் அஞ்சலி நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பொதுமக்கள் மலர்க் கொத்துக்களுடன் வரும்படி வேண்டப்பட்டிருந்தனர். அதன்படி மாவீரர் துயிலிடம் பெருந்தொகை மலர்களால் அலங்கரிக்கப்பட்டது. மாவீரர் ஜயந்தனின் தாயார் விளக்கேற்ற பொதுமக்களின் தீப அஞ்சலி இடம் பெற்றது. அதைத்தொடர்ந்து ஜேர்மன் நாட்டு கலை பண்பாட்டுப் பொறுப்பாளர் திரு.க. சிவநாதன் விசேட உரையாற்றினார். தொடர்ந்து நாட்டியத் தொகுப்புக்கள் மூன்றுபிரிவாகவும், நாடளவிய ரீதியில் சிறுவர்களின் பேச்சுக்களும் கவிதா நிகழ்வும் இடம்பெற்றன. பின்பு பண்பாட்டுக்கழகத்தின் 'தேசத்தின் பின் பாசம்' என்ற நாடகமும் அதைத் தொடர்ந்து தமிழீழ இசைக்குழுவினரின் 'மாவீரகானங்களும்' இடம்பெற்றன. நிகழ்வுகள் 22.00 மணிக்கு நிறைவு பெற்றன.

# தமிழீழத் தேசிய மாவீரர்நாள் - 97

## 'மண்ணில் விளையும் முத்துக்களும் எங்களின் கார்த்திகைத் தீபங்களும்'

(ஒஸ்லோ —நோர்வே)

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தமிழனுக்கும் நினைவில் நிற்கும், அந்தப் புனித நாள் தமிழீழத்திலும், உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்களால் உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டு மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நடுநிசிச் சூரியன் உதயமாகும், பனிமலைத்தொடர் தேசத்திலும் அந்த உன்னதமான தேசிய மாவீரர்நாள் கடந்த 29.11.97 சனிமாலை அன்று ஒஸ்லோ மாநகரில் 'Samfunnshuset' என்னும் இடத்தில் இடம் பெற்றது. கடும் குளிராக இருப்பினும் பனி மழையில் நனைந்து மக்கள் வெள்ளம் மண்டபத்தை வந்தடைந்தது. இங்கு நோர்வேயில் முக்கியமாக ஏனைய நிகழ்ச்சிகளில் இருந்து அப்பாற்பட்டு நிற்கும் தமிழ் நிகழ்ச்சிகளில், முதன்மை பெறுவதாக அமைவது மாவீரர்தின நிகழ்வும், சுதந்திர தாக நிகழ்வும் ஆகும். அந்த வகையில் இந்நிகழ்வுகள் உரிய நேரத்திற்கு ஆரம்பமாவதும், ஆரம்பிக்க வேண்டும் என்ற தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரின் கொள்கையும் பலராலும் பாராட்டப்பட்ட ஒன்று.

அதற்கிணங்க அன்றும் உரித்த நேரத்திற்கு சரியாக 6 மணிக்கு மாவீரர்நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

நிகழ்ச்சி நிரல்களின்படி 'மாவீரர் விருத்தம்' எனும் மரியாதை வணக்க நிகழ்வுடன் முதல் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. அந்த மாவீரர் விருத்தம் ஒவ்வொரு தமிழர்களின் விழிகளிலும் கண்ணீர் சுரக்க, அக்கினிக் குஞ்சுகளை தமிழர்கள் தம் நெஞ்சில் நிறுத்தியது. ஒவ்வொரு வருடமும் வழமையாக இவ் விருத்தம் நிகழும்போது மாவீரர் துயிலும் பேழை ஒன்றின் அருகில் எம் மக்கள் மெழுகுவர்த்திகள் கையில் ஏந்தி நிரை நிரையாகச் சென்று அந்தச் சந்தனப் பேழைகளுக்கு அஞ்சலி செலுத்துவார்கள். ஆனால் இந்த முறை சற்று வித்தியாசமாக அஞ்சலி செலுத்தப்பட்டும், அத்தோடு தமிழீழத்தில் மாவீரர்தினத்தில் நடைபெறுவது போன்றும் இங்கும் நடைபெற்றது.

அதாவது மாவீரர் விருத்தம் பாடிமுடிவடையும் தறுவாயில், மண்டபத்தில் அமர்ந்திருந்த மக்களும் 'மாவீரர் துயிலும்' இல்லப்பாடல் பாடினார்கள்.

எங்கள் சந்தனப் பேழைகளை தொடர்ந்தும் நினைவில் நிறுத்த அடுத்து நிகழ்ந்தது 'பகை வீழும் பாரடி' எனும் நாட்டிய நிகழ்வு. இந்நாட்டிய நிகழ்வு நல்ல பாடல் வரிகளுடனும், தேன் தமிழிசை கொண்டெழுந்தாலும் பழைய பல்லவிதானே என்ற ஓர் உணர்வு மக்கள் மத்தியில் இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இந்நிகழ்ச்சியில் பங்குபற்றிய பெண் பிள்ளைகள், முதற்கொண்டு நடன ஆசிரியை மற்றும் பாடகர்கள் இந்நிகழ்வைத் தயாரித்தவர்களின் கடின உழைப்புக் கண்களில் தென்பட்டதே ஒளிய அதற்கான பலாபலன்கள் நல்லதாக வந்தமையவில்லை. நாட்டிய நாடகத்திற்காக எடுக்கப்பட்ட கரு நல்லகருவாக இருந்த போதிலும் அது முழுமை பெறவில்லை. கடந்த வருடங்களைப் போல ஒரே நாட்டிய அசைவுகள் முகபாவங்களும்தான் எனப் பலர் காதுகடித்தனர். இருந்த போதிலும் இந்நாட்டி நாடகத்திற்கான மேடை அலங்காரப் பொருட்கள். அதாவது மாவீரர் துயிலும் பேழைகள் அமைக்கப்பட்டிருந்தது ஒரு யதார்த்த உணர்வைக் கொடுத்தது. ஆகவே அந்தக் கலைஞர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.


டென்மார்க் நாட்டில் இருந்து வருகை தந்த க. ஆதவன் அவர்களின் ஆக்கத்தில் அமைந்த கவிதா நிகழ்வு குறிப்பிட்டுச் சொல்லும் படியாக இருந்தது. இதற்கு வழங்கப்பட்ட பின்னணி இசை, மற்றும் ஒளி அமைப்பை குறிப்பிடலாம். இருப்பினும் கவிதைகள் பாடப்பட்ட விதங்களில் பலருக்கு பலவேறுபட்ட கருத்துக்கள் இருப்பதாக என் காதுகளுக்கு எட்டியது. சில இளம் நண்பர்களுடன் இது பற்றிக் கலந்து உரையாடியபோது, தங்களுக்கு சில இடங்களில் கவிதையின் கரு விளங்கவில்லை எனக் கூறியிருந்தார்கள். அதே நேரம் பலதரப்பட்ட மக்களின் கருத்துக்களுக்கு இணங்க மாவீரர் நாளைச் சிறப்புறச் செய்த நிகழ்வில் இது ஒரு முக்கிய பங்கை வகித்திருந்தது எனக் கூறியிருந்தார்கள்.


தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த திரு.பழனியப்பன் கருப்பையா அவர்களின் சிறந்த பேச்சு அமைந்தது.

இதனைத் தொடர்ந்து இடைவேளையும், இடைவேளையின் பின்பு 'சுதந்திர பரணி' எனும் எழுச்சிப்பாடல்களும் காற்றிலே கலந்து, ஒஸ்லோ மாநகரில் வசிக்கும் தமிழீழ மக்களின் காதுகளுக்குள் நுழைந்தன. இந்த நிகழ்ச்சியினை ஒஸ்லோத் தமிழர் கலைபண்பாட்டுக் கழகத்தின் இசைக்குழுவினர் வழங்கியிருந்தனர். இங்கு பாடப்பட்ட சுதந்திரப் பரணிப்பாடல்களில் ஒட்டு மொத்தமாக அனைத்துப் பாடல்களும் அதன் வரிகளும் ஒவ்வொரு தமிழர்கள் நெஞ்சங்களைய்யும் தொட்டிருக்கும் என்பது நிச்சயம். ஆனால் கடந்த சில காலங்களாக இசைக் குழுவின் வளர்ச்சி பற்றிய கேள்விக் குறியை இங்கு காணக் கூடியதாக இருந்தது. இதற்கான காரணம் பல பாடல்களுக்கான இசை வார்த்தியக் கருவிகளின் கோர்ப்பு திறம்பட அமையவில்லை. இந்த இசைக்குழுவின் பரிணாம வளர்ச்சி ஸ்தம்பிதம் அடைந்துவிட்டதா , எனவும் எண்ணத்தோன்றுகிறது.

மாவீரர்நாள் நிகழ்வின் இறுதி நிகழ்ச்சியாக 'தாண்டிக்குளம், பெரியமடு, ஊடறுப்புத் தாக்குதல்' அதாவது வன்னிப்போர்க்கள விபரணம் அகலத் திரையில் திரையிடப்பட்டது. இம் மாவீரர்நாள் நிகழ்வில் 800 க்கும் அதிகமான தமிழ் மக்கள் கலந்து கொண்டு தமிழீழ மண்ணில் விளையும் மாவீர முத்துக்களையும், எங்களின் கார்த்திகைத் தீபங்களையும் நெஞ்சிலே சுமந்து, நிறைவோடும், தமிழீழம் கிடைக்கும் காலம் நெருங்கிவிட்டது என்ற நினைப்போடும் தமது இல்லங்களுக்குத் திரும்பினர்.

*– சிவாவசீகரன்*





# பிரான்ஸ் லியோனில் மாவீரர்நாள் - 97

பிரான்ஸ், லியோன் நகரத்தில் அங்கு வாழும் தமிழ் மக்களால் கடந்த 20.12.97 அன்று மாவீரர்விழா கொண்டாடப்பட்டது. மாவீரர் நினைவு தூபிக்கு ஒவ்வொருவராக எழுந்து வந்து தீபங்கள் ஏற்றி மண்ணுக்காய் மரணித்த மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்திச் சென்றார்கள். நிகழ்ச்சியின் ஆரம்பமாக தேசிய தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் மாவீரர் நாள் செய்தி ஒலிபரப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து லியோன் வாழ் தமிழ் சிறுமிகளின் கும்மி நடனம் இடம்பெற்றது. பின்னர் பாரிசில் இருந்து கலந்து கொண்ட திரு.மாணி. நாகேஸ் அவர்கள் ஈழத் தமிழர்கள் ஏன் போராடுகிறார்கள் என்பது பற்றி அங்கு வருகை தந்திருந்த பாண்டிச்சேரி தமிழ் மக்களுக்கு சிறுவிளக்கமொன்றினை அளித்தார்.

'மாவீரர் கனவுகள்' என்னும் வில்லுப்பாட்டு ஒன்றும் லியோன் வாழ் தமிழ் கலைஞர்களால் மேடையேற்றப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் பாரிசில் இருந்து வருகை தந்திருந்த சார்சல் தமிழ்ச் சோலை மாணவி சர்மிளா சர்வேஸ்வரன் அவர்கள் பரத நாட்டியமாடியதுடன் தமிழீழ எழுச்சிப்பாடல்களுக்கு அபிநயமும் செய்தார். இவரின் நடனங்கள் யாவும் சபையோரை வெகுவாக கவர்ந்திருந்தன.

இம்மாவீரர்நாள் விழாவில் 50ற்கும் மேற்பட்ட பாண்டிச் சேரி தமிழர்கள் ஆவர்வமுடன் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சிகளை திரு ரவி அவர்கள் தொகுத்து வழங்கினார். திரு.மனோகரன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்
CENTRE PARISIEN D' EDUCATION POUR LES TAMOULS

### புதிய பிரெஞ்சு வகுப்பு

**ஆசிரியர்: கஜன்**

காலம்: 03.01.1998 சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 1 மணி

### உயர்தர பிரெஞ்சு வகுப்பு

**ஆசிரியர்: சுரேஸ்**

காலம்: 03.01.1998 சனிக்கிழமை
நேரம்: மாலை 4 மணி

**165, Rue de Charonne,**
**75011 Paris.**
**M°: Alexendre Dumas *ou* Charonne**

Pub

## தை பிறந்தால் வழி பிறக்கும்

**புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தம் பொங்கல்- புதுவருட வைபவங்களிடையே**

இடம்பெயர்ந்து - குடில் இழந்து
உணவுக்கும் - உடைக்கும் அல்லலுறும்
எம் மழலைகளுக்கு வழங்கும்
புத்தாண்டு - பொங்கல்
வாழ்த்துக்களை சேகரிக்கும்

### உண்டியல் - செயல்திட்டம்

**10-01-98 முதல் 18-01-98 வரை**

*உங்கள் வீடுகளில் - உங்கள் தெருக்களில் நீங்கள் சந்திக்கும் எம் புனர்வாழ்வுக் கழக செயற்திட்ட உறுப்பினர்களின் உண்டியல்களை நிரப்பி, அந்த மழலைகளுக்கு உங்கள் பொங்கல் — புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள்.*

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்ஸ்
**26, Rue de Département, 75018 Paris. Tel: 01 40 38 30 74**

Pub

## வெளிவந்துவிட்டது




### எங்கும் கிடைக்கிறது










*Marketed & Distributed by*
**Ayngaran Limited**
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
*E-mail:*
*bhasky@aol.com*

போலி CD [illegible] Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

Pub


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐம்பெருங்காப்பியங்கள்:

## வளையாபதி:

இது ஐம்பெருங்காப்பியங்களுள் நான்காவதாக இடம்பெற்றுள்ள காப்பியமாகும். பிற நூல்களின் துணைகொண்டு இக்காப்பியம் அறிய இயலாத ஒன்றாக உள்ளது. ஆனால், குண்டலகேசியின் வரலாற்றினைப் பிற நூல்களின் துணைகொண்டு ஓரளவு அறிய முடிகிறது. நூலாசிரியர் பெயர் அறிதற்கியலவில்லை. தொல்காப்பிய உரையாசிரியராகிய இளம் பூரணர் தம் உரையில் இவ்வளையாபதிச் செய்யுளை எடுத்துக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால், இந்நூல் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்கு முந்தியதாக இருக்கலாம் எனக் கருத முடிகிறது. புறத்திரட்டு நூலின் முகவுரையிலும் டாக்டர் உ.வே. சாமிநாதையரின் சிலப்பதிகார உரைக் குறிப்பிலும் இந்நூல் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் கவியழகு மிக்க காப்பியமாக விளங்கியது என்பதனைச் சில உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியிருப்பதால் அறிய இயல்கிறது. ஆனால், எவ்வாறு இந்நூல் மறைந்துபட்டது என்பதனை அறியக்கூடவில்லை.

வளையாபதிச் செய்யுட்கள் சில சிலப்பதிகார உரையிலும், யாப்பருங்கலம், தொல்காப்பியச் செய்யுளியல் உரையிலும் புறத்திரட்டிலும் காணக் கிடக்கின்றன. பெரிதும் அறநூல் கருத்தினை மேற்கொண்ட பாடல்களாகவே அச் செய்யுட்கள் விளங்குகின்றன. இந்நூல் சமண சமயச் சார்புடைய நூலாகும். சில அகச் சான்றுகளால் இச்செய்தி உறுதிப்படுகிறது. சிலம்பின் உரையில் இடம்பெறும் 'துக்கம் துளக்கும்' என்னும் செய்யுளாலும் 'உலகம் மூன்றும்' எனத் தொடங்கும் தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் இடம் பெறும் செய்யுளாலும் இச் செய்தி அரண் செய்யப்படுகிறது.

> குண்டலகேசியின் வரலாற்றினைப் பிற நூல்களின் துணைகொண்டு ஓரளவு அறிய முடிகிறது. நூலாசிரியர் பெயர் அறிதற்கியலவில்லை. தொல்காப்பிய உரையாசிரியராகிய இளம் பூரணர் தம் உரையில் இவ்வளையாபதிச் செய்யுளை எடுத்துக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால், இந்நூல் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்கு முந்தியதாக இருக்கலாம் எனக் கருத முடிகிறது.

## குண்டலகேசி:

பௌத்த சமயத்தினை விளக்க எழுந்த விருத்தப்பாவினால் இயன்ற காப்பியமே குண்டலகேசியாகும். இக்காப்பியம் நூல் வடிவில் இன்று கிடைக்கவில்லை. இதன் கண் இக்காலத்தில் வழக்கில் இல்லாத சில சொல்லும், பொருளும் இடம் பெற்றுள்ளதாக அறியமுடிகிறது. குண்டலகேசி என்னும் வணிகப் பெண்ணின் வரலாறு கூறும் நூலாக இக் காப்பியம் அமைந்துள்ளது. இருண்டு, சுருண்டு வளர்ந்த முடியினையுடையவள் ஆதலின் குண்டலகேசி எனப் பெயர் பெற்றாள் எனவும் கூறுவர். இவள் கள்வர் தலைவன் ஒருவனைக் காதலித்து மணந்து அவனோடு வாழ்ந்து வருங்கால் அவனைச் சீற்றங்கொண்டு ஒருசமயம் 'நீ கள்வனல்லனோ' எனக் கடிந்துரைத்த கொடுஞ்சொற்களை எண்ணி இவளைக் கொல்ல ஏற்ற காலம் கருதிக் கொண்டிருந்தான் அக்கள்வர் தலைவனாகிய கயவன். ஒருநாள் 'குண்டலகேசியினை 'மலைவளங்காணச் செல்வோம்' என வஞ்சகமாக நயப்புரை கூறி அழைத்துச்சென்று மலையினின்றும் உருட்டிக் கொன்றுவிடச் சூழ்ச்சி செய்தான். இச் சூழ்ச்சியினை உணர்ந்துகொண்ட குண்டலகேசி 'தற்கொல்லியை முற்கொல்லுக' என்ற முதுமொழிக்கிணங்கத் தானே தன் கணவனை மலைமீதிருந்து உருட்டிக் கொன்றதாயும் பின்னர் பௌத்த பிக்குணியாகித் துறவுக்கோலம் பூண்டு பல சமய வாதிகளோடு வாது போர் செய்தாள் எனவும், பின்னர் ஊழிக்காலப் பெரும் பிரளயம் தோன்றி உலகினை அழித்தது எனவும் வரலாறு கூறும்.

> சூழ்ச்சியினை உணர்ந்து கொண்ட குண்டலகேசி 'தற்கொல்லியை முற்கொல்லுக' என்ற முதுமொழிக்கிணங்கத் தானே தன் கணவனை மலைமீ திருந்து உருட்டிக் கொன்றதாயும் பின்னர் பௌத்த பிக்குணியாகித் துறவுக்கோலம் பூண்டு பல சமயவாதிகளோடு வாது போர் செய்தாள் எனவும் வரலாறு கூறும்.

யாப்பருங்கல உரை, தொல்காப்பிய உரை, வீரசோழிய உரை முதலிய உரைகளிலும் பன்னூல் திரட்டாய் அமைந்த புறத்திரட்டிலும், இக்காவியத்தின் சில செய்யுட்கள் இடம்பெற்றுள்ளன. நீலகேசியின் சில செய்யுட்கள் ஞானப்பிரகாசர் இயற்றிய சிவஞானசித்தியார் பரபக்க உரையிலும் இடம்பெற்றுள்ளன.

பல அருக சமயவாதிகளை வாதில் வென்றாள் எனவும் குண்டலகேசிக்கு மறுப்பாக எழுந்த நூலே அருகசமயச் சிறுகாப்பியமாக விளங்கும் நீலகேசி என்பதும் நினைவு கூர்தற்பாலது. நீலகேசி ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகத் திகழும் நூலாகும்.

(கி.கோ.)

# நாற்று

### இளம் ஆக்கங்கள்

## கருகிய இதயங்கள்

நாளைய ஈழத்து மனிதர்களுக்காய்
புது வானந்தாங்கி சூரியன் உதிக்கும்..
புத்தொளி புதிதாய் இனிக்க
முளை விடும் விடுதலை!

சீனச் சகடையும்
ஏ.கே.47–ம் – எஸ்.எம்.ஜி. யும்
மண்ணுழுது–கொத்தி
பதம் படுத்தியுறங்கும்!

ஈழத்து புது மனிதர்கள்
வான் முட்டும் உயரமாய் வளர்ந்து
கூன் விழுந்து குறுகிய உலகத்து முள்ளெலும்பை
நிமிர்த்திட்டு மலர்வர்!

அவர்கள் நெஞ்சுக்குள் முறிபடும்
நினைவுகளும் இருப்புக்காய் அலைய...
மீண்டும் சிறுத்து
மெலினப்படும் இதயம்!

இருப்பிற்காய் அலையும் பனித்துளிபோல்
இன்று மேதினியெங்கும் மேவி விரியும் ஈழத்தவர்கள்...
நாளைய ஐரோப்பிய சந்தைச் செடிக்கு
செழிப்பிட்டு உரமாய்ப் போவர்...

கருகிய இதயங்களாய் இன்று
ஈழத்தின் வாசல்களை
ஐரோப்பிய தெருமுனைக்கு இழுப்பவர்கள்...
நாளைய நிலை

வேறாய் போகும்!!

ப.வி.சிறீரங்கன்.

★ ★ ★

## நாளெல்லாம் தைப்பொங்கல்

காலைக் கல்லிக்கி
கண்ணீரை நீராக்கி
உயிரை உலையாக்கி
உணர்ச்சிகளால் உலைமூட்டி
தாய் பாலாக்கித் தந்தாள்
தன் குருதி
அதுவோ
பாலாகிப் பொங்க
பொங்கிச் சரிக்கும் நேரம்
புக்காரா வந்த நேரம்
பொங்கலோ பொங்கல்
தமிழ் ஈழத் தமிழர்
நமக்கு
நாளெல்லாம்
பொங்கலோ பொங்கல்

- கொழுநிலவன்


## ஈழமுரசு ஜேர்மனி வாசகர் வட்டத்திற்கான அழைப்பு

**ஈழமுரசுக் குடும்பம் தனது வாசகர்களுக்கான அமைப்பினை ஜேர்மனி நாட்டில் உருவாக்குவதற்கு முடிவு செய்துள்ளதென்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.**

ஈழமுரசின் வாசகர்கள் தங்களுக்கிடையில் ஒரு தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்வதற்கும், ஈழமுரசின் வளர்ச்சியில் பங்கெடுப்பதற்குமாகவே இந்த வாசகர் வட்டம் அமைக்கப்படுகிறது. இந்த வாசகர் வட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு ஆர்வலர்கள் அழைக்கப்படுகின்றீர்கள்.

முழுப்பெயர்: ...............................
முகவரி: ...............................
...............................
தொலைபேசி: ...............................


* எழுத்துத்துறை, இலக்கியம் போன்றவற்றில் ஆர்வமிருப்பின் அதுபற்றிய குறிப்புகளும் ஈழமுரசின் வளர்ச்சிக்கான உங்கள் ஆலோசனை குறிப்புகளும் வரவேற்கப்படுகின்றன.

அலுவலக உபயோகத்திற்கு வாசகர் எண்...........
ஈழமுரசு சந்தாதாரராயின் சந்தா எண் G- .......

நா. கதிர்காமநாதன்
Branden Burger Str-13
40880 Ratingen.
Tel: 02102 475633


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சரவணமுத்து இராஜேந்திரம்**

*(விதானையார் – புங்குடுதீவு)*

**அன்னையின் மடியில்: 16.08.1914**
**இறைவன் அடியில்: 11.12.1996**

அன்பின் திருவுருவாய், அமைதியின் உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய் வாழ்வின் வழிகாட்டியாய்,
குடும்பத்தின் கோபுரமாய் குலத்தின் சுடர் விளக்காய்
பற்றுமிகு கணவனாய்
பாசமிகு தந்தையாய்
பண்புமிகு மாமனாய்
ஆசை மிகுந்த பேரனாய்
அன்பு மிகு உறவினனாய்
பக்தி மிகு அடியானாய்
கொடை மிகு வள்ளலாய்

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி ஓராண்டு ஆகிவிட்டதையா. ஓராண் டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் பிரிவுத்துயர் எம் நெஞ்சைவிட்டு நீங்காதையா. உங்கள் அன்பு முகம் காண ஏங்கித் தவிக்கின்றோம்.

துதியைத் திதியாகிய இன்று 30.12.97
உங்கள் ஆத்மா சாந்திக்காக புங்குடுதீவு
ஸ்ரீ சித்திவிநாயகரை வேண்டி நிற்கும்
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள்*

தகவல்: மனைவி இ.சண்முகபூபதி (பிரான்ஸ்)
தொலைபேசி: 0164261524

Pub

## ஈராண்டு வீர வணக்கம்



தாயின் மடியில்:
03.05.1970

தமிழீழ மண்ணில்:
27.12.1995

**லெப்டினன்ட் துலாஞ்சினி**
**(துலாஞ்சி)**
**துரைராஜா வசந்தகுமாரி (வசந்தி)**
**(யாழ்ப்பாணம் – நீர்வேலி)**

தமிழினத்தின் இன்னல் கண்டு
தணியாத் தாகம் கொண்டு
தரணியில் தமிழனின் தலை விதி போக்கிட
தானைத் தலைவன் படையில் சேர்ந்தாள்

களம் பல கண்டு காவியம் படைத்து
வேங்கைகள் வேள்வியில் வீர நடைபோட்டு
ஈழத்தின் விடிவை நோக்கிச் செல்லும் வேளையில்
தமிழீழம் விடிவதற்குள் இவள்
ஈழ மலராய் மடிந்துவிட்டாள்.

தமிழீழம் மலரும் காலம் தொலை தூரம் இல்லை
மாவீரர்களே! உங்கள் மகத்தான தியாகங்கள்
இன்றும் என்றும் புதிய புதிய வீரர்களை
உருவாக்கி தந்து கொண்டிருக்கும்!!!

இவருடன் வீர மரணம் அடைந்த மாவீரர்கள்
உட்பட அனைத்து மாவீரர்களுக்கும்
எமது வீர வணக்கங்கள்


*அம்மா, சகோதர, சகோதரிகள்*
*அத்தான்மார், மருமக்கள்,*
*நண்பர்கள், நண்பிகள், தோழர்கள், தோழிகள்.*

*தொடர்புகளுக்கு - து. விக்கினேஸ், கோணேஸ், கபில்,*
*தொலைபேசி எண்: 01 64 61 08 83*

Pub

## 2ம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர். அருட்திரு
**கஸ்பார்**
**யோண் லொறட்**
B Th.(Rome)



மலர்வு: 10.10.1966
உதிர்வு: 01.01.1996

**அன்பான பிதாவே இறைவா!**
**உமது ஒரே பேறான திருமகன் யேசுவின்**
**சிலுவை மரணத்தால் எம்மை**
**விடுதலை வாழ்வுக்கு அழைத்தவரே,**
**யேசுவின் உயிர்ப்பிலே எமக்கு**
**நித்திய வாழ்வின் உறுதியான**
**நம்பிக்கையைத் தந்தவரே**
**உம்மை போற்றிப் புகழ்கின்றோம்.**
**எம் மத்தியில் வாழ**
**எம் அன்புப் பணியாளன்**
**அருட்திரு லொறட் அவர்களைத்**
**தந்த தயவிற்கு நன்றி கூறுகின்றோம்.**
**அவர் உம்மில் நித்தியமாய் மகிழ்ந்திருக்க**
**உமது இரக்கம் காட்ட வேண்டுகின்றோம்.**
**உமது திருமகன் யேசுவின்**
**தியாகப் பாதையில் தொடர்ந்து பணியாற்ற**
**இன்னும் பல குருக்களையும்**
**தொண்டர்களையும் தோற்றுவித்து**
**திடப்படுத்திக் காத்தருள வேண்டுகின்றோம்.**
**எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய**
**யேசு கிறிஸ்துவின் பெயராலே! ஆமென்.**

*இவரின் பிரிவால் துயருறும் அன்புத் தாய், சகோதரர்கள்.*

**அன்னாரின் ஆன்ம சாந்திக்காக வருகிற 11.01.1998**
**ஞாயிற்றுக்கிழமை பலேர்மோ (இத்தாலி)யில்**
**திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்**

தகவல் தருபவர்: கஸ்பார் ராஜா (பலேர்மோ, இத்தாலி)
தொலைபேசி இல. 091 6881486

Pub

## மரண அறிவித்தல்

**திருமதி சரஸ்வதி**
**சோமசுந்தரம்**

*(கொக்குவில் கிழக்கு, தமிழீழம்)*

*தமிழீழம் கொக்குவில் கிழக்கு கருவல்லடி வேலனைச் சேர்ந்த சோமசுந்தரம் சரஸ்வதி 23.12.97 அன்று கொக்குவிலில் சிவபதமடைந்தார். அன்னார் காலம் சென்ற திரு.திருமதி துரைராசசிங்கம் தைரியம் அவர்களின் அன்பு மகளும், கந்தையா சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் ஜெயசுந்தரம் (ஜெயா – (ஜேர்மனி), காலம் சென்ற ஜெயபிரகாஸ் (கண்ணன்) ஜெயகௌரி (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும், சசிநாயகம், ராயதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆசித்தன், பிரகாசினி, துசானி, (கனடா) ஆகியோரின் பேத்தியும் ஆவார்.*

அன்னாரின் இறுதிச் சடங்கு 24.12.97 இல் தமிழீழம் கொக்குவிலில் நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: ஜெயசுந்தரம் – ஜெயா (மகன்) ஜேர்மனி
தொடர்புகளுக்கு 05326 -799222

Pub

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 01.02.1964
உதிர்வு: 02.01.1996

**திருமதி பவளமணி தர்மராஜா**

முல்லைத்தீவு தண்ணீர் ஊற்றைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனி கிறீபீல்ட்டை வசிப்பிடமாகவும் கொண்டவர்

*இல்லத்தில் இணைந்தாய் - என்னவளே*
*நல்லறமாய் காத்தாய் - என் கண் இமையே!*
*எங்கள் செல்வமென - இரு மழலைகளை*
*என் கைகளிலே தந்த தாயே தெய்வமே*
*நீ மட்டும் போனதென்ன தனியே*
*எமைப் பிரிந்த - என் உயிரே நீ பிரிந்து சில*
*மாதங்கள் ஆனாலும் -ஆருயிரே*
*உனை இழந்த மாதங்கள்*
*எனை இழந்த பல ஜென்மங்களாய் தோணுதம்மா.*
*உன் நினைவு என் மனதில்*
*ஒளி வீசிடும் கதிராய்!*
*நீ மட்டும் எம் கண்ணில் - பனி மூடிய நிலவாய்!*
*கடைசிவரை துணையென்றே - என் கரம்*
*இணைந்தாய்- இன்றுன்*
*கல்லறைக்கு மலர் கேட்டாய் - நான் பாவம்*
*உன் பிரிவில் நாம் வாழ்தல் - கொடும் பாவம்*
*உனை இழந்த நினைவுடனே வாடி நிற்கும்*

கணவன், பிள்ளைகள், பெற்றோர்,
உடன்பிறப்புகள், உறவினர்கள்.

தகவல்: தருமராஜா (ஜேர்மனி)
தொலைபேசி: 02151/28566

Pub

## 31ம் நாள் நினைவஞ்சலி

**முத்தையா வேதநாயகம்**

*(அரியாலை)*

மண்ணில்: 26.06.1942
விண்ணில்: 29.11.1997

*அன்போடு எம்மை வழி நடாத்தி*
*ஆற்றல் மிகு அறிவு சொல்லி*
*பண்புடனே வாழ்ந்திட்ட*
*சித்தப்பா! காலன் செய்திட்ட*
*சதி கேட்டு கலங்கிப்*
*போனோமே ஒரு கணம்! எங்கள்*
*அன்பு சித்தப்பாவே ஆறாத்துயரில்*
*எம்மை ஆழ்த்திவிட்டு*
*மீளாத்துயில் கொண்டாலும்*
*உங்கள் நினைவு எங்களை*
*விட்டு நீங்காது.*

*குமார், சுரேஷ், சிவா - நோர்வே*
*செந்தில் - இலண்டன்*

*தகவல்: திரு. கி. பிரபாகரன் (பாரிஸ்)*


Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தும் பலதும்

## பொலிசாரின் புகைப்பட விளையாட்டு

அதிகமான வேகத்துடன் கார் ஓட்டும் ஒருவருக்கும் பொலிசாருக்கும் இடையே அண்மையில் ஒரு சுவையான சம்பவம் இங்கிலாந்தில் நடந்தது. இது பற்றி கூறப்படுவதாவது, வீதியோரத்தில் வேகத்தைக் கண்காணிக்கும் பொலிசார் மிக வேகமாகச் சென்ற கார் ஒன்றினை தன்னியக்க கருவி மூலம் புகைப்படம் பிடித்தனர்.




பின்னர் அக்கார் அடையாளம் காணப்பட்டு உரியவருக்கான வேகத்தை மீறியதற்கான தண்டனை அறிவித்தலும் காரின் புகைப்படம், வேகம் மற்றும் அவருக்கான அபராதம் போன்றவை கடிதம் மூலம் கார் உரிமையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதனைப் பார்த்த கார் உரிமையாளர் தானும் அபராதத்திற்கான காசோலை ஒன்றினை எழுதி அதனைப் புகைப்படம் எடுத்து புகைப்படப் பிரதியை பொலிசாருக்கு அனுப்பிவைத்தார். இப் புகைப்படத்தைப் பார்த்த பொலிசாரோ தாமும் சிறிது வேடிக்கையாக கைவிலங்கொன்றினை புகைப்படமெடுத்து அதன் பிரதியை மீண்டும் கார்க்காரருக்கு அனுப்பி வைத்தனர்.

விபரத்தை சரியாகப் புரிந்துகொண்ட கார்க்காரர் பேசாமல் உண்மையான காசோலையையே பொலிசாருக்கு அனுப்பி வைத்துவிட்டார்.

# எரிமலை உச்சியில் ஒரு திருமணம்

திருமணங்களில் எத்தனையோ வகைகள். அவைகள் நடக்கும் இடங்களுமோ பல வகை. சிலர் ஆலயங்களிலும், சிலர் மண்டபங்களிலும், வேறு சிலர் கடற்கரைகளிலும். சில வித்தியாசமானவர்கள் அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும், அண்மையில் ஒரு திருமணம் நீருக்கடியிலும் நடந்திருந்தது. மற்றொரு திருமணம் வான்வெளியில் பறந்துகொண்டிருக்கும் போதும் நடந்ததை நீங்கள் அறிந்ததே. ஆனால் அண்மையில் மிகவும் வேடிக்கையான வித்தியாசமான, ஆனால் ஆபத்தான ஒரு திருமண நிகழ்வு நியூசிலாந்தில் நடந்தேறியது. 1914-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து புகையையும், தீப்பிளம்பையும் கக்கிக்கொண்டிருக்கும் (Whide Island) வெள்ளைத்தீவில் உள்ள எரிமலையில் தமது திருமணத்தை நடாத்த வேண்டும் என ஒரு ஜேர்மனிய தம்பதிகள் விரும்பினார்கள்.

Dominic, Nicole Konzelmann இருவரும் தமது திருமணம் எரிமலை உச்சியிலேயே நடக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். வேறு வழியற்ற நிலையில் நியூசிலாந்து அதிகாரிகள் ஒரு உலங்குவானூர்தியில் தம்பதிகளை ஏற்றி உச்சிக்கு அனுப்பி வைத்தார்கள். சில பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள். பாதிரியார் உச்சிக்குப்போய்ச் சேர்ந்ததும் திருமண நிகழ்வுகள் ஆரம்பமாகின. தொடர்ந்து தீப்பிளம்புகளை வெளியேற்றிக்கொண்டிருக்கும் எரிமலைகூட அன்றைய தினம் மிக அமைதியாகத்தான் இருந்தது. இவர்களது திருமணம் நடப்பதை எப்படியோ அறிந்துகொண்ட ஏராளமான உல்லாசப் பயணிகள் சூழ உள்ள பகுதிகளிலிருந்து நிகழ்வினை கண்டுகழித்தனர். திருமணத்தின்பின் தம்பதிகள் கருத்துக் கூறுகையில் உலகிலேயே மிகவும் ஆபத்தான ஒரு இடத்தில் வித்தியாசமாக தாம் திருமணம் முடித்துக்கொண்டதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும், தம்மால் மட்டுமல்ல உலகம் முழுவதும் உள்ள மக்களால்கூட இதனை மறுக்க முடியாது என்கின்றனர்.



# விமான நிலையத்தை பரபரப்பில் ஆழ்த்திய 'புடிங்'வெடிகுண்டு

கிறிஸ்மஸ் புடிங் விமான நிலையத்தில் பரபரப்பை ஏற்படுத்திய நிகழ்வு கடந்த வாரம் இங்கிலாந்தில் நடந்துள்ளது. மஞ்செஸ்டர் விமான நிலையம் கடந்தவாரம் கிறிஸ்மஸ் விடுமுறைப் பயணிகளால் நிரம்பியிருந்தது. பயணிகள் எல்லோருமே ஏராளமான பொருட்களுடன் தமது உறவினர்களைத் தேடி விமானங்களுக்காகக் காத்திருந்தனர். உள்ளே செல்லும் பயணிகளின் பொதிகளை பரிசீலனை செய்துகொண்டிருந்த பாதுகாப்பதிகாரிகள் திடீரென உசாரடைந்தனர். பொதிகளை அடையாளம்காணும் 'எக்ஸ்ரே ஸ்கானர்கள்' திடீரென எச்சரிக்கை சமிக்ஞைகளை வெளியிட்டன. புடிங் உணவுப்பொதியை அவைகள் வேறுவிதமாக அடையாளம் கண்டதுதான் அவ் எச்சரிக்கைக்கான காரணம். அவைகள் உணவுப்பொருளை வெடிபொருளென அடையாளம் கண்டன. Semtex வெடிமருந்தென அவைகள் அடையாளம் கண்டு சில மணிநேரம் பாதுகாப்பதிகாரிகளை குழப்பத்திற்குள் உள்ளாக்கின. இருந்தும் விமான நிலைய அதிகாரிகள் பலநூற்றுக்கணக்கான புடிங் பொதிகளை வெகு உன்னிப்பாக அவதானித்த பின்னரே விமானத்திற்குள் அனுமதித்தனர்.




# வேடிக்கையான பரிசு

உலகம் முழுவதும் உள்ள யூதர்களுக்கு 'Hanukkah' எட்டு நாட்களும் தமது உறவினர்களுக்கு பரிசில்களை வழங்கும் விசேட தினங்களாகும். இம்முறை இஸ்ரேலில் மிகக் கூடுதலான பரிசுப் பொருட்களாக குறிப்பிட்ட சிலவே கொள்வனவு செய்யப்பட்டன. அவைகளிலும் அரசியல் சார்ந்த அதிலும் மத்திய கிழக்கின் சர்ச்சைக்குரிய இருவரது கேலி முறையிலான இறப்பரினால் செய்யப்பட்ட உருவங்களே மிக அதிகமாக விற்பனையாகின. இஸ்ரேலிய தொலைக்காட்சியில் நடாத்தப்படும் ஒரு அரசியல் கேலி நிகழ்ச்சியின் இரண்டு பாத்திரங்களான இஸ்ரேலியப் பிரதமர் நத்தன்யாகூ, பாலஸ்தீனத் தலைவர் யாசிர் அரபாத் போன்றோர்களது உருவங்களே அவைகள்.

சுமார் பதினொரு அமெரிக்க டொலர்கள் பெறுமதியில் விற்பனை செய்யப்பட்ட இவ்வுருவங்கள் இம்முறை பல இலட்சம் விற்பனையாகியுள்ளன.

தமிழீழத்தில் பிரசித்தி பெற்ற
ரீகல் வீடியோ மூவிஸ்
தமிழ் வீடியோ துறையில் 'கொம்பியூட்டர் எடிட்டிங்' முதல் முறையாக அறிமுகப்படுத்துவோர்.
தொலைபேசி: 06 60 94 75 91 / 01 49 88 93 15
மேலதிக விபரங்களுக்கு:
THAVAM VIDEO CENTER
64, Rue louis Blanc, 75010 Paris. M°: La Chapelle
தொலைபேசி: 01 42 09 35 53
ஹப்பி ரெக்ஸ்
தொலைபேசி:
01 40 05 08 09
REEGAL VIDEO MOVIES
பாரிஸ் மாநகரில் மக்களுக்கு
அரிய சேவையாற்றுகிறது
Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - சிறீலங்கா ஒருநாள் கிரிக்கட் போட்டித் தொடர் சமநிலையில் முடிவு

ஒருநாள் கிரிக்கட் போட்டிகளின் உலக சம்பியன் சிறீலங்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான மூன்று ஒருநாள் போட்டித் தொடரின் முதலாவது போட்டி 22.12.97 அன்று நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறீலங்கா அணியினர், தனது அதிரடி வித்தைகளை காட்டமுடியாது, 45 ஓவர்களில் 9 விக்கட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களையே பெற்றனர். சிறீலங்காவின் இந்த மோசமான நிலைக்கு காரணகர்த்தாவாக விளங்கியவர் தமிழ்நாட்டு வீரரான ரொபின் சிங். இவர் 22 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுக்களை வீழ்த்தி ஆட்ட நாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

பதிலுக்கு ஆடிய இந்திய அணி 37.5 ஓவர்களில் 3 விக்கட்டுக்களை மட்டும் இழந்து தனது இலக்கை அடைந்து வெற்றியைப் பெற்றுக்கொண்டது. இந்திய அணித் தலைவர் சர்ச்சின் டெண்டுல்கர் 86 பந்துகளில் 82 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றது குறிப்பிடத்தக்கது.



அரவிந்த டி சில்வா


சர்ச்சின் டெண்டுல்கர்

26.12.97 நடைபெறவிருந்த இந்திய இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கட் போட்டி மைதான அமைப்புச் சீர்கேட்டால் மூன்று ஓவர்களுடனேயே நிறுத்தப்பட்டது.

மூன்றாவதும் இறுதியுமான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட ஒருநாள் கிரிக்கட் போட்டி கடந்த 28.12.97 அன்று நடைபெற்றது. முதலில் ஆடிய இந்திய அணியின் ஆரம்ப துடுப்பெடுத்தாட்டக்காரர்களான குங்கலி, ஜடஜா (குங்கலி 61, ஜடஜா 51) ஆகியோரின் உறுதியான ஆட்டத்தில் 131 ஓட்டங்களைப் பெற்று நல்ல ஆரம்பத்தைக் கொண்டிருந்தும் 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கட்டுக்கள் இழப்பிற்கு 228 ஓட்டங்களையே பெற்றது. தொடர்ந்து ஆடிய சிறீலங்கா அணி அரவிந்த டி சில்வாவின் ஆட்டமிழக்காது 93 பந்துகளில் பெற்ற 82 ஓட்டங்களை உள்ளடக்கி 48.2 ஓவர்களில் 229 ஓட்டங்களைப் பெற்று போட்டியை வென்றதுடன் போட்டித் தொடரையும் சமப்படுத்திக் கொண்டது.

# விளையாட்டு

## விளையாட்டுச் சம்பாத்தியர்கள்

உலக விளையாட்டு வீரர்களில் சம்பாத்தியத்தில் முன்னணியிலுள்ள 5 வீரர்களின் விபரம் பின்வருமாறு:

| வீரர் | விளையாட்டு | வருமானம் | விளம்பரம் | மொ. வருமானம் |
|---|---|---|---|---|
| ஜோர்டான் | கூடைப்பந்து | 31.3 | 47 | 78.3 |
| ஹொலிபீல்ட் | குத்துச்சண்டை | 53.0 | 1.3 | 54.3 |
| ஹோயா | குத்துச்சண்டை | 37.0 | 1.0 | 38.0 |
| சூமாக்கர் | கார் ஓட்டம் | 25.0 | 10.0 | 35.0 |
| டைசன் | குத்துச்சண்டை | 27.0 | 0.0 | 27.0 |

குறிப்பு: தொகைகள் மில்லியன் அமெரிக்க டொலர்களில் உள்ளன.


## உதைபந்தாட்ட உலகக் கிண்ணம் யாருக்கு?


'நியூயோர்க் டைம்ஸ்' செய்திச் சேவையால் வெளியிடப்பட்ட, உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை கைப்பற்றக்கூடிய சாத்தியக்கூற்றைக் கொண்ட நாடுகளின் பட்டியல்.

பிரேசில் 1/3
பிரான்ஸ் 1/5
இங்கிலாந்து 1/7
ஜேர்மனி 1/7
நெதர்லாந்து 1/7
இத்தாலி 1/8
ஸ்பெயின் 1/12
ஆர்ஜன்டீனா 1/14
யூகோசிலாவியா 1/25
நைஜீரியா 1/25


## 'உலகக் கிண்ணம் 98' போட்டிகள் நடைபெறும் விளையாட்டு அரங்குகள்


LENS
லென்
42,000
இருக்கைகள்


NANTES
நாந்த்
40,000
இருக்கைகள்


BORDEAUX
போர்தோ
36,500
இருக்கைகள்


TOULOUSE
துலூஸ்
37,000
இருக்கைகள்


MONTPELLIER
மொன்பெலியேர்
35,500
இருக்கைகள்

ஏனைய அரங்குகள் அடுத்த வாரம்

## கிரிக்கட்

### பாகிஸ்தான்

1992ம்ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற 5வது உலகக்கிண்ணப் போட்டியின் இறுதியாட்டத்தில் இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் அணி இங்கிலாந்து அணியை தோற்கடித்து வெற்றிவாகை சூடியது. குழுவாக செயற்பட்டு வெற்றி நாட்டுவதில் பாகிஸ்தான் வீரர்கள் வல்லவர்கள். துடுப்பெடுத்தாட்டம், பந்துவீச்சு, பந்துத் தடுப்பு, போன்ற அனைத்துத் துறைகளிலும் பல வீரர்களைத் தோற்றிய நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று.



இந்த வருடம் இந்தியாவின் சுதந்திரதின பொன் விழாவையொட்டி சென்னையில் நடைபெற்ற பாகிஸ்தான் இந்திய அணிகளுக்கிடையிலான சரித்திரப்புகழ் பெற்ற ஆட்டத்தில், பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பெடுத்தாட்ட வீரர் அமிர் சொலியினால் எடுக்கப்பட்ட 194 ஓட்டங்கள், ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டி ஒன்றில் ஒருவரால் எடுக்கப்பட்ட அதிகூடிய ஓட்டங்கள் என்ற உலக சாதனையாகும். இதற்கு முன்னர் 189 ஓட்டங்களை குவித்தவர் மேற்கிந்திய தீவுகளின் வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ். தற்போதைய அணித் தலைவர் வசிம் அக்ரம், ஒருநாள் போட்டிகளில் அதிகூடிய விக்கட்டுக்களைக் கைப்பற்றியவர் என்ற பெருமையைப் பெற்றவராவார். அவருக்கு அடுத்ததாக கூடிய விக்கட்டுக்களை வீழ்த்தியவர் என்ற பெருமையைப் பெற்றவரும் பாகிஸ்தான் அணி வீரரான வாகர் யூனிஸ் ஆவார். அமிர் சொலி, வசிம் அக்ரம், வாகர் யூனிஸ் ஆகியோர் தற்போதைய அணியிலும் இடம்பெறுவதால் அவர்களின் சாதனை இன்னும் நீண்டு செல்வதற்கு இடம் உண்டு.

ஜாவட் மியன்டாட், சயிர் அப்பாஸ், இம்ரான்கான், அப்துல் காதர் ஆகியோர் பாகிஸ்தான் அணியின் தூண்களாகச் செயற்பட்டவர்கள். முன்னாள் அணித் தலைவர் மியன்டாட்டை, அரபு தேச சாஜா மைதானம் எழுதில் மறந்துவிடாது. 1986ம் ஆண்டு 'அஸ்ரல் ஏசியா' கிண்ணத்திற்கான இறுதிப்போட்டியில், ஆட்டத்தின் இறுதிப் பந்தில் 3 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், இந்திய அணியின் பந்து வீச்சாளர் சேட்டன் சர்மாவின் இறுதிப் பந்தை மைதானத்தின் மேற்பரப்பினூடு எல்லைக்கோட்டை தாண்டி அடித்ததால் பெற்ற ஆறு ஓட்டங்களால் மியன்டாட்டின் புகழ் உச்சிக்கே சென்றது. பாகிஸ்தான் சார்பாக டெஸ்ட், மற்றும் ஒருநாள் போட்டிகளில் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றவரும் மியன்டாட்டே.

இந்திய வீரர் கபில்தேவ், இங்கிலாந்து அணியின் இயன் போத்தம் போன்று உலகின் தலைசிறந்த சகலதுறை ஆட்டக்காரனாக இருந்தவர் பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணிதலைவர்களுள் ஒருவரான இம்ரான்கான். இவர் தனது தாயாரின் ஞாபகார்த்தமாக புற்றுநோய் மருத்துவமனை ஒன்றை நிறுவி புகழுடன் வாழ்ந்த போதும், இறுதியாக நடைபெற்ற பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தலில் தனிக் கட்சி ஆரம்பித்து போட்டியிட்டு படுதோல்வியும் அடைந்தார்.

இவரது திருமண வாழ்வும் பல சர்ச்சைகள், குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை பாகிஸ்தான் அணியின் சிறந்த சுழற்பந்து வீச்சாளராக விளங்கியவர் அப்துல் காதர். இவர் 'லெக் ஸ்பின்' முறையை கையாண்டவர். தற்போது பாகிஸ்தான் அணிக்காக பந்து வீசி வெற்றிக்கு வித்திட்டு வருபவர் முஸ்சாட் அகமத்.

கடந்த சில ஆண்டுகளாக, பாகிஸ்தான் அணி சற்றுத் தளர்வுநிலையில் உள்ளபோதும், இறுதியாக நடைபெற்ற மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர் போட்டியை மிக இலகுவாக வெற்றிகொண்டதுடன், சார்ஜா கிண்ணப் போட்டிகளிலும் திறம்பட விளையாடியது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகம் மூலதனம்



## எவ்வளவு பணத்தை உங்களால் செலவிட முடியும் ?

*– கலாநிதி றொபேட் பெஸ்ரர்*

1969-ம் ஆண்டு சில டசின் ஊழியர்களுடன் கலாநிதி றொபேட் பெஸ்ரர் உருவாக்கிய EAIC இன்று 25000 ஊழியர்களுடன் இயங்குகின்றது.

உயர்தொழில்நுட்ப நிறுவனமான இதனது தலைவரும், பிரதான நிர்வாகியும் பெஸ்ரரே ஆவார். ஆனால் அந் நிறுவனத்தில் அவரது உரிமைத்துவம் 1.5 வீதம் ஆகும். மீதியைத் தன் ஊழியர்களுக்கு பிரித்தளித்து அவர்களின் உற்சாகமான உழைப்பையே நிறுவனத்தின் வளர்ச்சிக்காக பெஸ்ரர் பயன்படுத்துகின்றார். ஒரு பௌதீக விஞ்ஞானியான கலாநிதி பெஸ்ரர், உலக செல்வந்தர்களில் வித்தியாசமானவர். எதற்காக உங்கள் நிறுனத்தின் உரிமைத்துவத்தை ஊழியர்களுடன் பகிர்ந்து கொண்டீர்கள் எனக் கேட்டபோது, எவ்வளவு பணத்தைத்தான் மனிதர்களால் செலவிட முடியும்? என இவர் அலுத்துக்கொண்டார்.

தன் தோற்றத்தைப் பற்றிச் சிறிதே கவலைப்படும் பெஸ்ரர் 1955-ல் தான் திருமணம் புரிந்த மனைவியுடன் இன்று வரை வாழ்ந்து வருகின்றார்.

- **1951**- புதிய விஞ்ஞானி பெஸ்ரர் அணுவைப் பிளப்பதற்கான ஆய்வில் ஈடுபட்டார்.
- **1957**- ஜெனரல் அட்டமிங் நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானியானார்.
- **1969**- விஞ்ஞானி பெஸ்ரர் தன் சொந்த நிறுவனத்தை உருவாக்கினார். அரசின் அணுசக்தி மின்சாரம் மற்றும் ஆயுதத் துறையின் திட்டங்களில் பங்கேற்றார்.
- **1974**- தன்னை விஞ்ஞானி என்ற ஸ்தானத்திலிருந்து அமெரிக்க முதலீட்டுத் தரகராகவும் பதிவு செய்தார்.
- **1986**- கலாநிதி பெஸ்ரர் ஊழியர்கள் உரிமை தொடர்பான அமைப்பை நிறுவினார்.
- **1987**- இருபது மில்லியன் டொலர்கள் பெறுமதியான நிறுவனமொன்றை வாங்கி தனது நிறுவனத்துடன் சேர்த்தார்.
- **1995**- உலகின் தகவல் புரட்சியை கவனத்தில் எடுத்து நெற்வேக் சொலுசன் எனும் INTERNET நிறுவனத்தை வாங்கினார்.
- **1996**- உலகின் இரண்டாவது பெரிய பெற்றோலிய நிறுவனத்துடன் இணைந்து அதனது தகவல் தொழில் நுட்ப விருத்திக்கு உரிமையாளரானார்.
- **1997**- தான் 1995-ல் வாங்கிய இன்ரநெற் நிறுவனத்தின் 20 வீதப் பங்கை 50 மடங்கு அதிக விலைக்கு விற்று பிறிதொரு நிறுவனத்தை வாங்கினார்.

## Orangina வை விழுங்கிய கொக்கோ கோலா

5 பில்லியன் பிராங்குகளை கொடுத்து பிரான்சின் Orangina வை கொக்கோ கோலா நிறுவனம் வாங்கி விட்டது. தனது ஐரோப்பிய சந்தை ஆதிக்கத்தை பூரணப்படுத்த முயலும் கொக்கோ கோலாவின் இம் முயற்சி இந் நிறுவனத்தின் பங்குகளை 50 சதத்தினால் பங்குச் சந்தையில் அதிகரித்துள்ளது.

60 நாடுகளில் 52 மில்லியன் பெட்டிகளில் விற்பனையாகும் Orangina, இதில் 80 % ஐரோப்பிய சந்தையைக் கொண்டதாகும்.

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

தமிழீழம் என்பது பௌதீக ரீதியாக உருவாகி வரும் தேசம். அத்தேசம் வெறுமனே தன் எல்லைகளை வரையறை செய்வதுடன் தன் உருவாக்கத்தின் முழுமையைத் தொட்டுவிடாது; பொருளாதார உயர்வே தமிழீழம் என்ற ஈழத் தமிழ் மக்களின் அரசியல் இலட்சியம் பாதுகாக்கப்படத் தேவையான நிபந்தனையாகும். இதனடிப்படையில் போர்க்கால பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்யவும், எதிர்கால தேசத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கெனவும் நிறுவப்பட்டதே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆகும்.

தற்போது ஒட்டுசுட்டான் (முல்லைத்தீவு) பகுதியை தலைமையகமாகக் கொண்டியங்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உலகம் பூராவும் தன் கிளைகளை கொண்டுள்ளது.

தமிழீழத்தின் மரபுசார் விவசாய உற்பத்தி முறைகள், பின் தங்கிய கைத்தொழிற்துறை என்பவற்றை மாற்றி அமைத்து தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் நவீனமயப்படுத்தப்பட்ட உற்பத்தி முறைகளை தன் இயலுமைக்கு உட்பட்டவாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிமுகப்படுத்துகிறது.

உதாரணமாக இன்றைய போர்க்கால சூழ்நிலையில் உணவு ஒரு இன்றியமையாத பிரச்சினையாகும். அரச பயங்கரவாதிகள் தமிழ் பிரதேசங்கள் மீதான உணவு விநியோகத்தைத் தடை செய்கின்றனர். இதனை இன்றைய போர்க்கால சமுதாயம் தன் சுய உற்பத்தி அபிவிருத்தி ஊடாக எதிர்கொள்கிறது. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஏராளமான உற்பத்திகள் இடம்பெறுகின்றன. மக்களை உற்பத்தியில் ஈடுபடுமாறு விடுதலை இயக்கம் தூண்டுகின்றது. இங்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தன் பங்கை திட்டமிடும் துறையூடாக செலுத்துகின்றது.

1. பயிரினத் தேர்வு, பயிர்செய்கைமுறை உரவகைகள் போன்றவற்றில் மரபுரீதியான கருத்துக்களை உடைத்து இன்றைய நவீன உற்பத்தி முறைகளை பயன்படுத்த முனைகின்றனர்.
2. உற்பத்தி செய்யப்படவேண்டிய அளவுகளை தீர்மானித்தல் மூலம் மேலதிகமான உற்பத்தியும் -விரயமும் இல்லாதொழிக்கப்படுகின்றது.

மறுபுறம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தன் நீண்டகால செயற் திட்டங்களை வகுத்துவருகின்றது. இங்கு உட்கட்டுமான திட்டமிடல் என்பது முக்கியமானதொரு பணியாகும்.

பொருளாதார திட்டமிடல் என்பதே இப் பணியின் சரியான சொற்பதமாகும். ஏனெனில் ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படைத் தேவை உட்கட்டுமானம். உட்கட்டுமானம் என்பது போக்குவரத்து, மின்சாரம், நெடுஞ்சாலை, கப்பற்துறைமுகம் என்பன தொட்டு கல்வி மற்றும் தொழில் அறிவுமிக்க மக்கள் என்பன சமூகம் இதற்குள் அடங்கும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தன் எதிர்காலத் திட்டம் பற்றிய அறிக்கையில் மேற்கூறிய உட்கட்டுமான விடயங்கள் தொடர்பான திட்டங்களை வெளியிட்டுள்ளது. மின் உற்பத்தி முறைகளும், நிலையங்களும் இனங்காணப்பட்டுள்ளன. துறைமுகங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்து பற்றிய கருத்துக்கள் வரையப்பட்டுள்ளன.

(தொடரும்) *- ராஜா*

## நாணயமாற்று விகிதம்

| | $ | £ | DM | F Fr | S. Fr |
|---|---|---|---|---|---|
| பிராங்பேட் | 1.77 | 2.97 | – | 0.29 | 1.24 |
| சூரிச் | 1.43 | 2.40 | 0.81 | 0.24 | – |
| பாரிஸ் | 5.93 | 9.92 | 3.35 | – | 4.14 |
| லண்டன் | 0.60 | – | 0.34 | 0.10 | 0.42 |
| நியூயோர்க் | – | 1.68 | 0.56 | 0.17 | 0.69 |
| பம்பாய் | 39.19 | 65.60 | 22.12 | 6.61 | 27.36 |
| கொழும்பு | 61.74 | 103.34 | 34.84 | 10.41 | 43.11 |

### 4.7 பில்லியன் டொலர்களை தாரைவார்க்கும் 660 நிறுவனங்கள்

## கி.பி. 2000ம் ஆண்டை வரவேற்க தயாராகுங்கள்

பாரிசில் ஈஃபிள் கோபுரத்தின் இடைத்தளத்தில் பொருத்தப்பட்ட மின் பலகை எமக்கும் அந்த கி.பி. 2000 ஆண்டு பிறப்பிற்கும் இடையே உள்ள தூரத்தை நாட்களில் கணிப்பிடுகின்றது. வரவேற்புக்காக ஏராளமான மில்லியன் டொலர்கள் செலவில் உலக சமூகம் விழாக்களை ஒழுங்குசெய்கின்றது. ஆனால் அந்த வரவை விரும்பத்தகாத வரவாக கணிக்கிறது தகவல் தொழில்நுட்ப பொருளாதார சமூகம். Millenniun Bomb என்ற விபரிப்புடன் கி.பி. 2000 ஆண்டு கொண்டுவரவுள்ள கணினி கணிப்பீட்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பல பில்லியன்களை கொட்டித் தீர்க்கும் தகவல் தொழில்நுட்ப பொருளாதார சமூகம், ஒரு சுமூகமான பதிலீடு இல்லாவிடின் உலகின் மூலதனவர்த்தக முறை முற்றாக செயலிழக்கும் அளவுக்கு 'பிழைகள்' இடம்பெறும் என அர்த்தமுறுகிறது. ஆயினும் ஐரோப்பாவின் 49% உயர் நிர்வாகிகளே கி.பி- 2000 ஆண்டு பிரச்சினைகளை பூரணமாக அறிந்தவர்கள் ஆவர் என்கிறது ஒரு புதிய கணிப்பு. 56% வர்த்தக நிறுவனங்கள் கி.பி. 2000 ஆண்டிற்கான நிகழ்ச்சிக்கோப்பை தமது தகவல் தொழில்நுட்ப முறைக்குள் புகுத்தியுள்ளனர். 44% புதிய நிகழ்ச்சிக்கோவை நிதி செலவீனத்தை நிறுவனங்கள் வெளியில் இருந்துதான் திரட்டுகின்றன. சாதாரணமாக 6.91 மில்லியன் டொலர்கள் ஒரு நிறுவனத்திற்கான கி.பி. 2000 ஆண்டு மாற்றீடு வெலவீனமாகும்.

1/3 விதமான நிறுவனங்கள் தமது இச் செலவீனம் தொடர்பான கணிப்பை இன்னும் மேற்கொள்ளவில்லை. ஆயினும் மீதி ஐரோப்பிய நிறுவனங்களில் மொத்த செலவீனம் 4.7 பில்லியன் டொலர்கள் ஆகும்.

இதேவேளை நிறுவனங்களின் லிஃப்ட் போன்ற நிரந்தர பாவிப்புக்களின் கணிப்பு Chips ஐ கி.பி. 2000 ஆண்டுக்கு ஏற்றவாறு மாற்றும் செலவீனங்களை பல நிறுவனங்கள் இன்னமும் கவனத்தில் எடுக்கவில்லை.

எனவே கி.பி 2000 ஆண்டு நீங்கள் யுகமாற்றத்தைக் கணக்கில் எடுக்காத நிறுவனங்களின் லிஃப்டில் ஏறி கணிப்பீட்டு பிழையால் இடைநடுவில் அல்லல் படாதீர்கள்!

## அங்கவீன சிறுவர்களுக்கான பொம்மை சந்தை 2 பில்லியன் டொலர்கள்



வர்த்தக உலகம் தன் சந்தைப்படுத்தலையும் அதற்கான ஆய்வையும் வாழ்வின் மூலைமுடுக்கெங்கும் எடுத்துச் செல்கின்றது. அண்மையில் அமெரிக்காவில் சக்கர நாற்காலி பாவிக்கும் ஊனமுற்ற குழந்தை பொம்மை ஒன்று சந்தையின் அவதானிப்பை ஈர்த்தது. சுமார் 6 மில்லியன் அங்கவீனமான அல்லது பாதிக்கப்பட்ட குழந்தைகளை கொண்ட அமெரிக்க சமூகத்தை கணிப்பிட்ட பொம்மை உற்பத்தியாளர்கள், அவர்களை கவரும் பொம்மைகளை சந்தைக்கு விட்டுள்ளனர். இரு வாரங்களில் 25 டொலர் பெறுமதியான 100,000 பொம்மைகள் விற்பனையாகியுள்ளன. இதுபோன்று பார்வை இழந்த குழந்தைகளுக்கான பொம்மைகள் 80,000 விற்பனையாகின்றன.

ராணி மஹால்

இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், பசுமையான மரக்கறிவகைகள், கடல் உணவுவகைகளை நியாயமான விலையிலும், ஹிந்தி, தமிழ், வங்காள, பாகிஸ்தரீன், குஜராத், சிங்கள ஓடியோ, வீடியோ கசட்டுக்களை குறைந்த கட்டண வாடகையிலும் வழங்கி உங்களுக்குச் சேவை செய்யவென காத்திருக்கிறார்கள்!

மலிவு விலையில் புதிய பாடல்கள் அடங்கிய நான்கு CD 100Frs. மட்டுமே!
(இச் சலுகை குறிப்பிட்ட வாரங்களுக்கு மட்டும்)

127, Av. Parmentier, 75011 Paris. - M°: Goncourt
Tel: 0140213167 / Fax: 0143555927 - Bus: 46 / 75

(இங்கு அரச அனுமதிபெற்ற சர்வதேச தொலைத்தொடர்புகளுக்கான தொலைபேசி அட்டைகளும் விற்பனைக்குண்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம் சென்ரர்

மீண்டும் வெளிவந்துவிட்டது




| | |
|---|---|
| இந்தியா | 28 நிமிடம் |
| கனடா | 80 நிமிடம் |
| தாய்லாந்து | 23 நிமிடம் |
| ஹொங்கொங் | 40 நிமிடம் |
| பிரான்ஸ் | 135 நிமிடம் |
| இலங்கை | 26 நிமிடம் |
| சுவிஸ் | 70 நிமிடம் |
| பாகிஸ்தான் | 22 நிமிடம் |
| மொறிசியஸ் | 24 நிமிடம் |
| சிங்கப்பூர் | 45 நிமிடம் |

| | |
|---|---|
| பிரித்தானியா | 100 நிமிடம் |
| அமெரிக்கா | 100 நிமிடம் |
| சீனா | 23 நிமிடம் |
| ஜேர்மனி | 75 நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 30 நிமிடம் |
| அல்ஜீரியா | 50 நிமிடம் |
| மொரோக் | 50 நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | 80 நிமிடம் |

**இலங்கைக்கான தொடர்பு நேரம் 26 நிமிடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது**

தொடர்புகளுக்கு:

**Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14**

## GNANAM
### Telecom Center

195, Rue du Fg. Saint Denis.
75010 Paris, France.
Tel: 01 46 07 09 36
Fax: 01 46 07 00 14
**M°: La Chapelle / Gare du Nord**

**AFRICACOM**
13, Rue de Suez,
75018 Paris.
Tel: 01 42 52 32 52
Fax: 01 42 52 34 52
M°: Château Rouge

**ASIACOM**
Rue de Belleville
Tel: 01 40 33 36 72
M°: Concourt

**ASIACOM**
175, Rue de St.Maur,
75011 Paris.
Tel: 01 43 38 22 98
M°: Belleville

**ASIA COM**
83, Rue du Fg. St.Denis
75010 Paris.
M°: Château d'eau

மிக விரைவில் சுவிஸ், லண்டனில்
எமது சேவை தொடர உள்ளது.

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் - சிறீலங்கா, இந்தியாவின் நம்பிக்கையை இழக்க ராஜீவின் இரட்டை வேடமே காரணம்

## வி.பி.சிங்

விடுதலைப் புலிகளினதும், சிறீலங்காவினதும் நம்பிக்கையை இந்திய அரசு இழந்தமைக்கு இலங்கை விவகாரம் தொடர்பாக முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொண்டிருந்த இரட்டை தன்மையான கொள்கையே காரணம் என்று முன்னாள் இந்தியப் பிரதமர் வி.பி.சிங் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அரசியலில் இரட்டைத் தன்மை கடைப்பிடிக்க வேண்டியதுதான். ஆனால் இரட்டைத் தன்மைக்கும் வஞ்சகத்தன்மைக்கும் இடையில் நுட்பமான வித்தியாசமுண்டு. இலங்கை விடயத்திலும் இவ்வாறானதொரு ஏமாற்றுத்தன்மை கையாளப்பட்டமையே அங்கு பிரபாகரனினதும், சிறீலங்காவினதும் நம்பிக்கையை இந்தியா இழக்கக் காரணமாயிருந்தது என்று தெரிவித்துள்ளார்,

# மரண அறிவித்தல்



பிறப்பு: 29.06.74

இறப்பு: 27.12.97

## திருமதி சிரோமி மீரா குமரன்

(குருநகர், தமிழீழம்)

குருநகரை பிறப்பிடமாகவும் Pontault Combault (பிரான்ஸ்) ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிரோமி மீரா குமரன் அவர்கள் 27.12.97 அன்று அகால மரணம் அடைந்துவிட்டார்.

இவர் குமரனின் மனைவியும், திரு.திருமதி கிறேஷ்சியனின் சிரேஸ்ர புத்திரியும், அலிஸ்ரன், யஸ்மி, ஆன்சி ஆகியோரின் சகோதரியும், திரு.சுவக்கீன் சிங்கம், திரு. திருமதி மாரியாம்பிள்ளையின் பேத்தியும், புஸ்பம், மைக்கல் (கனடா), திருமதி ஜெறோம், திருமதி யோசவ் ஆகியோரின் மருமகளும், சின்னக்கிளி, வெண்ணிலா, சின்னப்பிள்ளை,குமார், பிறேமன், டக்ளஸ், ராஜன் ஆகியோரின் பெறாமகளும் ஆவர். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மரண அறிவித்தலை பற்றி மேலதிக தொடர்புகளுக்கு கீழ் குறிப்பிடும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

கிறேஷியன்: 0164411481 / 0148352331

Pub

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாதேவி சங்கரகாந்தலிங்கம்

(வல்வெட்டித்துறை, தமிழீழம்)

தமிழீழம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி கமலாதேவி சங்கரகாந்தலிங்கம் 25.12.97 இல் புதுக்குடியிருப்பில் காலமாகிவிட்டர்.

இவர் சங்கரகாந்தலிங்கத்தின் அன்பு மனைவியும், மாதவன் (ஜேர்மனி), பாஸ்கர் (ஜேர்மனி), உருக்குமணிதேவி, சிவா, குமரன், ரமணி (தமிழீழம்) ஆகியோரின் அன்புத் தாயும், சுரேந்திரதாஸ், நந்தா, செல்வா, ஜெசி ஆகியோரின் மாமியும், திலீபன், பிரியந்தன், பிரியங்கா ஆகியோரின் பேத்தியுமாவார்.

இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: மாதவன் (மகன்) தொலைபேசி: 05521. 5264
பாஸ்கர் (மகன்) தொலைபேசி: 05522. 73595

Pub

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### மாத்தளை....

தமிழர்களும் திருப்பித் தாக்கினர். அந்தவேளையில் அவ்விடத்திற்கு வந்த சிறீலங்காப் பொலிசார் முஸ்லீம்கள் சிலரை தம்முடன் கொண்டுசென்றனர். பின்னர் அவர்களில் ஒருவர் இறந்துவிட்டார். உண்மையில் பொலிசார் தமிழ் - முஸ்லீம் கலவரத்தை தூண்டிவிடுவதற்காக இவரை சித்திரவதை செய்து கொலை செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் தமிழர்களது தாக்குதல்களாலேயே இவர் கொல்லப்பட்டதாக முஸ்லீம் காடையர்கள் கதையைப் பரப்பி களுதாவளைப் பகுதியில் வசிக்கும் தமிழர்கள் மீது தாக்குதல் நடாத்தியதுடன் அவர்களது வீடுகள், வர்த்தக நிறுவனங்களைச் சேதமாக்கி தீவைத்துள்ளனர். சில இடங்களில் பெற்றோல் குண்டுகளும் வீசப்பட்டன. தாக்குதல் நடாத்தியவர்களுள் சிவில் உடையணிந்த சில பொலிசாரும் காணப்பட்டுள்ளனர்.

தற்போது மாத்தளை நகரில் பதற்றம் நிலவிவருகிறது. பொலிசார் அங்கு உத்தியோகப் பற்றற்ற ஊரடங்குச் சட்டத்தினை அமுல் செய்துள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### வெலிகந்தை படைமுகாம்....

ஏற்பட்ட இழப்புகள் அதிகமென மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. தாக்குதல் நடாத்தப்பட்ட தினம் பொலனறுவை-மட்டக்களப்பு வீதியில் ரோந்து செய்த இராணுவ படையணியை வழிமறித்து தாக்குதல் நடாத்தப்பட்டது என பிறிதொரு செய்தி தெரிவித்துள்ளபோதிலும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

மட்டக்களப்பு எல்லைக் கிராமங்களிலிருந்து தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்ட பின்னர் உருவாக்கப்பட்ட சிங்கள குடியேற்ற கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்கவெனவே இந்த இராணுவ முகாம் அமைக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

# அமெரிக்க செனட் சிறீலங்கா செல்கிறது

அமெரிக்க தூதுக் குழு ஒன்று எதிர்வரும் 3-ம் திகதி சிறீலங்கா வரவுள்ளது. அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகார பிரிவு உறுப்பினர்களையும் உள்ளடக்கிய இக் குழுவினரின் விஜயம் கொழும்பு அரசியல் வாதிகளிடையே சலசலப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இத்தூதுக் குழுவினரின் விஜயம்பற்றி அரசியற் கட்சிகள் (தமிழ் குழுக்கள் உட்பட) பலவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் சந்திப்புக்களுக்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. சிறிய அரசியற் கட்சிகளுடனான சந்திப்புக்களின் பின்னர் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினையும் இக் குழுவினர் சந்திக்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை புதிதாக பதவியேற்ற சிறீலங்காவிற்கான அமெரிக்க தூதர் எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்காவை கடந்தவாரம் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

# தேர்தல் பாதுகாப்பிற்காக பிரிகேடியரை சந்தித்த குழுக்கள்

சிறீலங்கா அரசால் நடாத்தப்பட திட்டமிப்பட்டுள்ள யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் பங்கேற்கும் தமிழ் குழுக்கள் தேர்தல் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி சிறீலங்காப் படையணி தளபதியான பிரிகேடியர் ஏ.எஸ் செனிவிரட்னாவை சந்தித்து பேச்சுக்களை நடாத்தியுள்ளனர்.

இச் சந்திப்பில் தேர்தல் தொடர்பாக ஒட்டப்படும் சுவரொட்டிகள் யாவும் இராணுவத்திடம் முதலில் காட்டப்பட்டு அனுமதி பெறப்பட்ட பின்னரே அவை ஒட்டப்பட வேண்டுமெனவும் பிரிகேடியர் உத்தரவிட்டுள்ள்துடன், தமிழ் குழுக்களுக்கிடையில் மோதல் ஏதாவது ஏற்பட்டால் தான் கடும் நடவடிக்கை எடுப்பேன் எனவும் எச்சரித்துள்ளார்.

# பொலிஸ் காவலில் தமிழ் வாலிபர் மர்ம மரணம்

கொழும்பு மகரகம பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார். விசாரணைக்கென பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்ட இவ் இளைஞன், பொலிசாரின் சித்திரவதையினாலேயே மரணமடைந்திருக்கலாம் என பிறிதொரு செய்தி தெரிவிக்கின்றது. இவரது உடலில் துணியொன்றினை பொலிசார் கட்டிவிட்டு இவர் தற்கொலை செய்துகொண்டதாக கூறியுள்ளனர். பலியானவர் கிருஷ்ணபிள்ளை என்ற 25 வயது வாலிபராவார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### மலையகப் பகுதித்....

இங்கு நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களின் சிதைவுகளை ஆராய்ந்து வரும் பொலிசார் இவை விடுதலைப் புலிகளினால் வழமையாக பயன்படுத்தப்படும் வெடி பொருட்களினால் ஏற்படுத்தப்பட்டவையா என்பது பற்றியும் சோதனைகளை செய்து வருகின்றனர்.

இதேவேளை தேயிலைத் தோட்டங்களில் வசிக்கும் தமிழர்கள் மீது கண்காணிப்பினை மேற்கொள்ளும்படி சிறீலங்கா பொலிஸ் தலைமைப்பீடம் மலையக பொலிஸ் பிரிவுகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழினத்தை....

னர்களானதுடன் அதே இரவில் பல இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாகியதும் குறிப்பிடத்தக்கது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### இராணுவ....

அவர்களாலேயே புதைத்து வைக்கப்பட்டிருந்த அமுக்க வெடியே இந்த உயிர்ப் பலியினை எடுத்துள்ளது.

பொ. சாமிநாதன் (52), மாயழகன் (40), ஐ. தனெஞ்சயன்(45) ஆகியோரே உயிரிழந்தவர்களாவார்கள்.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
(மக்கள் கடை முன்பாக)

தமிழ் அச்சகம்

குறைந்த விலை

குறித்த தவணை

சிறந்த தரம்


பன்னெடுங்காலமாய் அனைத்து உள்ளங்களின் நன்மதிப்பைப்பெற்ற தமிழ் அச்சகம் புதிய நிர்வாகத்தில் சிறப்பு விலை கழிவுடன்

திங்கள் முதல் - சனி வரை 10.00 – 20.30 மணிவரை
60, Rue Louis Blanc, 75010 Paris - Tel: 01 42 09 60 64

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

AYNGARAN ENTERPRISES & VIDEO
பசுமையான மரக்கறி வகைகள் மளிகைப் பொருட்கள்
ஐரோப்பிய ரீதியில் தெளிவான, தரமான, ஒரிஜினல்
வீடியோக்களை குறைந்த விலையில் வழங்குபவர்கள்
AYNGARAN VIDEO
80, BURLINGTON ROAD, NEW MALDAN
SURREY, KT3 4NU, ENGLAND
Tel: 0181 - 9421561
Fax: 0181 - 2968778


# பிரபாவுடன் பேசினால் மட்டுமே நிரந்தரத் தீர்வு சாத்தியம்

## றொனி டி மெல்

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தாமல் ஒருபோதும் நாம் இந்த நாட்டில் சமாதானத்தைக்கொண்டு வரமுடியாது. பிரித்தானியப் பிரதமர் றொனி பிளேயர் ஐ.ஆர்.ஏ. இயக்கத் தலைவர் ஜெரி அடம்சுடன் பேச்சுக்களை நடாத்துகிறார். ஏன் ஜனாதிபதி சந்திரிகா, பிரபாகரனுடன் பேச்சுக்களை நடாத்தப் பின்நிற்கிறார்? முன்னர் கூட விடுதலைப் புலிகளுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளும் சரியான முறையில் முன்னெடுக்கப்படவில்லை. அதனால்தான் இன்றைய நிலை எழுந்துள்ளது.

ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் நிதியமைச்சருமான றொனி டி மெல் கலந்துரையாடலொன்றில் தெரிவித்துள்ளார். தீர்வு திட்டத்தின் மூலம் எல்லா அரசியல் நோய்களுக்கு தீர்வுகண்டுவிட முடியாது. சில பிரச்சினைகளுக்கு வேண்டுமானால் தீர்வுகாணலாம். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேசுவதால் மட்டுமே நிரந்தரத் தீர்வு காண முடியும் எனவும் றொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

# மாத்தளை நகரில் கலவரம் 25 தமிழர் கடைகள் தீக்கிரை

மலையகத்தின் மாத்தளை நகரில் தமிழர்களுக்குச் சொந்தமான 25 வர்த்தக நிலையங்கள் முஸ்லீம் காடையர்களால் சூறையாடப்பட்டபின்னர் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. கடந்த சனியன்று இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

முன்னதாக, கடந்த 26-ம் திகதி மாத்தளை நகரிலுள்ள திரையரங்கு ஒன்றில் தமிழ்- முஸ்லீம் குழுக்களிடையே சிறிய வாய்த்தர்க்கமொன்று இடம் பெற்றதையடுத்து சில தமிழ் இளைஞர்கள் முஸ்லீம்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## மலையகப் பகுதித் தாக்குதல்களுக்கு காரணம் புதிய இயக்கமா?

மலையகப் பகுதிகளில் அண்மைக் காலமாக நடாத்தப்படும் பல குண்டுத் தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்கள் விடுதலைப்புலிகளா? அல்லது புதிதாக அப்பகுதியில் தோன்றிய போராட்ட இயக்கமா என்பது பற்றி சிறீலங்கா புலனாய்வுத் துறையினர் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மலையகப் பகுதியில் குறிப்பாக தேயிலைத் தோட்ட பிரதேசங்களில் நடாத்தப்படும் இத் தாக்குதல்களின் விளைவாக தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டு பொருளாதார நெருக்கடியை தோற்றுவிக்கும் முகமாக இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## வெலிகந்த படைமுகாம் மீது மோட்டார் தாக்குதல்

(27.12.97)

பொலநறுவை மாவட்டத்திலுள்ள வெலிகந்த இராணுவ முகாம் மீது இன்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலினால் இரண்டு சிப்பாய்கள் பலியாகி மேலும் மூவர் படுகாயமடைந்தனரென சிறீலங்கா இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

ஆனாலும் படையினருக்கு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# இராணுவ அமுக்கவெடிக்கு மூவர் பலி

(28.11.97)

சிறீலங்கா இராணுவத்தினரால் முன்னர் வேலணையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த அமுக்கவெடியில் மக்கள் பயணம் செய்த உளவு இயந்திரமொன்று சிக்கியதனால் மூன்று பேர் பலியாகியுள்ளனர்.

இன்று மாலை வேலணை முனாங்கு பகுதியூடாக இந்த உழவு இயந்திரம் சென்றபோதே, இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. பலியானவர்களுள் உழவு இயந்திர சாரதியும் அடங்கியுள்ளார். இப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் முன்னர் முகாமிட்டிருந்த வேளையில்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## தமிழினத்தை அழித்தவர்களுக்கு வெற்றிப் பதக்கங்கள்

95-ம் ஆண்டு சிறீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையின் சூத்திரதாரிகளான எழுவருக்கு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவினால் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 23-ம் திகதி நடைபெற்ற விழா ஒன்றில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை, முன்னாள் இராணுவ தளபதி ஜெரி டி சில்வா முன்னாள் கடற்படை தளபதி மொகான் சமரசேகரா, இராணுவ தளபதி தளுவத்தை, கடற்படை தளபதி சிசில் தேசர, வான்படை தளபதி ஒலிவர் ரணசிங்கா, பொலிஸ் மா அதிபர், ராஜகுரு ஆகியோருக்கே இந்த பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சூரியக் கதிர் நடவடிக்கையினால் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் சிறீலங்கா படையினரால் கொல்லப்பட்டு, அங்கவீ

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

'உலகத் தமிழர் வணிகம்'

'உலகத் தமிழ் வணிகம்' என்ற வியாபாரக் கையேடு எதிர்வரும் சித்திரை புதுவருட தினத்தன்று வெளிவருகின்றது.

இதில் உங்கள் வர்த்தக நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், ஆலயங்கள் மற்றும் தமிழ்ச் சமூகத்திற்குத் தேவையான தகவல்கள் வெளிவருவதற்கு, அத் தகவல்களை எமக்கு அறியத் தாருங்கள்.

உலகத் தமிழர் இயக்கம் - கனடா

மேலதிக விபரங்களுக்கு:
ஈழமுரசு - 22, Rue Perdonnet, 75010 Paris.
Tel: 01 40 37 63 63 / Fax: 01 40 37 64 64

ஈழமுரசு பிரித்தானியா

சந்தா விபரம்




தபாற் செலவுடன்:-
52 - வாரங்களுக்கு £60 (520 Frs.)
26 - வாரங்களுக்கு £30 (260 Frs.)

தொடர்புகளுக்கு:
ஜெயந்தன் - 09 56 90 81 45 / குணம் - Tel: 09 56 27 77 18

E.Mail - eelamurasu@aol.com

'ஈழமுரசு உங்கள் பத்திரிகை; நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் ஈழமுரசினை அறிமுகப்படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org